- மூவர் முதலிகளுடன் மாணிக்கவாசகரையும் சேர்த்து சமயக்குரவர்கள் நால்வர் என்றும் சமயாச்சாரிகள் என்றும் சைவம் குறிப்பிடுகின்றது.
- மேலும் சைவ மரபின் நான்கு நெறிகளான சற்புத்திர மார்க்கம், தசமார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் ஆகியவற்றை வாழ்ந்து காட்டியவர்கள் என்றும் சமயக்குரவர்கள் போற்றப்படுகின்றனர்.

-----*******-----*****----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம்**

**பகுதி** : **<u>பட்டினத்தார்</u>**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# பட்டினத்தார்

- விண்ணுலகில் வாழ்ந்த குபேரன் மண்ணுலகில் உள்ள சிவத்தலங்களைத் தரிசிக்க ஆசைக்கொண்டு சிவபெருமானை வேண்டினார்.
- சிவபெருமான் குபேரனை காவிரிபூம்பட்டிணத்தில் வணிகர் குலத்தில் சிவநேசர் ஞானகாம்பிகை ஆகியோருக்கு மகனாகப் செய்தருளினார்.
- பெற்றோர் இவருக்கு திருவெண்காடர் என்று பெயரிட்டு வளர்த்தனர்.
- இவர் சிவபக்தியில், சிறந்தவராயும், வாணிகத் திறமையுடனும் விளங்கினார்.
- சிவகலை என்னும் பெண்னை மணந்து இல்லறம் நடத்தி வந்தார்.
- ஆனாலும் நெடுநாட்களாக குழந்தைப் பேறு இல்லாமல், சிவனிடம் பிரார்த்தனை செய்தார்.
- திருவிடைமருதூரில் வாழ்ந்து வந்த சிவபக்தரான அந்தணர் சிவசருமர் - சுசீலை ஆகிய தம்பதிகள் வறுமை நிலையில் இருந்தனர்.
- சிவபெருமான் அவர்கள் கனவில் தோன்றி மறுநாள் தீர்த்தக்கரையில் மருதமரத்தடியில் தானே குழந்தை வடிவாக இருப்பதாகவும், அக்குழந்தையைப் பட்டினத்தாரிடம் கொடுத்துவிட்டு எடைக்கு எடை பொன் பெற்றுக் கொண்டு வறுமை நீக்கி வாழ்வீராக என்று கூறினார்.
- அத்தம்பதிகளும் அவ்வாறே செய்தனர். குழந்தையாகிய சிவபெருமான் “மருதவாணர்” என்ற பெயரில் பட்டினத்தாரின் மகனாக வாழ்ந்து வந்தார்.
- பெரும்பொருள் ஈட்டும் பொருட்டு மருதவாணர் கடல் கடந்து வாணிபம் செய்ய வணிகர்களுடன் மரக்கலத்தில் சென்றார்.
- வணிகர் அனைவரும் பொன்னும் பொருளும், பெற்று திரும்பி வர, மருதவாணர் மட்டுமே அங்கிருந்து எரு மூட்டைகளையும் தவிட்டையுமே வாங்கி தம் மரக்கலத்தில் நிரப்பிக் கொண்டு ஊர் திரும்பினார்.

- வழியில் அனைவர் மரக்கலங்களும் காற்றில் திசை மாறிப் போயின, உடன் வந்த வணிகர்கள் உணவு சமைப்பதற்கு இவரிடம் கடனாக எருமுட்டைகளை வாங்கிப் பயன்படுத்தி உணவு சமைத்தனர்
- சிலநாட்கள் கழித்து ஊர் திரும்பிய மருதவாணர் எரு மூட்டைகளையும் தவிட்டையும் கொண்டு வந்து தந்தையிடம் கொடுத்தார்.
- அதைப் பிரித்துப் பார்த்த திருவெண்காடர் எருவையும், தவிட்டையும் பார்த்து அதிர்ச்சியாகி மகன் எங்கே என்று திரும்பினார். அங்கே மருதவாணர் இல்லை.
- மகனை அவர் தேடியபோது அவர் மனைவியார், தந்தையிடம் சேர்ப்பிக்குமாறு மகன் கொடுத்த பேழை ஒன்றைக் கொடுத்தார்.
- திருவெண்காடர் அப்பேழையைத் திறந்த பார்த்த பொழுது காதற்ற ஊசியும். நூலும் இருந்தது கூடவே ”காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே” என்று எழுதப்பட்ட ஓலை ஒன்றும் இருந்தது.
- நிலையில்லாத பொருள்கள் மீது பற்று வைத்து விட்டோமோ என்று அதனைப் பார்த்து திருவெண்காடர் மனம் வெதும்பினார்.
- சிவபெருமானே தன்னை ஆட்கொள்ள மகனாக வந்ததை உணர்ந்து கொண்ட திருவெண்காடர், பட்டாடைகளைக் களைந்து இல்லற வாழ்வைத் துறந்து துறவறத்தை மேற்கொண்டார்.
- துறவறம் மேற்கொண்டு ஊர் அம்பலத்தை அடைந்து அங்கேயே வாழ்ந்து வரலனார். தேவையேற்படும் போது பிச்சையெடுத்து உண்டார்.
- திருவெண்காடர், திருவெண்காட்டு அடிகள், பட்டினத்தார் என்றும் அழைக்கப் பெற்றார்.
- ஒருநாள் பட்டினத்தார் தியானத்தில் அமர்ந்திருந்தபொழுது அங்கே வந்த அந்நாட்டரசன் அவரிடம், ”நீ துறவறம் பூண்டதனால் அடைந்த பயன் யாது? என வினவிய போது ”நீர் நிற்கவும் யான் அமர்ந்திருக்கவும் பெற்ற தன்மையே அது” என மறுமொழி கூறினார்.
- இவர் பிச்சையெடுத்து உண்பதை கேவலமாக நினைத்த இவரது தமக்கையார் நஞ்சு கலந்த அப்பத்தை இவருக்கு அளித்தனர்.

- அதனை உணர்ந்து கொண்ட அடிகள் “தன்வினை தன்னைச் சுடும், ஒட்டப்பம் வீட்டைச் சுடும்” என்று கூறி தமக்கையாரின் வீட்டின் கூரை மீது அந்த அப்பத்தை எறிந்தார். வீடு உடனே தீப்பற்றி எரிந்தது.
- தான் சேர்த்த செல்வம், மனைவி, சுற்றம் என அனைத்துப் பற்றுகளை விட்டொழித்த பட்டினத்தாரால் விடமுடியாத பற்று ஒன்று இருந்தது. அது தாய்ப்பற்றாகும்.
- அடிகள், காவிரிபூம்பட்டினத்தில் சில நாள் தங்கியிருந்த பொழுது, அவருடைய தாயார் மரணமடைந்தார்.
- தாயின் மரணத்தை அறிந்த அடிகள்

”ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்து பெற்று
பையலென்ற போதே பாரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி”

என்று கலங்கினார்.

- தாயாருக்கு ஈமச்சடங்கு செய்வதற்காக வாய்க்கரிசி போடும்படி கூறிய பொழுது.

”அள்ளியிடுவ தரிசியோ தாய் தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்
மெள்ள முகமேன் முகம் வைத்து
முத்தாடி யென்றன் மகனே யெனவழைத்த வாய்க்கு”

என்றும்

”வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலும் தோன்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்ட
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டு தீ மூட்டுவேன்”-

என்றும் புலம்புகிறார்.

❖ பின்னர்

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க மூள்கவே"

என்று அவர் பாடியவுடன் அக்னி தேவன், தானே அவரது தாயை சூழ்ந்து கொண்டார்.

❖ காவிரிபூம்பட்டினம், விடுத்து திருவிடைமருதூர். திருவாரூர் முதலிய தலங்களை தரிசித்தார். திருவாரூரில் இருந்தபோது அங்கு ஆட்சி செய்த மன்னன், பூர்வாசிரமத்தில் தன்னிடம் கணக்கராய் இருந்த சேந்தனாரை சிறைப்படுத்திய செய்திகேட்டு,
❖ "மத்தளை தயிருண்டானும்" என்ற பாடலைப் பாடிய அளவில் சிவகணங்கள் சேந்தனாரைச் சிறையிலிருந்து மீட்டு அவர் முன் கொணர்ந்து நிறுத்தின.
❖ சிவத்தலங்களை வழிப்பட்டுக் கொண்டே உஜ்ஜயினியை அடைந்து, அவ்வூரில் புறத்தே இருந்த விநாயகர் ஆலயத்தில் தவநிலையில் இருந்தார்.
❖ இந்நாட்டை பத்திரகிரியார் என்ற மன்னன் ஆட்சி செய்த வந்தான்.
❖ ஒருநாள் இரவில் அவ்வூரில் இருந்த திருடர்கள் அரண்மனையில் திருடிவிட்டு, வெற்றியின் காணிக்கையாக ஒரு மணிமாலையை விநாயகர் சிலை மீது வீசிவிட்டுச் சென்றனர்.
❖ ஆனால் அந்தமாலை பட்டினத்தாரின் கழுத்தில் விழுந்தது. திருடர்களை தேடி வந்த காவலர்கள் பட்டினத்தாரின் கழுத்தில் மணிமாலை இருக்கக் கண்டு கழுவிலேற்ற ஆணையிட்டான்.

"என் செயலாவது யாதொன்றுமில்லை
இனித் தெய்வமே உன் செயலென்றே
உணரப பெற்றேன் இந்த ஊனெடுத்தபின்
செய்த தீவினை யாதொன்றுமில்லை
பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ
இங்ஙனமே வந்து மூண்டதுவே"

என்ற பாடலைப் பாடியவுடனேயே கழுமரம் தீப்பற்றி எரிந்தது.

- அதை அறிந்த மன்னன், அடிகளை அடைந்து காலில் விழுந்து, பிழை பொறுக்குமாறு வேண்டினான்.
- தானும் அரசைத் துறந்து அடிகளின் சீடராகி அவரைப் பின்தொடர்ந்தார்.
- தன்னைத் தொடர்ந்து வந்த பத்திரகிரியாரை திருவிடைமருதூர் சென்று கோபுர வாயிலில் தங்குமாறு கூறிவிட்டு, அடிகள் பல தலங்களுக்கும் யாத்திரை சென்றுவிட்டார்.
- அவர் ஆணைப்படி பத்திரிகிரியார் கையில் திருவோடு ஒன்றை ஏந்தி, இரந்துண்டு வாழ்ந்து வந்தார்.
- யாத்திரை முடிந்து பட்டினத்தார் திரும்பி வந்ததும், பத்திரகிரியார் அடிகளை கீழைக் கோபுர வாயிலில் இருக்கச் செய்துவிட்டு, தானே அனுதினமும் இரந்து பெற்று வந்த உணவை அடிகளுக்குக் கொடுத்து மிஞ்சியதை தானும் உண்டு, தன்னைத் தொடர்ந்து வந்த நாய்க்கும் அளித்து விட்ட மேலைக் கோபுர வாயிலில் நாயுடன் தங்கி விடுவார்.
- ஒருநாள் சிவபெருமான் சித்தராக வந்து பட்டினத்து அடிகளிடம் உணவு வேண்ட, அவர் "யான் கந்தையும் மிகை" என்னும் கருத்து விளங்க என்பால் எதுவும் இல்லை.
- மேலைக்கோபுர வாயிலில் ஒரு குடும்பி உள்ளான். அவனிடம் கேள் எனக்கூற சிவபெருமானும் சென்று அவ்வாறே கூற பத்திரகிரியிர், உணவேற்கும் ஓடும், பரிவுகாட்டும் நாயுமல்லவா நம்மை குடும்பியாக்கின என அவ்வோட்டைக் கீழே எறிய, அது நாயின் மீது பட்டு நாய் இறந்தது.
- சித்தர் மறைந்துவிட்டார். நாயானது பரிகலம் உண்ட சிறப்பால் காசிராசன் மகளாகப் பிறந்து, வளர்ந்தபின் திருவிடைமருதூருக்கு பத்திரகிரியாரிடமே வந்து சேர்ந்தது.
- அப்பெண்னை பட்டினத்தாரிடம் அழைத்துச் சென்று வீடுபேறு அருளுமாறு பத்திரிகிரியார் வேண்டினார்.
- உடனே அங்கு தோன்றிய ஜோதியில் அப்பெண் கலந்தார். குருவின் ஆணைப்படி பத்திரகிரியாரும் அந்த ஜோதியில் கலந்து இறையடி சேர்ந்தார்.
- பட்டினத்தார் "என்னையும் என் வினையையும் இங்கு இருத்தி வைத்தனை போலும்" எனக் கூற சிவபெருமான் அவரிடம்

பேய்க்கரும்பு ஒன்றைக் கொடுத்து, திருவொற்றியூருக்கு அனுப்பி வைத்தார்.

- அந்தக் கரும்பு எங்க தித்திக்கிறதோ அங்கே உனக்கு முக்தி கிடைக்கும் என்று கூறினார்.
- பட்டினத்தார் பல தலங்களுக்கும் சென்று இறைவனைத் துதித்தார்.
- மீண்டும் திருவொற்றியூர் வந்து, கடற்கரையில் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது கையிலிருந்த கரும்பு இனித்தது.
- பட்டினத்து அடிகள் இறைவனை வணங்கி அத்தலத்தில் மணலில் மறைந்து சிவலிங்கத் திருவுருவாய் வெளிப்பட்டார்.
- பட்டினத்தார் பாடிய பாடல்கள் அனைத்தும் சைவத் திருமுறைகளில் பதினோராம் திருமுறைத் தொகுப்பில் உள்ளன. அவையாவன

## கோயில் நான்மணிமாலை:

- சிற்றிலக்கிய வகையாகும். சிதம்பரத்தில் உள்ள சிவனைப் பற்றிய நூலாகும்.
- நான்மணிமாலையின் இலக்கணத்திற்கேற்ப வெண்பா,
கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்ற நான்கு பாவகைகளில் மாறி மாறிவரும் 40 பாடல்களைக் கொண்டு அந்தாதியாக அமைந்துள்ளது.
- இந்த இலக்கிய வகையில் அமைந்த முதல் நூல் இதுவேயாகும்.

## கருப்பொருள்கள்:

- சிவனின் பெருமைகள், அவர்தம் ஆடல், அகப்பொருள், தத்துவப் பொருள்.

## திருக்கழுமல மும்மணிக்கோவை:

- காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலிலுள்ள சிவபெருமானை இந்நூல் போற்றிப் பாடுகிறது.
- இந்நூலில் கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் 100 அந்தாதியாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

- "மெய்த்தொண்டர்" என்ற சொல்லில் தொடங்கி "மெய்த்தொண்டரே" என்ற சொல்லில் இந்நூல் முடிகிறது. இது சிற்றிலக்கிய வகை நூலாகும்.

## திருவிடைமருதூர் மும்மணிக்கோவை:

- திருவிடைமருதூர்க் கோயிலிலுள்ள சிவபெருமானை இந்த நூல் போற்றிப் பாடுகிறது.
- இந்த நூல் நேரிசை ஆசிரியப்பாக்களை கொண்டுள்ளது.

## திருவொற்றியூர் ஒருபா ஒருபது:

- இந்நூல் சிற்றிலக்கிய வகையாகும். திருவொற்றியூர் இறைவனைப் புகழ்ந்து பாடும் நூலாகும்.
- இந்நூலில் பத்து ஆசிரியப்பாக்கள் உள்ளன.
- நீளமான பாடல்களைக் கொண்டவை. அந்தாதி முறையில் அமைந்துள்ளன.
- "இரு நிலம்" என்ற தொடருடன் தொடங்கி "இரு நிலத்தே" என்ற தொடருடன் முடிகிறது.

## நூல் கூறும் செய்திகள்:

- "நிலமடந்தைக்கு மேகலை கடல். அந்த மேகலைக்கு முகம் போன்றது ஒற்றியூர்"
- ஆண் அல்லது பெண் என ஓர் உருவினைப் பெறாதவன் சிவன். அவனைப் பெற்றோர் யாரோ தெரியவில்லை.
- பாவகன் (தீ), பரிதி, மதி ஆகிய மூன்று கண்களை உடையவன், விசும்பே அவன் உடம்பு.
- எட்டுத் திசையும் அவனுக்கு எட்டுத் தோள்களாகும், மணிமுடிப் பாந்தன் (பாம்பு)
- மாருதம் (காற்று) அவன் உயிர்க்கும் மூச்சு, ஓசை அவன் வாய்மொழி நிரம்பிய ஞானம் அவன் உணர்வு.
- உலகின் நீர்மை, நிற்றல், சுருங்கல், விரிதல், தோற்றம் - ஐந்தும் தொழிலாகும்.
- அமைதல், அழுதல் பெயர்தல், இமைத்தல். விழித்தல் - ஐந்தும் இயல்பாகும்.

-----•••-----•••----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம்**

**பகுதி** : **<u>பக்தி இயக்கம் மற்றும் இலக்கியம்</u>**

**காப்புரிமை**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி** VIIB & VIII **தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.**

**எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.**

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பக்தி இயக்கம்

- காலம்: கி.பி.600 முதல் கி.பி.900 வரை
- ஆட்சி: பல்லவர் ஆட்சிக் காலத்தில் உச்சத்தில் இருந்தது.
- தமிழ்நாட்டில் பக்தி இயக்கம் சைவம் மற்றும் வைணவம் என இரு கிளைகளாக பிரிந்து வளர்ந்தது.
- பக்தி முதன்முதலாக தமிழ்நாட்டில் இயக்கமாக விளங்கியது.
- வினை, வினைப்பயன் யாவற்றிர்க்கும் மேலாக உள்ளவன் இறைவன் என்றும் அவனைச் சார்ந்தால் வினைக் கெடும் என்று சுருங்கக் கூறி மக்களை ஈர்த்த இயக்கம்.
- தமிழ்நாட்டில் சைவ சமய பெரியவர்களான நாயன்மார்களும் , வைணவ சமய பெரியவர்களான ஆழ்வார்களும் தோன்றி பக்தி பாடல்கள் பாடி ஊர் ஊராக சென்று இவ்வியக்கத்தை வளர்த்தனர்.
- ஆலயப் பணியே, ஆண்டவன் பணி என்னும் சிந்தனை வேரூன்றிய காலம் இக்காலம்.
- கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற எண்ணம் வேரூன்றிய காலம்.
- இறையடியார் யாவரும் வணங்கத் தக்கவ ரே என்ற கொள்கையும் தொண்டர் குலமே தொழு குலம் என்னும் குரல் எதிரொளித்த காலம் இக்காலம்.
- இக்காலத்தில் சைவ இலக்கியங்கள் மற்றும் வைணவ இலக்கியங்கள் செழித்து வளர்ந்தன.
- பல்லவர்களும் பாண்டியர்களும் எழுச்சி பெற்ற பின்னர் இந்து சமயம் வளர்ச்சி பெற்ற காலம்.
- இந்து சமயத்தின் இரு கண்களான சைவம் நாயன்மார்களாலும் வைணவம் ஆழ்வார்களாலும் எழுச்சி பெற்ற காலம்;.
- நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் உருவாக்கப்பட்ட புத்துணர்வுகளினால் இந்து சமயம் பெற்ற எழுச்சியே பக்தி இயக்கம்.
- மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்றவர் திருஞானசம்பந்தர்
- என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம் என்றவர் திருநாவுக்கரசர்
- நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே என்றவர் நம்மாழ்வார்.

## பக்தி இயக்கத்திற்கான காரணங்கள்:

- அன்பு நெறி ஒன்றே ஆண்டவனை அடைவதற்கான நெறி என்று விளக்கி சமண பௌத்த சமயங்களை விடுத்து சைவ வைணவத்தை நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் மக்களுக்கு போதித்து எடுத்துரைத்த காலம்.
- மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்ற வழக்கிற்கு ஏற்ப மன்னர்கள் சமண பௌத்த சமயத்தை கைவிட்டு இந்து சமயத்தை பின்பற்ற துவங்கவும் மக்களும் அவ்வாறே பின்பற்றி வழிபட்ட காலம்.
- அளவையால் கட்டுண்டு கிடக்கும் தத்துவங்களையோ உயிர்ப்பை ஒறுக்கும் யோக நெறியையோ கடவுள் முன்னிலையில் தன்னையே அழித்துக்கொள்ள தூண்டும் உணர்ச்சி வெறியையோ பாராட்டிலர். கடவுளிடத்து அயராது அன்பு ஒன்றையே மக்களுக்கு போதித்து கூறிய மதம் இந்து மதம் என்று கூறியவர் கே.கே.பிள்ளை.

## சைவ இலக்கியங்கள்:

- பன்னிரு திருமுறைகள் சைவ இலக்கிய காலத்தில் பாடப்பட்டன.
- முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளை பாடியவர் - திருஞானசம்பந்தர்.
- நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளை பாடியவர் - திருநாவுக்கரசர்
- ஏழாம் திருமுறையை பாடியவர் - சுந்தரர்
- எட்டாம் திருமுறையை பாடியவர் - மாணிக்கவாசகர்
- ஒன்பதாம் திருமுறையை பாடியவர் - திருமாளிகைத் தேவர் , கருவூர் தேவர், சேந்தனார், பூந்துருத்தி காடவா நம்பி , கண்டராதித்தர், வேனாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பது நபர்கள்.
- பத்தாம் திருமுறையை பாடியவர் - திருமூலர்.
- பதினொன்றாம் திருமுறையை பாடியவர்கள் - திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார் , கல்லாடதேவ நாயனார், நக்கீர தேவ நாயனார் , கபில தேவ நாயனார் , பரண தேவ நாயனார், அதிராஅடிகள், எம்பெருமான் அடிகள் , ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமான் , பட்டினத்து அடிகள் , நம்பியாண்டார் நம்பிகள்.
- பனிரெண்டாம் திருமுறையை பாடியவர் - சேக்கிழார்

## பன்னிரு திருமுறைகள்:

- முதல் மூன்று திருமுறையின் பகுப்பின்பெயர் திருக்கடைக்காப்பு.
- ஏழாவது திருமுறை திருப்பாட்டு
- எட்டாவது திருமுறை திருவாசகம் மற்றும் திருக்கோவையார்
- ஒன்பதாவது திருமுறை திருவிசைப்பா மற்றும் திருப்பல்லாண்டு
- பத்தாம் திருமுறை திருமந்திரம்
- பதினொன்றாம் திருமுறை பக்தி பாடல்கள்
- பணிரென்டாம் திருமுறை பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணம்.
- ஒன்று முதல் ஏழு வரையுள்ள திருமுறைகள் மூவர் தேவாரம் அல்லது அடங்கல் முறை என்றும் அழைக்கப்படுகிறது.

## திருஞானசம்பந்தர்:

- பிறந்த ஊர் சீர்காழி
- தந்தையார் சிவபாத இருதயர்
- தாயார் பகவதியார்
- வேறுபெயர்கள்:-ஆளுடைய பிள்ளை , திருஞானம் பெற்ற பிள்ளை , காழிநாடுடைய பிள்ளை , ஆணை நமதென்ற பெருமான் , பரசமயகோளரி (பிற சமயத்தவர்களுக்கு சிங்கம் போன்றவர்) , ஆதிசங்கரர் தமது சௌந்தர்ய லஹரியில் “திராவிட சிசு ” என அழைக்கிறார். பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராணம் மிகுதியான பாடல்களைப் பெற்றுள்ளதால் இவரைக் குறித்து பிள்ளைப் பாதி , புராணம் பாதி என்பர். கவுணியர் என்றும் அழைக்கப்படுகிறார். இயன்றமிழ் இயேசு நாதர் என்றும் சிறப்பிக்கப்படுபவர். இறைவனுக்கு மகன் என்ற உரிமையில் சுதன் மற்றும் சத்புத்திரன் எனப் போற்றப்படுபவர்.
- பாடிய பாடல்கள் முதல் மூன்று திருமுறைகள்
- முதல் மூன்று திருமுறைகளின் வேறு பெயர்கள்: முதல் தேவாரம் , திருக்கடைக்காப்பு
- உமாதேவியாரால் பாலமுது ஊட்டப்பட்டவர்.

- நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்று சம்பந்தர் பாராட்டப்பெற்றவர்.
- அப்போது பாடிய பாடல் "தோடுடைய செவியன் விடையேறி தூவன் மதி சூடி என்ற புகழ்பெற்ற பாடலை பாடியவர்.
- 16 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார்.
- 16000 பதிகங்கள் பாடப்பட்டன. இன்று (தற்போது கிடைப்பது 4213 பாடல்கள்) 384 பதிகங்களே கிடைக்கப்பெற்றுள்ளன.
- பிறருக்கு செய்த அற்புதம்:
- திருமறைக்காடு - மூடிய கோவில் கதவுகளை பாடி திறக்கச் செய்தவர்.
- திருப்பாச்சிலாச்சிரமம்: மழவன் மகளின் முயலகன் நோய் நீக்க பதிகம் பாடியவர்.
- திருமருகல்- பாம்பு தீண்டிய வணிகனின் விடம் நீக்க பாடல் பாடியவர்.
- திருவோத்தூர் - ஆண்பனையை பெண்பனையாக ஆக்கினார்.
- மதுரையில் தான் தங்கியிருந்த மடத்திற்கு கூன் பாண்டியன் வைத்த நெருப்பை அவனுக்கே வெப்பு நோயாக பற்றச்செய்தவர். (கூன் பாண்டியன் மனைவி மங்கையர்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் வேண்ட நீரு பூசி வெப்பு நோய் நீக்கி கூன் நீங்கச் செய்து அவனை நின்றசீர் நெடுமாறன் ஆக்கினார்).
- மயிலாப்பூர் - சிறுவயதில் இறந்துபோய் குடத்திற்குள் சாம்பலாக இருந்த பூம்பாவை என்னும் பெண்ணை அப்பொழுதிற்கு உரிய வயது இளமை அளவோடு உயிர்பெற செய்தார். அப்பொழுது சம்பந்தர் பாடிய பாடல் "பூம்பாவை திருப்பதிகம்" எனப்படுகிறது.
- இவரின் அனைத்து பதிகங்களிலும் எட்டாவது பாடல் ராவணன் கயிலை மலையை எடுத்து துன்புற்றதையும் , ஒன்பதாவது பாடல் "மாலும் அயனும் காண இயலாத சிவபெருமானின் பெருமையையும் பத்தாவது பாடல் சமண பௌத்த சமயங்கள் துன்பங்கள் தரும் தீங்கினை உடையன என்றும் பதினோறாவது பாடலில் தனது

பெயரையும் ஊரையும் குறிப்பிட்ட பின் பதிகத்தை பாடுவார் அடையும் பயன்களையும் கூறியுள்ளார்.

- திருஞானசம்பந்தருக்கு இறைவன் செய்த அற்புதங்கள்:
  1. திருக்கோலக்காவில் - பொற்றாளம்
  2. திருவாவடுதுறையில்- பொற்கிழி
  3. திருவீழிமிழலையில் - படிக்காசு
  4. திருவாயிலறத்துறையில் - முத்துச்சிவிகை (முத்துப்பல்லக்கு)
  5. பட்டீச்சுரத்தில் - முத்துப்பந்தல்
  6. பெருமண நல்லூரில்- திருஞானசம்பந்தருக்கு நடந்த திருமணவினையில் தீவலம் வருமாறு கூறினர். தீவலம் வரும்போது ஒளிரும் நெருப்பாக விளங்கும் ஒளியாம் இறைவனையே வலம் வரவேண்டும் என விரும்பினார். அவ்வாறே ஒளிப்பிழம்பாக நின்ற சோதியுள் தன் மனைவியுடன் வைகாசி, மூலநாளில் இரண்டறக் கலந்தார்.
- இவர் பாடிய பாடல் வரிகள்: "வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்ட மிக நல்ல வீணை தடவி ", "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்", "மட்டட்ட புண்ணையங்கானல் மடமயிலைக்", "கட்டிடல் காணாதே போதியோ பூம்பாவாய் " போன்ற பாடல்கள் பாடியவர்.
- இவர் மேற்கொண்ட சமத்துவ சமுதாய பணிகள் - சத்புத்திர மார்க்கம் என்றும் இத்தகைய செயலாக்க நெறி , கிரியை நெறி என்றும் அழைக்கப்படுகிறது.

## திருநாவுக்கரசர்:

- பிறந்த ஊர்: திருவாமூர்
- இயற்பெயர் - மருள்நீக்கியார்
- தமக்கை திலகவதியாரால் வளர்க்கப்பட்டவர்
- வேறு பெயர்கள்: சமண சமயத்தில் சேர்ந்ததால் "தரும சேணர் "; என்று அழைக்கப்பட்டவர். வாக்குக்கு ஈசர் என்ற பொருளில் வாகீசன் என்ற பெயராலும் அழைக்கப்பட்டவர். தாண்டவன் பாடுவதில் வல்லவராக விளங்கியதால் தாண்டகவேந்தர் எனவும்

அழைக்கப்படுகிறார். திருஞானசம்பந்தரால் அப்பர் என்றும் அழைக்கப்பட்டவர்.

- நான்கு, ஐந்து மற்றும் ஆறாம் திருமுறைகளை பாடியவர். இந்நூல் தேவாரம் என்றும் அழைக்கப்படுகிறது.

**ஆற்றிய பணிகள்:**

- "என்கடன் பணி செய்து கிடப்பதே " என்னும் கொள்கையில் நின்று உழவாரப்பணிகளை கோவில்களில் மேற்கொண்டார்.
- மகேந்திரவர்ம பல்லவனைச் சைவனாக்கினார்.
- திருமறைக்காட்டில் பாடியே கதவை திறக்கச் செய்தார்.
- பாம்பு தீண்டி இறந்த அப்பூதி அடிகளின் மகனை உயிர்பெற்று எழச்செய்தார்.
- திருவையாற்றில் மூழ்கி எழுந்து, கயிலாயக் காட்சியைக் கண்டார்.
- திருநாவுக்கரசர் சமணத்தில் இருந்து சைவரானதும் மன்னன் மகேந்திர வர்ம பல்லவன் திருநாவுக்கரசர்க்கு எண்ணரிய தீங்குகள் இழைத்தான்.
- சமணத்திலிருந்து சைவ மதத்திற்கு மாறியதால் கொதிக்கின்ற சுண்ணாம்பு காலவாயில் உயிரோடு இடப்பட்ட பின்னர் இறைவன் நாவுக்கரசரை வேகாமல் உயிரோடு நலமாக காத்துத்தந்தார்.
- இரண்டு கால்களிலும் கல்லைக் கட்டி கடலிலே தூக்கிப்போடப்பட்ட பின்னர் ஒளியாம் இறைவனை வானத்திலே விளங்கும் சோதி என்றும் பொருளில் "சோதி வானவன்: என போற்றித் துதித்தார். பின்னர் கரை சேர்ந்தார்".
- ஆறாம் நூற்றாண்டு இறுதியிலும் , ஏழாம் நூற்றாண்டு தொடக்கத்திலும் வாழ்ந்த இவர் 81 வயது வரையிலும் உயிரோடு இருந்தவர்.
- தேவாரம் பாடிய மூவர் முதலிகளில் (திருஞானசம்பந்தர் , திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர்) அதிக காலம் வாழ்ந்தவர்.
- இவர் பாடிய 4900 பாடல்கள். (கிடைத்தது 3066 பாடல்கள்)
- பாடிய நூல்கள்: திருக்குறுந்தொகை மற்றும் திருத்தாண்டகம்.

  பாடல் வரிகள்: "தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்" என்ற பாடல் வரிகளும் , கடுமையான சூலை நோய் மூலம் வருந்தி வலித்தாளாமல் தான்படும் கொடுமையை "வயிற்றின் அகம் படியே குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன் அடியேன்" என்று வீரட்டான

இறைவனிடம் கண்ணீரோடு பாடி வேண்டினார். சமண சமயத்திலிருந்து சைவராக மா றுவேன் என்பதை ஏற்றாய் அடிக்கு இரவும் பகலும் பிரியாது வணங்குவன் என்று இறைவனிடம் பாடல் வரிகள் மூலம் அறிக்கை இட்டார்.

## சுந்தரர் (7ஆம் திருமுறை):

- பிறந்த ஊர் - திருநாவலூர்
- தந்தையார் - சடையனார்
- தாயார் - இசை ஞானியார்
- இயற்பெயர் - நம்பியாரூரர்
- சிறப்புப் பெயர் - தம்பிரான் தோழர் ,சேரமான் தோழர், வன்தொண்டர் மற்றும் திருநாவலூரரர்
- பாடிய பதிகங்கள் - 3800 (1026 பாடல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன)
- இவர் பாடல்கள் 7ஆம் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளது.
- பாடல் வரிகள் - "விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் , விரும்பி ஆட்பட்டேன்" , "பித்தா பிறைசூடி", "பொன்னார் மேனியனே".
- சிறப்புகள் - நரசிங்க முனையரையர் என்னும் குறுநிலமன்னரால் தத்து எடுக்கப்பட்டு மன்னன் மகனாக வளர்ந்தவர். சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகையே பெரியபுராணத்திற்கு அடிப்படை.
- இவர் பாடிய பாடல்கள் 38,000 (கிடைத்தது 1026)
- பரவையாரை காதல் மணம் புரிந்துகொண்டார். வேளாளர் குலப்பெண்ணான சங்கிலி நாச்சியாரை இரண்டாம் மனைவியாக திருமணம் புரிந்துகொண்டார்.
- காடவர்கோன் கலர்சிங்கர் , நந்திவர்ம பல்லவன் (இரண்டாம் நரசிம்மன்) , திருமங்கையாழ்வார் ஆகியோர் இவர் காலத்தவர்.
- சேரமான் பெருமான் நாயனாரோடு வெள்ளையானை மீது அமர்ந்து கயிலை சென்றவர்.
- மணிமுத்தாற்றில் 12000 பொன்னைப் போட்டு கமலாயத்தில் எடுத்தார். காவிரி ஆறு இவர் பொருட்டால் இரண்டாகப் பிரிந்து நின்றது. திருப்புகலூரில் தலையில் வைத்த செங்கல் தங்கக்

கல்லாக மாறியது. இரு கண்களின் ஒளியை இழந்த இவர் காஞ்சியில் ஒரு கண்ணொளியையும் , திருவாரூரில் மற்றொரு கண்ணொளியையும் பெற்றார். வாழ்நாள் முழுவதும் மணக்கோலத்தில் வாழ்ந்தார்.

- 16 வயதில் திருமணத்தன்று இறைவனே முதியோர் வடிவில் நேரில் வந்து ஓலை காட்டி ஆட்சி , ஆவணம், அயலார் காட்சி என்னும் மூவகை சான்றுகளாலும் சுந்தரர் தனது அடிமை என நிறுவினார்.
- தன்னை அடிமை என்று கூறிய இறைவனை "பித்தா" என கோபித்து பேசினார்.
- அவினாசியில் முதலை உண்ட பாலனை கரைவாய் முதலையை பிள்ளைத் தரச்சொல்லு காலனையே எனப் பாடி உயிரோடு வரச் செய்தார்.
- கருமிகளைப் பாடுவதைக் காட்டிலும் கடவுளைப் பாடுவதே நலம் என்பதனை பாடல் வழி உணர்த்தியவர்.
- பெயர்க் காரணம்: புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளை மணக்கும்போது இறைவனே முதியவர் வடிவில் நேரில் வலிய வந்து ஆட்கொண்டதால் "வன்தொண்டர்" எனப்படுகிறார்.
- இறைவனுடன் தோழமை உறவு பூண்டிருந்ததால் தம்பிரான் தோழர் எனப்படுகிறார்.
- சேரமான் பெருமான் நாயனாரின் நண்பராக இருந்ததால் சேரமான் தோழர் எனப்பட்டார்.
- திருநாவலூரில் பிறந்ததால் "திருநாவலூரர்" என்றும் பெயர்.

## மாணிக்கவாசகர் (8ஆம் திருமுறை)

- பிறந்த ஊர் : திருவாதவூர்
- சிறப்புகள் - அரிமர்த்தன பாண்டியனிடம் "தென்னவன் பிரம்மராயன்" என்ற விருதுபெயர் பெற்று அமைச்சராய் விளங்கினார்.
- திருவாதவூரர் எனவும் அழைக்கப்படுகிறார்.
- மாணிக்கவாசகர் சிறந்த சிவபக்தர் ஆன இரண்டாம் வரகுணன் ( 836-911) காலத்தில் வாழ்ந்தவர்.
- பாடிய நூல்கள் - திருவாசகம் மற்றும் திருக்கோவையார்
- திருவாசகம் - 51 பிரிவுகளும், 636 பாடல்களும் உள்ளன.
- திருக்கோவையார் - 400 பாடல்களை உடையது.
- சிறப்புகள் - "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது மூதுரை. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் டாக்டர் ஜி.யு.போப். கோவை நூல்களில் சிறந்த நூல் திருக்கோவையார். இந்நூல் கட்டளைக் கலித்துறையால் அமையப் பெற்றுள்ளது.
- திருவாசகத்தில் மாணிக்கவாசகர் நாட்டு மக்களின் உள்ளங்கவர்ந்த சமுதாயப் பாடல்களைப் பாடியுள்ளார்.
- திருவாசகத்தில் தும்பி ஊதுதல் , பொற்சுண்ணம் இடித்தல் , தெள்ளேணம் கொட்டுதல், திருத்தோள் நோக்கம், பூவல்லி கொய்தல், அம்மானை ஆடல் , ஊசலாடல் முதலான நாட்டுப்புற விளையாட்டுக்கள் பாடல் வடிவில் தரப்பட்டுள்ளன.
- பெருந்துறையில் ஞான உபதேசம் அருளியதன் வாயிலாக இறைவன் ஆட்கொண்டதால் திருவாசகம் பாடினார்.
- பாவை பாடிய வாயால் கோவை பாடுக என கேட்டுக்கொண்டதற்கிணங்க திருக்கோவையார் பாடினார்.

## சைவ சமய குரவர்கள்:

- அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்
- இவர்கள் சைவத்தின் நால்வர் என சிறப்பிக்கப்படுபவர்கள்.
- குரவர் என்றால் தலைவர் என்று பொருள்.
- இறைவனோடு இவர்கள் நால்வரும் கொண்டிருந்த உறவு நெறிகள் பின்வருமாறு:
- அப்பர் - திருநாவுக்கரசர் - பின்பற்றிய நெறி – சரியை மார்க்கம் - தாச மார்க்கம்
  உறவு முறை – ஆளுடைய அரசு
- திருஞானசம்பந்தர் - பின்பற்றிய நெறி – கிரியை மார்க்கம் - சத்புத்திர மார்க்கம்
  உறவு முறை – ஆளுடைய பிள்ளை
- சுந்தரர் - பின்பற்றிய நெறி – யோக மார்க்கம் - சன்மார்க்கம்
  உறவு முறை – ஆளுடைய நம்பி
- மாணிக்கவாசகர் - பின்பற்றிய நெறி – ஞான மார்க்கம் - சன்மார்க்கம்
  உறவு முறை – ஆளுடைய அடிகள்

**ஒன்பதாம் திருமுறை:-**

- ஒன்பதின்மர் பாடியன 9-ஆம் திருமுறை என அழைக்கப்படுகிறது.

  1.திருமாளிகைத்தேவர்,
  2.கருவூர் தேவர்,
  3.சேந்தனார்,
  4.பூந்துருத்தி காடவ நம்பி,
  5.கண்டராதித்தர்,
  6.வேனாட்டடிகள்,
  7.திருவாலி அமுதனார்,
  8.புருடோத்தம நம்பி
  9.சேதிராயர்.
- கிடைக்கப்பெற்ற பதிகங்கள் 29
- இவை திருவிசைப்பா மற்றும் திருப்பல்லாண்டு எனப்படும்.

- இவர்கள் ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள சைவ தமிழ் பாமாலைகளை பாடியவர்கள்.
- திருமாளிகைத்தேவர்: பாடிய பதிகங்கள் நான்கு. பாடல்கள் 45. இவரும் சேந்தனாரும் சேர்ந்து வடமின்றி ஓடாத தேரை ஓடச்செய்தனர். கோவில் மதிற்சுவரில் இருந்த நந்திகளை உயிர் பெறச் செய்தவர். உயிரற்ற பிணத்தை உயிர்பெறச் செய்து நடனம் ஆட செய்தவர். கருவூர் தேவரும் இவரும் ஒருசாலை மாணாக்கர். போக முனிவர் இவர்களது ஆசிரியர்.
- கருவூர் தேவர் : பாடிய பதிகங்கள் பத்து. பாடல்கள் 105. தஞ்சை பெரிய கோவிலில் லிங்கம் நிறுத்தும்போது தனது திறமையால் நேர்பட நிறுத்தியவர். தஞ்சை பெருவுடையார் ஆலயத்தில் இவருக்கு தனி சன்னதி அமைக்கப்பெற்றுள்ளது.
- சேந்தனார்: பாடிய பதிகங்கள் 4. பாடல்கள் 47. விறகு வெட்டி பிழைக்கும் சூழல் வந்தபோதும் தவறாது சிவனடியார்களுக்கு அமுது படைத்தவர். "திருவாதிரை களி" மரபினை தோற்றுவித்தவர். இறைவன் இவரது மனையில் கூழ் உண்டு பக்தியை வெளிப்படுத்தினார்.
- பூந்துருத்தி காடவ நம்பி: சிதம்பரம் பற்றி பாடிய பதிகங்கள் 2. பாடல்கள் 12. சாளரப்பண் என்ற புதியதொரு பண்ணை பாடியவர்.
- கண்டராதித்தர்: தில்லைப் பற்றி 10 பாடல்கள் பாடியவர். இவரது காலம் கி.பி 10-ஆம் நூற்றாண்டு. சிறந்த சிவபக்தர். செம்பியன் மாதேவியின் கணவர். முதல் பராந்தகசோழனின் மகன்.
- வேனாட்டடிகள்: சிதம்பரம் பற்றி 10 பாடல்கள் பாடியுள்ளார். தென்திருவிதாங்கூர் என்ற ஊரைச் சார்ந்தவர். சேரர் மரபினராக இருக்கலாம்.
- திருவாலி அமுதனார்: 4 பதிகங்கள் 42 பாடல்கள். சோழ நாட்டில் திருவாலி எனும் ஊரைச் சேர்ந்தவர். மயிலை மறைவலி வாலி எனத் தன்னை குறிப்பிட்டுக்கொண்டவர். பத்தாம் நூற்றாண்டு. சுந்தரரைப் பற்றி தனது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.
- புருடோத்தமநம்பி தில்லைப் பற்றி 2 பதிகங்கள் ( 22 பாடல்கள்) இவரது பாடல்களில் அகத்துறைகள் மிகுதியாக காணப்படுகின்றன.
- சேதிராயர்: சிதம்பரம் பற்றி 10 பாடல்கள் பாடியுள்ளார். நம்பியாண்டார் நம்பிக்கு முற்பட்டவர். திருக்கோவில் அருகில் உள்ள சேதிநாட்டு மன்னர் மரபினர்.

## திருமூலர்- பத்தாம் திருமுறை:

- மூலன் உடலில் இருந்தமையால் திருமூலர் என்று அழைக்கப்பட்டவர். இவர் பாடிய பாடல்களின் தொகுப்பு திருமந்திரம். இவர் பாடிய பாடல்கள் பத்தாம் திருமுறையாக பாடப்படுகிறது.
- ஒன்பது இயல்கள். 232 அதிகாரங்கள் 3000 பாக்கள்.
- “ஒன்றே குலம் ஒருவனே தேவன் ” என்ற புகழ்பெற்ற பாடல் வரிகளுக்கு சொந்தமானவர். “அன்பும் சிவமும் ஒன்றே ” என்று கூறியவர்.
- சமூக சீர்திருத்தக் கருத்துக்களை வழங்கிய ஒரு அற்புத நூல்.
- இவர் அருளிச்செய்த நூல் திருமந்திரமாலை.
- திருமூலரின் காலம் ஏழாயிரம் காலங்களுக்கு முந்தியது. (வருடம் கி.மு.5000) என்றபோதும் திருமந்திரத்தின் காலம் தற்கால ஏழாம் (கி.பி.700) நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.
- ஆண்டுக்கொரு முறை விழித்தெழுந்து ஒரு பாடல் வீதம் 3000 பாடல்கள் பாடினார். இதன் தொகுப்பே திருமந்திரம் எனப்படுகிறது.
- தேவார மூவருக்கும் திருமூலர் முற்பட்டவர் எனவும் கருதப்படுகிறது.

## பன்னிருவர்- பதினொன்றாம் திருமுறை

- பதினொன்றாம் திருமுறையை பாடியவர் பன்னிருவர்.
    1. திருவால வாயுடையார்
    2. காரைக்கால் அம்மையார்
    3. கல்லாட தேவ நாயனார்
    4. நக்கீர தேவ நாயனார்
    5. கபில தேவ நாயனார்
    6. பரண தேவ நாயனார்
    7. அதிரா அடிகள்
    8. எம்பெருமானடிகள்
    9. ஐயடிகள் காடவர்கோன்
    10. சேரமான் பெருமாள் நாயனார்
    11. பட்டினத்தடிகள்
    12. நம்பியாண்டார் நம்பி.

- இவர்கள் பாடிய 40 .நூல்கள் பதினொன்றாம் திருமுறையாக தொகுக்கப்பெற்றது.
- திருவாலயுடையார் - பாணப்பத்திரர் என்ற புலவரின் வறுமையைப் போக்க சேரமானுக்கு மதுரை சொக்கநாதர் ஆகிய இறைவன் அருளிய பாசுரம். பதினொன்றாம் திருமுறையின் முதல் நூல்.
- காரைக்கால் அம்மையார் : இயற்பெயர் புனிதவதி. காரைக்காலில் பிறந்தவர். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். திரு இரட்டை மணி மாலை. அற்புத திருவந்தாதி இவர் பாடியன. கயிலை மீது தலையாலே நடந்து சென்றவர். இறைவனால் அம்மையே என்று அழைக்கப்பட்டவர். திருவாலங்காட்டிலும் இறைவனைக் காண தலையாலே நடந்து சென்றவர். திருவாலங்காட்டிற்கு சம்பந்தர் வந்த போது காரைக்கால் அம்மையார் தலையால் நடந்த இடத்தை காலால் மிதிக்க மறுத்து , ஊருக்கு வெளியில் பழையனூரில் தங்கினார். 63 நாயன்மார்களில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிப்பவர்.
- கல்லாட தேவ நாயனார் இவர் பாடியது திருகண்ணப்ப தேவர் திருமறம். கல்லாடம் எழுதிய கல்லாடரிலிருந்து வேறுபட்டவர்.
- நக்கீர தேவ நாயனார் - பத்து நூல்களை எழுதியுள்ளார். சங்ககால நக்கீரர் என தமிழ்தாத்தா உ.வே.சாமிநாதன் அவர்களால் அழைக்கப்பட்டவர். திருமுருகாற்றுப்படை , கயிலைப்பாதி காளத்திப்பாதி அந்தாதி, திருஈங்கோய் மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக் கோவை , திருவெழுக் கூற்றிருக்கை , கோபப் பிரசாதம் , காரெட்டு போற்றிக் கலிவெண்பா, திருக்கண்ணப்பத்தேவர் திருமறம், பெருந்தேவ பாணி போன்ற பாடல்களைப் பாடியவர்.

- கபில தேவ நாயனார் :- இவர் இயற்றிய நூல்கள் மூன்று. இவரின் காலம் பதினொன்றாம் நூற்றாண்டு.
    1. மூத்த நாயனார் இரட்டை மணிமாலை
    2. சிவபெருமான் இரட்டை மணி மாலை
    3. சிவபெருமான் அந்தாதி. 37 பாடல்கள் கொண்டது. சிவனைப் பற்றிய வெண்பா யாப்பு.

- <u>பரண தேவ நாயனார்</u> : காலம் 10-ஆம் நூற்றாண்டு. நூற்று ஒரு வெண்பாக்களைக் கொண்ட சிவபெருமான் திருவந்தாதி இவர் பாடிய நூல்.

- <u>அதிரா அடிகள்</u> : காலம் 7-ஆம் நூற்றாண்டு. மூத்த பிள்ளையார் திருமணிக்கோவை. விநாயகர் பற்றிய பாடல்.

- <u>எம்பெருமானடிகள்</u>: நம்பியாண்டார் நம்பிக்கு முற்பட்டவர். 30 பாடல்களைக் கொண்ட சிவபெருமான் மும்மணிக்கோவை இவர் பாடியது.

- <u>ஐயடிகள் காடவர்கோன்</u> : நாயன்மார்களுள் ஒருவர் 24 பாடல்களைக் கொண்ட சேத்திர வெண்பா இவர் எழுதியது. ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வொரு தலத்தைப் பற்றி பாடப்பெற்றுள்ளது. 2 பாடல்கள் தலம் இன்றி இறைவனை பற்றி மட்டும் பாடப்பட்டுள்ளது.

- <u>சேரமான் பெருமாள் நாயனார்</u> : சுந்தரரின் நண்பர். இயற்பெயர் பெருமாள் கோதையார். 394 அடிகளைக் கொண்ட திருக்கயிலாய ஞான உலா இவர் பாடியது. எனவே ஆதி உலா என அழைக்கப்படுகிறது. தமிழின் முதல் உலா நூல். முதல் பாடலின் முடிவு பொன்வண்ணம் என்று இருப்பதால் பொன்வண்ணத்து அந்தாதி என பெயர் பெற்றது. 101 கட்டளை கலித்துறைகள் கொண்டது. திருவாரூர் மும்மணிக்கோவை 30 பாடல்களைக் கொண்டது. திருவாரூர் இறைவனைப் பற்றிய பாடல்.

- பிற உயிர்கள் பேசுவது அனைத்தையும் அறியும் ஆற்றலை உடையவராக இருந்ததால் “கழற்றறிவார் நாயனார்” என அழைக்கப்படுகிறார்.

- இத்தகைய ஆற்றலை உடையவராக இருந்ததால் திருவைந்தெழுத்தைக் குதிரையின் காதில் ஓதி அதனை விண்ணில் பறக்கச்செய்து சுந்தரரோடு கயிலை அடைந்தார்.

- **<u>பட்டினத்தடிகள்:</u> காலம் 10-ஆம் நூற்றாண்டு. இயற்பெயர் திருவெண்காடர். சேந்தனார் இவரிடம் கணக்கராகப் பணிபுரிந்தார். இவரின் நூல்கள்**
    1. **கோவில் நான்மணி மாலை.**
    2. **திருவிடை மருதூர் மும்மணிக்கோவை**
    3. **திருவேகம்பமுடையார் திருவந்தாதி காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மீது பாடப்பெற்றது.**
- **திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது போன்றவைகள். உலகப் படைப்புப் பொருள்கள் அனைத்தும் இறைவனின் உடல், இறைவன் உயிர் என்றும் தத்துவ கருத்து காணப்படுகிறது. கோவில் நான்மணி மாலையில் சண்டேச நாயனார் திருத்தொண்டர் நாயனார் பற்றிய குறிப்புரைகள் காணப்படுகிறது. திருக்கழுமல மும்மணிக் கோவை – சம்பந்தர் பற்றிய குறிப்பு. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை - இல்லற முக்தியின் சிறப்பு , தவத்தின் சிறப்பு, வரகுணப்பாண்டியனின் அன்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.**
- **<u>நம்பியாண்டார் நம்பி:</u> தமிழ் வியாசர் என அழைக்கப்படுபவர். திருமுறைகளை தொகுத்தவர். வடமொழியில் வியாசர் வேதங்களைத் தொகுத்தவர்.**
    1) **இவர் பாடிய திருப்பண்ணியர் விருத்தம் தில்லை நடராஜர் மீது பாடிய 70 பாடல்களை கொண்டது.**
    2) **63 நாயன்மார்களின் வரலாற்றுக்களை தொகுத்து தருவது திருத்தொண்டர் திருவந்தாதி.**
    3) **திருநாவுக்கரசர் மீது பாடப்பட்ட ஏகாதச மாலை. 11 விருத்தப் பாக்களை உடையது.**
    4) **விநாயகர் இரட்டை மணி மாலை பொள்ளாப் பிள்ளையார் மீது பாடப்பெற்ற 20 பாடல்களை கொண்டது.**
    5) **திருச்சபை விருத்தம்,**
    6) **திருமும்மணி கோவை,**
    7) **ஆளுடைய பிள்ளையார்**
    8) **திருவுலா மாலை,**
    9) **திருக்கலம்பகம்,**
    10) **திருத்தொகை திருவந்தாதி போன்றவை.**

- திருச்சபை விருத்தம் தொடங்கி திருத்தொகை திருவந்தாதி வரையுள்ள பாடல்கள் சம்பந்தர் பற்றி பாடப்பட்டுள்ளது. திருமுறைகளை தொகுக்க வேண்டிக்கொண்டவன். இராசஇராசன் எனவும் இரண்டாம் ஆதித்த சோழன் எனவும் கருத்து வேறுபாடுகள் உள்ளது.

## சேக்கிழார் -பனிரெண்டாம் திருமுறை:

- இவரது இயற்பெயர் அருள்மொழி தேவர்.
- சமணத்தின் பால் ஈடுபாடு கொண்ட அனபாய சோழனிடம் அமைச்சராக பணிபுரிந்தவர்.
- மன்னனை சைவத்தின் பால் திருப்பவே திருத்தொண்டர் புராணம் பாடினார்.
- திருத்தொண்டர் புராணத்தின் மற்றொரு பெயர் பெரியபுராணம்.
- நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுவது பெரியபுராணம்.
- 63 நாயன்மார்களைப் பற்றி திரட்டிய தகவல்களை கொண்டு 4286 விருத்தப்பாடல்கள் பாடியுள்ளார். 2 காண்டங்கள் 13 சருக்கங்கள். இவரது பாடல்களில் அரசர் முதல் ஆண்டி வரை பல்வேறுபட்ட குலத்தினர் சிவனடியார் எனும் பொதுமை சிறப்பால் பார்க்கப்பட்டுள்ளனர்.
- சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டவரின் திருத்தொண்டர் திருவந்தாதியும் அடிப்படையாகக் கொண்டு பனிரெண்டாம் திருத்தொண்டர் புராணம் பாடப்பட்டுள்ளது.

## ஆழ்வார்கள்:

- வைணவ சமயத்தை போற்றியவர்களை ஆழ்வார்கள் என அழைக்கிறார்கள்.
- இவர்கள் பன்னிருவர்.
- பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகும்.
- நாலாயிர திவ்ய பிரபந்தம் முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி என நான்கு பகுப்புகளைக் கொண்டது.
- இதனைத் தொகுத்தவர் நாத முனிகள்.
- கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பன்னிரு ஆழ்வார்களின் காலமாக கருதப்படுகிறது.

- பிற்காலத்தில் வந்த வைணவ அடியார்கள் ஆச்சாரியார்கள் என அழைக்கப்பட்டனர்.
- திவ்ய பிரபந்தத்தை அருளியதால் திராவிடாச்சாரியர்கள் எனப்படுவர்.
- முற்காலத்து ஆழ்வார்கள் பொய்கையாழ்வார் , பூதத்தாழ்வார், பேய் ஆழ்வார், திருமழிசை ஆழ்வார்.
- இடைக்காலத்து ஆழ்வார்கள் - நம்மாழ்வார் , மதுரகவியாழ்வார், குலசேகர ஆழ்வார் , பட்டர்பிரான் என்ற பெரியாழ்வார் , கோதை நாச்சியார் என்ற ஆண்டாள்.
- பிற்காலத்து ஆழ்வார்கள் - தொண்டரடிப் பொடியாழ்வார் , திருப்பாணாழ்வார், கலியன் என்ற திருமங்கை ஆழ்வார்.
- முதலாழ்வார்கள் எனப்படுவோர் - பொய்கையாழ்வார் , பூதத்தாழ்வார், பேயாழ்வார்.
- ஆண்டாள், குலசேகர ஆழ்வார் , திருமழிசை ஆழ்வார் , தொண்டரடிப் பொடி ஆழ்வார் , திருப்பாணாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகியோர் பாடல்கள் அடங்கிய முதல் ஆயிரம் “திருமொழி” என அழைக்கப்படுகிறது.
- திருமங்கையாழ்வாரின் பாசுரங்கள் மட்டும் அடங்கியுள்ள இரண்டாம் ஆயிரம் “பெரிய திருமொழி” என அழைக்கப்படுகிறது.
- பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரின் பாடல்கள் அடங்கிய மூன்றாம் ஆயிரம் “இயற்பா” என அழைக்கப்படுகிறது.
- நம்மாழ்வாரின் பாடல்கள் மட்டும் அடங்கியுள்ள நான்காயிரம் “திருவாய்மொழி” என அழைக்கப்படுகிறது.

## (1)பொய்கையாழ்வார்:

- பிறப்பிடம் - கச்சி (காஞ்சி) நகரிலுள்ள திரு.வெஃகா.
- தாமரை பொய்கையில் இருந்து பிறந்தமையால் பொய்கையாழ்வார் என அழைக்கப்படுகிறார்.
- நட்சத்திரம் - ஐப்பசி திருவோணம்
- அம்சம் - பாஞ்சசந்நியம் எனும் சங்கின் அம்சமாக பிறந்தவர்.
- இஷ்டதெய்வம் - திருப்பதி ஏழுமலையான்

- அருளிய திருநாமம் - "வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே"
- முதல் திருவந்தாதியாக இவர் பாடிய பாடல்கள் அமைந்துள்ளது.
- நூறு பாடல்களால் ஆனது.
- "நயவேன் பிறர்பொருளை , நன்னேன் கீழாரோடு " இப்பாடல் முதல் திருவந்தாதி பாடல்களுள் ஒன்று.

## (2)பூதத்தாழ்வார்:

- திருமாலை பூதம் என்று பல பாடல்களில் பாடியிருப்பதால் பூதத்தாழ்வார் எனப்பெயர் பெற்றார்.
- பிறப்பு – தொண்டை நாட்டிலுள்ள திருக்கடல்மல்லை (மாமல்லபுரம்)
- அவதரித்த மலர் - குருக்கத்தி மலர்
- நட்சத்திரம் - ஐப்பசி அவிட்டம்
- அம்சம் - கௌமோதகி எனும் கதாயுகம்
- இஷ்டதெய்வம் - ஸ்ரீரங்கம் திருவரங்கர்
- அருளிய திருநாமம் - "பொன்புரையும் திருவரங்கப் புகழுரைத்தான் வாழியே"
- அருளியது – 2-ம் திருவந்தாதி "அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக" என்பது இரண்டாம் திருவந்தாதி பாடல்களுள் ஒன்று.

## (3)பேயாழ்வார்

- பிறப்பு – மயிலாப்பூர்
- அவதரித்த மலர் - செவ்வல்லிப்பூ
- நட்சத்திரம் - ஐப்பசி சதயம்
- அம்சம் - நந்தகம் (வாள்)
- இவரின் வேறு பெயர்- மஹதாஹ்வயர் (திருமழிசையாழ்வாரை திருத்தியதால்)
- இஷ்டதெய்வம்-திருக்கோவிலூர் இடைகழியில் உள்ள திருமால்
- அருளிய திருநாமம்-"நேமிசங்கண் வடிவழகை நெஞ்சில் வைப்போன் வாழியே"

- "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்"- பேயாழ்வார்
- அருளியது – 3-ம் திருவந்தாதி
- "அது நன்று இது தீது என்று ஐயப்படாதே " எனத் தொடங்கும் பாடலைப் பாடியுள்ளார்
- முதல் மூன்று ஆழ்வார்கள் சந்தித்த இடம் திருக்கோவிலூர் இடைசுழி.
- பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வாரில் இவர்தான் அதிகமான ஸ்தலங்களைப் பற்றி பாடியுள்ளார்.

## (4) திருமழிசையாழ்வார்(புகழ்மிசை ஜயன்)

- பிறப்பு- திருமழிசை
- அம்சம் - சக்கர அம்சம்
- சிவவாக்கியர் என்ற பெயருடன் சைவ சமயத்தில் இருந்தார் பேயாழ்வார் மூலம் வைணவத்திற்கு மாறினார்
- அருளியது –நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்
- "தன்னுள்ளே திரைதெழும் தரங்கவென் தடம்போல " எனத் தொடங்கும் பாடலைப் பாடியுள்ளார்.
- இவரது சீடர் கணிகண்ணன்
- பைந்தமிழ் பின்சென்ற பச்சை பசும் கொண்டலே எனப் பாடியவர் குமரகுருபரர்.
- நாராயணனை பாடும் வாயால் நரனை பாடேன் என்றவர் கணிகண்ணன்.
- அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர் , சிறியார் சிவபட்டர் எனப் பேசியவர் திருமழிசையாழ்வார்.

## (5)நம்மாழ்வார் (அருள்மாறன்):

- பிறப்பு – 18 திருப்பதிகளையுடைய பாண்டிநாட்டில் தாமிரபரணி கரையில் ஆழ்வார் திருநகரியில் (திருக்குருகூர்)
- நட்சத்திரம் - வைகாசி விசாகம்

- அம்சம் -திருக்குறுங்குடி நம்பியின் அம்சமும் , ஸ்ரீகொஸ்துபம் எனும் இரத்தினாம்சமும் ஸேனை முதலியோரது அம்சம்
- சிறப்புப் பெயர்கள் - மாறன், சடகோபன், பராங்குசன், வகுளபூஷணன்
- இவர் பாடிய பாசுரங்களை நான்காவது ஆயிரம் என்பர்
- இவர் பாடிய மொத்த பாசுரங்கள் - 1296
- உலகப் பற்றினை விட்டு இறைவனை சரண் அடைவதால் அனைத்தும் பெறுவது எளியது என்றார்.
- "வீடுமின் முற்றவும் , வீடு செய்து உம்முயிர் என்ற பாடலைப் பாடியுள்ளார்
- சடம் எனும் வாயுவை ஓட்டி ஒழித்ததினால் "சடகோபன்" என பெயர் பெற்றார்.
- இவர் 16 வயது வரை மௌனமாய் இருந்தார். ஸேனை முதலியார் இவருக்கு திருவிலச்சினை செய்து உபதேசம் செய்து வைஷ்ணவராக்கினார்.
- இவர் எழுதிய நூல்கள் - திருவிருத்தம் , திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி இவை நான்கும் வேதங்களின் சாரம் எனப்படுகிறது.
- "மாறி மாறி பல பிறப்பும் பிறந்து" திருவாய்மொழி
- இவர் அவதரிக்கும்போதே இறைவனிடம் பேரன்பு கொண்டதால் இவர் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியை "ஸஹஜபக்தி" எனக் கூறுவர்.
- இஷ்டதெய்வம்-கிருஷ்ணன்
- இவர் கிருஷ்ணத்ருஷ்ணாத்வம்" என்று கொண்டாடப்பட்டவர்.
- "ஆழ்வார்களுக்கெல்லாம் தலைவர் " எனப் போற்றப்படுபவர் - நம்மாழ்வார்.
- வகுண மாலையை (மகிழம்பூ) அணிந்திருப்பதால் வகுளா பரணர் எனப் போற்றப்பட்டவர்.
- இவர் எழுதிய நான்கு நூல்கள் நான்கு வேதங்களாக வைணவர்களால் ஓதப்படுகிறது.

- இதனை திராவிட வேதம் , செந்தமிழ் வேதம் ,ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரம் என போற்றுகின்றனர்.
- வேதம் தமிழ் செய்த மாறன் என அழைக்கப்படுகிறார்.
- “வைணவத்து மாணிக்கவாசகர்” என சிறப்புப் பெயரும் உண்டு.
- புளியமரத்தடியில் பத்மாசனம் இட்டு யோகத்தில் அமர்ந்தவர். அந்த புளியமரத்தை ஆதிசேடனின் அவதாரம் என்பர். அப்புளியமரம் “திருப்புளி ஆழ்வார்” என அழைக்கப்படுகிறது.

## (6)குலசேகராழ்வார் (சேரலர்கோன்):

- சேரநாட்டில் கோழிக்கோடு (திருவஞ்சைக்களம்) எனும் ஊர் திருடவரதன் என்னும் மன்னனின் மகன்.
- அரசாட்சியை துறந்து வைணவ தொண்டரானார்.
- பிறப்பு – மாசி புனர்பூச நட்சத்திரம்
- அம்சம் - ஸ்ரீகௌத்துப மணி
- இயற்பெயர் - கௌத்துபாமசரர் சேரலர்கோன்;
- சிறப்பு பெயர்கள் - கொல்லிகாவலன், கூடல்நாயகன், கோழிக்கோன்
- இவர் வடமொழியில் பாடியது முகுந்தமாலை
- இவர் இராமபிரானை வழிபட்டவர்
- இவர் தமிழில் பாடிய பிரபந்தம் பெருமாள்திருமொழி
- பெருமாள் திருமொழியில் கூறப்படும் பொருள்கள்:
- முதல் மூன்று திருமொழிகள்- ஸ்ரீரங்கம் கோயிலைப் பற்றியது
- 4-ம் திருமொழி – திருவேங்கடத்தைப் பற்றியது
- 5-ம் திருமொழி- விற்றுவக்கோட்டையைப் பற்றியது
- 6-ம் திருமொழி – ஆய்ச்சியர் ஊடலைப் பற்றியது
- 7-ம் திருமொழி – தேவியின் புலம்பலைப் பற்றியது
- 8-ம் திருமொழி – நாமரின் தாலாட்டைப் பற்றியது
- 9-ம் திருமொழி – தசரதன் புலம்பலைப் பற்றியது
- 10-ம் திருமொழி -இராமாயணக் கதைச் சுருக்கம்

## (7)பெரியாழ்வார் (துய்யப்பட்டநாதன் (அ) பட்டர்பிரான்:

- பிறப்பிடம்-ஸ்ரீவில்லிபுத்தூர்
- குலம்-வேயர்குலம்
- நட்சத்திரம் -ஆனி சுவாதி
- அம்சம் - கருடாம்சம்
- இயற்பெயர் -விஷ்ணுசித்தர்
- வடபெருங்கோயிலுடையானுக்கு திருமாலை கட்டி சமர்பித்து வந்தார்
- இவர் அருளியது – திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி
- நாராயணர் இவர் கனவில் கூறியபடி மதுரை பாண்டியன் அவைக்களம் சார்ந்து திருமாலே பரம்பொருள் என நிறுவிக் கிழியை அறுத்தார்.
- மதுரை மன்னன் வல்லபதேவனிடம் வைணவத்தின் சிறப்பை நிலைநாட்டி பொற்கிழி பெற்றவர். இவரது காலம் எட்டாம் நூற்றாண்டு.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் முதல் பாடல் இவருடையது.
- வரலாற்றுக் குறிப்புகள் உள்ளடக்கிய பாடல்களை பாடியவர் - பெரியாழ்வார்
- ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வாரான ஆண்டாளின் வளர்ப்புத் தந்தையானவர்.
- ஆண்டாளை திருவரங்கம் உறையும் அரங்கனுக்கு மணம் முடித்துக் கொடுத்ததன் மூலம் அரங்கனுக்கே மாமனார் ஆனார்.

## (8)தொண்டரடிப்பொடியாழ்வார் (அன்பர்தாளிதூளி)

- பிறப்பு: சோழநாட்டில் கும்பகோணம் திருமண்டங்குடி
- நட்சத்திரம் - மார்கழி, கேட்டை
- அம்சம்-திருமாலது வைஜயந்தி எனும் வனமாலை
- குலம் - பிராமணர்

- ஸ்ரீரங்கம் பெருமாளை வழிபட்டார்
- இயற்பெயர் - விப்ரநாராயணர்
- இயற்றிய நூல்கள் - திருமாலை, திருப்பள்ளியெழுச்சி.
- "ஒன்றே குலம் ஒருவனே தேவன் " என்ற கொள்கையை வலியுறுத்தினார்.

## (9) திருப்பாணாழ்வார் (நற்பாணன்):

- பிறப்பு: சோழநாட்டு உறையூர்
- நட்சத்திரம் - கார்த்திகை மாத ரோகிணி
- அம்சம்- ஸ்ரீவத்ஸத்தின் (திருமறு) அம்சம்
- அந்தணனது நெற்பயிர்கதிரில் பிறந்ததால் முதலாழ்வார்களை போல 'அயோனிஜர்' எனப்பட்டார்.
- இவர் ஒரு கானஞானி இவரை ஸோகஸாரங்கமாமுனிகள் தோளில் ஏற்றி ஸ்ரீரங்கம் பெருமாள் முன்விட்டார்.
- இவர் "அமலான் ஆதிப்பிரான்" எனும் பாசுரம் பாடி இறைவனோடு ஐக்கியமானார்.
- இவர் பாடல் பெரும்பாலும் அரங்கநாதனைப் பற்றியதாகும்
- இறைவன் முன் ஏற்றத்தாழ்வு இல்லை என்பது இவரின் கோட்பாடு.
- காவிரி கரையிலிருந்தே கோயில் கோபுரம் பார்த்து தொழுது இசைப்பாடி இறைவனை வணங்கினார்.

## (10)திருமங்கையாழ்வார் (நற்கலியன்):

- பிறந்த இடம் - சோழநாட்டு திருவாழி திருநகரி எனும் திவ்விய தேசத்துக்கு அருகேயுள்ள திருக்குறையலூர்
- பிறபெயர்கள்-நீலன்,பரகாலன், கலியன், மங்கைவேந்தன், ஆலிநாடான், நாடுகவிபெருமாள்
- பிறப்பு: சேனைத்தலைவன் மகனாய் கார்த்திகை மாதம்- கார்த்திகை நட்சத்திரம்
- அம்சம்-திருச்சாரங்கத்தின் (வில்) அம்சம்
- மனைவி – குமுதவல்லி

- வயலாலி மணவாளனிடம் மந்திர உபதேசம் பெற்றவர்
- பெரியபெருமாள் (ஸ்ரீரங்கம்) சந்நிதியில் திருப்பணி செய்தவர்
- இவர் எழுதியவை – பெரிய திருமொழி , திருக்குறுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல் , பெரிய திருமடல் , திருநெடுந்தாண்டகம் என்ற ஆறு பிரபந்தங்கள் (இவை மாறன் பணித்த தமிழ் மறைக்கு அங்கங்கள் என கூறப்படுகின்றன.
- திருவரங்க கோவிலின் சுற்றுசுவர் கட்டியவர் சைவ நெறியிலும் ஈடுபாடு கொண்டவர்
- மன்னுமலை அரையன் பொற்பாவை என்ற சிவன் பாடலைப் பாடியுள்ளார்.
- இவர் பிறருக்கு காலன் போன்று இருந்ததால் பரகாலன் எனப்பட்டார்.
- திருமங்கைப் பகுதியின் குறுநில மன்னனாக இருந்ததால் திருமங்கை மன்னன் எனப்பெயர்பெற்றார்.
- பன்னிரெண்டு ஆழ்வார்களில் இவர்தான் அதிக பெருமாள் திருத்தலங்களை மங்களாசனம் செய்துள்ளவர்.
- பல்வேறு யாப்பு வடிவங்களை பக்தி இலக்கியத்திற்கு பயன்படுத்திக்கொண்டவர்.
- நாட்டுப்புற பாடல்களைப் பின்பற்றி பக்தி நெறியை புலப்படுத்தியவர்.
- சித்திரக்கவி படைத்து பக்தி உலகுக்கு வளம் சேர்த்தவர்.
- தாண்டகங்கள் அருளி அவற்றுள்ளும் நாயகநாயகி பாவத்தை அருளியவர்.

## (11)ஆண்டாள்:

- ஆண்டவனையே ஆண்டவள் என்றபடியால் ஆண்டாள் எனப் போற்றப்படுகிறாள்.
- இயற்பெயர்-சுரும்பார் குழல் கோதை
- சிறப்புப் பெயர்கள் - கோதை, சூடிக்கொடுத்த நாச்சியார்
- பிறப்பு - திருவில்லிப்புத்தூர்

- பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்
- பாடியது – நாச்சியார் திருமொழி, திருப்பாவை
- "அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததி" எனக் கொண்டாடப்படுபவர் - ஆண்டாள்
- ஆண்டாள் பூமிப்பிராட்டியின் அவதாரம்
- ஆண்டாள் பாடிய திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டது.
- இதனால் இந்நூலுக்கு சங்கத்தமிழ் மாலை முப்பது என ஆண்டாள் பெயரிட்டார்;

## (12)மதுரகவியாழ்வார்:

- நம்மாழ்வாரின் சீடர்.
- பிறப்பு – பாண்டிய நாடு திருக்குறுக்கூர் என்னும் திருக்கோளுரில் பிறந்தார்.
- நட்சத்திரம் - சித்திரை, சித்திரை மாதம்
- அம்சம்- கருடாழ்வாரின் அம்சம்
- சூரியோதத்திற்கு அருணோதயம் போன்று நம்மாழ்வார் அவதாரத்திற்கு முன் மதுரகவியாழ்வார் பிறந்தார்.
- பாடிய பிரபந்தம் - "கண்ணின் நுண் சிறுத்தாம்பு" (நம்மாழ்வார் பற்றி பாடியது)
- செவிக்கு இனிமையாக செஞ்சொற்களால் கவிதைப் பாடும் வல்லவர். ஆதலால் மதுரகவியாழ்வார் எனப் புகழப்பெற்றார்.

## வைணவ ஆச்சாரியார்கள் - நாதமுனிகள்

- நம்மாழ்வாரால் அருளப்பட்டவர்
- விசிஸ்டாத்வைதம் அழியும்போது அதனை நன்கு பரப்பினார்
- நாலாயிர திவ்விய பிரபந்தப் பாடல்களை தொகுத்தவர்
- இவரின் பேரனான ஆளவந்தார் பரப்பிய சித்தாந்தத்தின் பெயர் - எம்பெருமாள் தர்சனம்

## இராமானுசர்:

- காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு
- ஊர் - ஸ்ரீபெரும்புதூர்
- வைணவ சமயத்தின் தலையாய பெரியவர்
- திருவரங்கத்திலிருந்து வைணவ சமய கருத்துக்களை பரப்பிக்கொண்டிருந்தார்.
- இவர் இயற்றிய நூல்கள்: வேதாந்த சாரம் , வேதாந்த சங்கிரம் , வேதாந்த தீபம்.
- பிரம்ம சூத்திரங்களுக்கு பொருளுரையையும் , பகவத் கீதைக்கு விளக்க உரையும் எழுதியுள்ளார்.
- இவர் எழுதிய வைணவ கோட்பாடே விசிட்டாத்வைதம்.
- நாதமுனி சீடர் பரம்பரையில் தோன்றியவர்.
- 13-ஆம் நூற்றாண்டில் இராமானுசரை பின்பற்றிய அடியாரிடையே வடகலை என்றும் தென்கலை என்றும் இரு பிரிவுகள் ஏற்பட்டன.
- மனிதன் உயிர் தனிப்பட்டது என்றும் இறுதியில் பேரின்பம் அடையும் நிலையில் கடவுள் அண்மையிலே நிலைப்பெற்று வாழும் என்றும் கருதியவர் இராமானுசர்.

## எம்பெருமானார்:

- இயற்பெயர் - திருவனந்தாழ்வான்
- பிறப்பு-ஸ்ரீபெரும்புதூரில் சித்திரை மாத திருவாதிரையில் பிறந்தார்
- பெற்றோர் - ஆஸரிகேசவபெருமாள் பூமிபிராட்டி
- பஞ்சாயுதங்களின் அவதாரம் என திருவரங்கத் து முதனாரால் அழைக்கப்பட்டவர் எம்பெருமானார்
- பஞ்சாயுதங்களான சுதர்சனம், நந்தகம், கதை, சாரங்கம் மற்றும் பாஞ்சசன்யம்

- விஷ்வச்சேனருடைய அவதாரம் திரிதண்டம் செங்கோலின் அவதாரம் என வேதாந்ததேசிகனாரால் அழைக்கப்பட்டவர் - எம்பெருமானார்
- தொண்டனூரில் ஜைனர்களுடன் வாதம் செய்தார் எனக் கூறும் நூல் - குரும்பரமபராப்பிரபாவம்
- பன்னிரு ஆழ்வார்களின் வைபவங்களை விரிவாக "குருபரம்பராப்பிரபாவம்" முதலிய நூல்களில் காணலாம்.
- பெருமாளை எப்போதும் நினைந்து வாழும் 12 ஆழ்வார்களும் "நித்தியஸரிகள்" என்று திவ்வியஸரிய சரிதம் குருபரம்பராப்பிரபாவம் முதலிய நூல்கள் கூறுகின்றன.
- புராணங்களைத் தழுவி நிற்கும் நூல்கள் திவ்விய பிரபந்த நூலின் அனைத்து பாசுரங்களுக்கும் உரை எழுதியவர் - பெரியவாச்சான்பிள்ளை
- நம்மாழ்வார் பாசுரங்களுக்கு மட்டும் உரை எழுதியவர் - வடக்கு திருவீதி பிள்ளை
- மணவாளமா முனிவராக அவதாரம் செய்தவர் - எம்பெருமானார்
- திருவனந்தாழ்வான் முதலில் எம்பெருமானாராய் அவதரித்து பின்பு மணவாளமா முனிகளாய் அவதாரம் செய்தார் என "வரவரமுனிசதகம்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளவர் - எரும்பியப்பர்.
- நம்மாழ்வார் அருளியவை – "நான்கு வேதங்கள் " என்றும் திருமங்கையாழ்வார் அருளியவை "ஆறு அங்கங்கள் " என்றும் பிற ஆழ்வார்கள் அருளியவை "உபாங்கங்கள்" (உதவி புரியும் நூல்கள்) என்றும் அடைக்கப்படுகின்றன.
- தேசிகன் எழுதியது "ஸ்ரீமத்ரஹஸ்யத்ரஸாரம்" இதன் வியாக்யானம் (விளக்கம்) ஸாராஸ்வா திநீ
- இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் போன்றவை வேதக் கருத்துக்களை தெளிவாக தெரிவிக்க வந்தமையால் அவை வேதோப ப்ரும்மஹணங்கள்" எனப்படும்.

- நாதமுனிகள் முதல் எம்பெருமானார் நடுவாய், மணவாளமாமுனிகள் ஈறாக உள்ள குருபரம்பரையை சேர்ந்த மஹான்கள் - பூர்வாச்சரியார்கள் எனப்படுவர்.

## (14) வைணவத் தலங்கள்:

- திவ்ய தேசங்கள் என்பது 108 வைணவ திருத்தலங்களைக் குறிக்கும்.
- ஆழ்வார்களால் மங்களாசனம் பெற்ற திருத்தலங்கள் 108 ஆகும். அவையே திவ்ய தேசங்கள் எனப்படுகின்றன.
- இவற்றில்105 தலங்கள் இந்தியாவிலும், ஒன்று நேபாளிலும் உள்ளன.
- கடைசியாக உள்ள இரு தலங்கள் இவ்வுலகில் இல்லை.
- 84 திருத்தலங்கள் தமிழ்நாடு
- 11 திருத்தலங்கள் கேரளா.
- 2 திருத்தலங்கள் ஆந்திர பிரதேசம்.
- 4 திருத்தலங்கள் உத்திர பிரதேசம்
- 3 திருத்தலங்கள் உத்தரகாண்ட்
- 1 திருத்தலம் குஜராத்
- 1 திருத்தலம் நேபாளம்
- 2 திருத்தலங்கள் வானுலகம்
- 107-வது திருத்தலம் திருபாற்கடல் என அழைக்கப்படுகிறது. (புவியில் இல்லை)
- 108-வது திருத்தலம் பரமபதம் என அழைக்கப்படுகிறது. (நாதன் திருவடியில் உள்ளது)

------***-----***----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம் (வைணவம்)**

**பகுதி** : **<u>நாலாயிர திவ்யப்பிரபந்தம் - அறிமுகம்</u>**

**காப்புரிமை**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.**

**எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.**

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# நாலாயிர திவ்யப்பிரபந்தம் - அறிமுகம்

- நாலாயிரத் திவ்விய பிரபந்தம் என்று பெயரிட்டவர் - நாதமுனி
- நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தை தொகுத்தவர் - நாதமுனி
- நாலாயிரத் திவ்விய பிரபந்தத்திற்கு ஆன்ற தமிழ் மறை, திராவிடசாகரம் என்ற வேறு பெயர்களும் உண்டு.
- ஆழ்வார்கள் மொத்தம் 12 பேர்
- பன்னிரு ஆழ்வார்கள் பாடிய மொத்தப் பாடல்கள் - 3776
- நாலாயிரத் திவ்விய பிரபந்தம் 4 பிரிவுகளை உடையது. அவை,
    1. முதலாயிரம்
    2. மூத்த திருமொழி
    3. திருவாய் மொழி
    4. இயற்பா
- பிரபந்தத்தில் உள்ள மொத்த நூல்கள் - 24
- 12 ஆழ்வார்களும் பாடிய நூல்கள் - 24
- பாடல் தொடக்கத்தால் பெயர் பெற்ற நூல்கள் - 2
    1. கண்ணி நுண் சிறுதாம்பு - மதுரகவியாழ்வார்.
    2. அமலனாதிபிரான் - திருப்பாணாழ்வார்
- நம்மாழ்வார் பாடியது - திருவாய்மொழி
- பெரியாழ்வார் - திருமொழி
- ஆண்டாள் - திருமொழி
- திருமங்கையாழ்வார் - பெரிய திருமொழி
- குலசேகராழ்வார் பாடியது - பெருமாள் திருமொழி.

------*******-----*******------

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

பிரிவு : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

பாடம் : **இந்து மதம் (வைணவம்)**

பகுதி : **நம்மாழ்வாரும் வைணவமும்**


**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

- 'கிருஷ்ணனே பிரம்மம் -- பக்தியுடன் முக்கியடைந்து பரமாத்மாவுடன் ஆத்மா கலந்து கொள்ளலாம்' என்பது இவரின் கொள்கையாகும்.

## நாமதேவர்:

- பிறப்பு - மஹாராஷ்டிராவிலுள்ள பண்டரிபுரம்.
- இவரின் கொள்கை - உண்மை, பக்தி, கடவுள் வழிபாடு
- சலவைத்தொழிலாளியின் மகன்.
- விஷ்ணுவை "வித்தோபா" என அழைத்தவர்.
- உருவ வழிபாடு புரோகித சடங்குகளை எதிர்த்தார்.
- உன்னையே உற்றுப் பார்த்து ஹரியின் பெயரை நாடு என்றார்.
- இவரின் பாடல்கள் சீக்கியரின் குருகிரந்தசாஹிப் என்ற புனித நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

## சைதன்யர்:

- பிறப்பு - வங்காளத்தில் உள்ள நாடியா என்ற இடம் (கி.பி..1485)
- வங்காளத்தைச் சேர்ந்த இவர் தீவிர கிருஷ்ண பக்தர்.
- 24ம் வயதில் துறவு பூண்டார்.
- இவரின் சீடர்கள் இவரை விஷ்ணுவின் அவதாரமாக கருதினர். மகாபிரபு என அழைத்தனர்.
- கடவுளின் புகழை பொது இடங்களில் பாடும் சங்கீர்த்தனம் என்ற முறையை கொண்டு வந்தார்.

## துளசிதாசர்:

- "கோசாமி" என்று அழைக்கப்பட்ட இவர் இராமபக்தர்.
- இராமாயணத்தை இந்தியில் மொழிபெயர்த்தார். இந்நூலின் பெயர் - இராமசரிதமனஸ்.

- ஹிந்தி மொழியில் ஜானகிமங்கள், பார்வதிமங்கள் என்ற நூல்களை எழுதினார்.
- இவர் எழுதிய மற்றொரு நூல் - அனுமன் சாலீஸா (40 பாடல்கள்)

## மீராபாய்:

- இராஜபுத்திர இளவரசி
- தீவிர கிருஷ்ணபக்தரான இவர் இராஜஸ்தானி மொழியில் பக்தி பாடல்கள் பாடினார்.
- வாழ்நாளின் பெரும்பகுதியை கிருஷ்ணன் பிறந்த இடமான மதுராவிலும்,வளர்ந்த இடமான பிருந்தாவனத்திலும் கழித்தார்.
- மேவார் தலைநகர் சித்தூரில் இவருக்கு கோயில் கட்டப்பட்டுள்ளது.
- பிறப்பு - இறப்பு சுழற்சியிலிருந்து விடுபட்டு பேரின்ப நிலையை அடைய கிருஷ்ணபக்தி அவசியம் என்பது இவர் கருத்து.
- எளிய பக்தியும், நம்பிக்கையுமே வீடு பேறு அடைய வழி என்றார்.

## குரு இராமதாசர்.

- சத்ரபதி சிவாஜியின் குரு.
- கடவுள் முன் அனைவரும் சமம் என்பது இவர் கருத்து
- சமயக் கொள்கை உபதேசித்ததுடன், சிவாஜி மூலம் ஒரு தேசம் உருவாக காரணமாகயிருந்தவர்.

## துர்க்காராம்:

- மகாராஷ்டிர துறவி.
- கிருஷ்ணனை பாண்டுரங்கன் என அழைத்தார்.
- இவரின் பக்திபாடல்கள் - அபங்கங்கள் எனப்படும்.

## ஞானேஸ்வரர்:

- மகராஷ்டிராவில் பிறந்த இவர் விஷ்ணுவை கிருஷ்ணன் வடிவிலும்,வித்தோபா வடிவிலும் வணங்கியவர்.
- பகவத்கீதையை மராட்டிய மொழியில் மொழி பெயர்த்தார். இதன் பெயர் ஞானேஸ்வரி.

## நிம்பர்கர்:

- கோதவரி நதிக்கரையில் பிறந்து மதுராவிற்கருகே பிரஜா என்ற இடத்தில் வாழ்ந்தார்
- ராதா-கிருஷ்ண வழிபாடு செய்தார். இவரின் கொள்கை - பேதாபேதம்
- தத்துவம் - துவைதாத்வைதம். இராமனுஜரின் சமகாலத்தவர்.
- சத்-வைணவம் என அழைக்கப்படுவது - நிம்பர்கரின் வைணவம்.

## ஏகநாதர்:

- பிறப்பு - மகராஷ்டிராவிலுள்ள பைத்தான் என்ற ஊர்
- கண்ணனின் தீவிர பக்தர், பெரிய பாகவத புருஷர்

## சூர்தாசர்:

- இவர் எழுதிய சூர்சாகர் என்ற நூல் கண்ணனை குழந்தையாக கருதி சித்தரிக்கிறது.
- "வாழ்வு ஒரு விளையாட்டு, வீர தீரச் செயல், ஆனால் போராட்டம் அன்று" எனக் கூறினார்.

## பசவர்

- கன்னடத்தில் வசித்த "லிங்காயத்" என்ற வீர சைவ வகுப்பை சேர்ந்தவர்.
- சிவனே உயர்ந்த கடவுள் என்றார்.
- இவரை பின்பற்றுவோர்கள் லிங்காயத்துக்கள் எனப்படுகின்றனர்.

----------*****-----------*******-----

# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

| | | |
|---|---|---|
| பிரிவு | : | TNPSC Group VIIB & VIII தேர்வு |
| பாடம் | : | இந்து மதம் (சைவம்) |
| பகுதி | **:** | **சைவ இலக்கியமும் வரலாறும்** |

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**இயக்குநர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# சைவ இலக்கியமும் வரலாறும்

## ஆராய்தலும் நெறிப்படலும்:

- ❖ உளங்கொள்ளும் பொருள்களெல்லாம் இரு வேறியல்புகளை உடையவை ஆகும். அவை அளக்கப்படும் இயல்புகள் அளக்கபடுதலின்றி அனுபவிக்கப்படும் இயல்புகள் என்பவை
- ❖ சமய உண்மைகளை அறியும் வகை இருவகைப்படும். அவை ஆராய்தறிதல் மற்றும் உயர்ந்து நெறிப்படல்

திருஞானசம்பந்தப்பிள்ளையார்:

எதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விடுளன் எங்கள்சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மீன்.

நெறி உயர்த்தும் நூல்கள்:

ஔவையார் தமது நல்வழியில்

தேவர் குறளும் திருநாள் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங் – கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என் றுணர்

- ❖ சைவ சமயமும் அக்காலத்தில் சமயம் என வழங்கப்படவில்லை. திருநெறி, மெய்ந்நெறி, முன்னெறி, சிவமாநெறி என்பது போல நெறி என அதனை வழங்கி வந்திருக்கின்றார்கள்.
- ❖ சமயம் என்பதற்கும் நெறி எனபதற்கும் வேறுபாடு உண்டு
- ❖ சமயம் என்னும் சொல் நியமிக்கப்பெற்றது. வரையறை செய்யப்பட்டது என்னும் பொருளைத் தரும்.
- ❖ வினைவயப்பட்ட மக்கள் தம் உலக அனுபவத்திற்கு ஏற்புத் தம் அறிவு கொண்டு சில முடிவுகளைத் துணிந்து நிறுவி மக்களிடைப்பரப்பி வருவனவெல்லாம் சமயம் எனப்படும்.
- ❖ சேக்கிழார்

உலகியல் வேதாநூ லொழுக்கம் என்பதும்
நிலவு மெய்ந்நெறி சிவநெறியது என்பதும்
பலர்புகழ் தென்னவன் உணரும் பான்மையால்

- கிறித்து சகாப்தத்திற்கு முன் தமிழகத்தில் சமயக் கணக்கர் என்பேர் தோன்றவில்லை.
- முதல்முதல் பௌத்த தருமத்தைப் பிரசாரம் செய்யும் சமயக் கணக்கர் இந்நாட்டில் தோன்றினர்.
- அசோகர் பௌத்த தருமத்தை எங்கும் பரப்ப எடுத்துக்கொண்ட முயற்சி வரலாற்று முதன்மை உடையது.
- திருவள்ளுவமாலை - ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
  அன்றென்பது ஆறு சமயத்தார்.
- இறைவன் நிலம், நீர், தீ, வளி, வெளி, ஞாயிறு, திங்கள், உயிர், என்னும் எண்வகைப் பொருளோடு புணர்ந்து, உலகமே உருவமாகத் தான் அதற்கு உயிராக நிற்பவன்.
- ஈசன் என்பது அவன்றன்.
- மணிமேகலை பௌத்த சமயத்தை கருப்பொருளாகக்கொண்டது.
- பாவை பாடிய வாயாற் கோவை பாடுக என திருசிற்றம்பலக் கோவையாரைப் மாணிக்கவாசகர் பாடியருளினர்.
- தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முதற் பகுதி வரை உள்ள காலம் இருண்ட காலமாகும்.
- தமிழ் நன்மக்களது சமய வாழ்வு, சமுதாய வாழ்வு, இலக்கியம் என்பவற்றில் பெரியதொரு சீர்திருத்தத்தையும், விழிப்பையும், மறு மலர்ச்சியையும் உண்டு பன்னிய இருபெரு மக்கள் திருநாவுகரசர், திருஞானசம்பந்தர்.
- சமண சமயம் சார்ந்தது அதனை வளர்த்து வந்த பல்லவப் பேர் அரசனாகிய மகேந்திரவர்மன் திருநாவுக்கரசராலும், கூன் பாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் திருஞான சம்பந்தராலும் சைவர் ஆயினர். இவர்கள் காலம் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும்.
- ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றியவர் சத்தியமூர்த்தி நாயனார்.
- பெரிய புராணத்திற்கு மூலமாகிய திருத்தொண்டத் தொகை எனப்படும் திருப்பதிகம் அருளிச்செய்தவர் சுந்தரமூர்த்திநாயனார்.

- திருநாவுகரசர், திருஞானசம்பந்தர், நம்பி ஆரூரர் இம்மூவர்களோடும் மாணிக்கவாசகரையும் சேர்த்து நால்வர் எனவும் சமய குரவர் எனவும், சைவ சமயாசிரியர் எனவும் வழங்குவது மரபு.
- திருநாவுகரசர், திருஞானசம்பந்தர், நம்பிஆரூரர், மாணிக்கவாசகர், ஆகிய நால்வரால் அருளிச்செய்யப்பெற்ற தேவார திருவாசகங்கள் தமிழ் மறைகள் எனப்படும்.
- திருமூலர் அருளிச்செய்தது தமிழ் மூவாயிரம் எனப்படும்.
- காரைக்கால் அம்மையார், கோச் சேங்கட்சோழர், கண்ணப்பர் சண்டேசர், என்னும் உண்மை நாயன்மார்களும் தேவார காலத்துக்கு முற்பட்டவர்கள் ஆவர்.
- திருஞானசம்பந்தர் அருளிச் செய்த திருப்பதிகங்கள் 1,2,3, ஆம் திருமுறைகள்.
- திருநாவுக்கரசர் அருளிச் செய்த பண்வகை, திருநேரிசை, திருவிருத்தம் என்பவை 4ம் திருமுறை. திருக்குறுந்தொகைத் திருப்பதிகங்கள் 5ம் திருமுறை திருத்தாண்டங்கள் 6ம் திருமுறை.
- நம்பி ஆரூரர் அருளிச்செய்த திருப்பதிகங்கள் 7 –ஆம் திருமுறை இவை ஏழும் சேர்த்து அடங்கன் முறை எனவும் திருநெறித் தமிழ் எனவும் வழங்கும்.
- திருவாதவூர் அடிகள் அருளிச்செய்த திருவாசகமும் திருக்கோவையாரும் 8 –ஆம் திருமுறை.
- திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதிமர் அருளிச்செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பவை 9 –ஆம் திருமுறை.
- திருமூலர் அருளிச்செய்த திருமந்திரம் மூவாயிரம் 10 –ஆம் திருமுறை.
- திருவாலவாயுடையார் (சிவபெருமான்) காரைக்காலம்மையார் (பேயார் எனவும் படுவர்) ஐயடிகள் காவன்கோன் நாயனார், சேரமான் நாயனார், நக்கீர தேவர், கல்லாட தேவர், கபில தேவர், பரணதேவர், இளம் பெருமான் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப்பிள்ளையார், நம்பியாண்டார் நம்பிகள் என்னும் பன்னிருவர் ஆசிரியர் அருளிச்செய்த நாற்பது பிரபந்தங்கள் 11 –ஆம் திருமுறை.

------****-----****----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம் (சைவம்)**

**பகுதி** : **சிவதீக்கை**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# சிவதீக்கை

- உயிருக்கு பாசத்தைக் கொடுத்து ஞானத்தை (அ) மெய்யுணர்வை ஏற்றுக்கொண்டு நன்மை பயப்பது - தீட்சை எனப்படும்,
- முதல்வனது சந்நிதியில் தீக்கை எனப்படுவது - தொழிற்பாடுஆகும்,
- முதல்வன் செய்யும் ஐந்தொழில்களுள் அருளல் எனப்பொருள்படுவது - தீக்கை.
- சைவத்திருமுறைகளை ஓதுவதற்கும் , சைவநெறியை ஒழுகுவதற்கும் தகுதியை உண்டு பண்ணுவது - சிவதீக்சை (அ) சிவதீக்கை எனப்படும்.
- முதல்வனால் தரப்படும் தீக்சையின் வகைகள் 2, அவை
  1). நிராதாரம்,
  2). சாதாரம்
- முதல்வன் தானே செய்யும் அருள்செயல் - நிராதார தீக்சை.
- அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோருக்கு அளித்தது - நிராதார தீக்சை.
- விஞ்ஞானகலருக்கும், பிரளயாகலருக்கும் இறைவன் அளித்த தீக்சை - நிராதார தீக்சை.
- சகலருக்கு முதல்வன் அளிக்கும் தீக்சை - சாதார தீக்சை.
- மாணிக்கவசகருக்கு அளிக்கப்பட்ட தீக்சை வகை - சாதார தீக்சை.
- சாதார தீக்சை பொதுவாக தீக்சை என அழைக்கப்படுகிறது.
  தீக்சையின் வகைகள் 3 அவை
  1). சமயதீக்கை
  2). விசேடதீக்கை
  3). நிர்வாணத்தீக்கை.

- ❖ சரியை தொடங்கும் முன் செய்யப்படுவது - சமயதீக்கை.
- ❖ கிரியை செய்யும் முன் செய்யப்படுவது - விசேசதீக்கை.
- ❖ யோகம், ஞானம் தொடங்கும் முன் செய்யப்படுவது - நிர்வாணதீக்கை,
- ❖ தீக்சை செய்யும் முறைகள் 7 வகைப்படும். அவை
    1. ஸ்பரிசதீக்சை
    2. நயனதீக்சை(திருநோக்கு)
    3. மானததீக்சை(பாவரன)
    4. வாசகதீக்சை(உரை)
    5. மந்திரதீக்சை(சாத்திரம்)
    6. யோகதீக்சை
    7. ஔத்திரிதீக்சை
- ❖ கோழி தன் முட்டையை அடைகாத்து குஞ்சை வெளவரச் செய்வது போல் குரு தன் கரத்தால் சீடனை தொட்டு சீடனுக்கு கர்மபாசம் நீங்கச் செய்து பக்குவப்படுத்துவது - ஸ்பரிசதீக்கை.
- ❖ மீன் தன் சினையிலிருந்து குஞ்சை வெளிவரச் செய்வதுபோல ஆசிரியன் தன் அருள்நோக்கால் பாச பந்தத்திலிருந்து மாணக்கனை விடுவித்தல் - நயனதீக்சை(திருநோக்கு).
- ❖ ஆமை தன் முட்டையை மனத்தால் நினைத்து கொண்டிருப்பது போல குரு தன் மாணவனது மனதை தன்வயப்படுத்தி அவனது கர்மத்தின் வலிமையை குறைய வைத்தல் - மானத தீக்சை(பாவனை).
- ❖ குரு உபதேசித்து மாணவன் தெளிதல் - வாசகதீக்சை(உரை).
- ❖ காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே என்று மருதவாணரின் உபதேசத்தால் துறவு பூண்டவர். இது வாசகதீட்சைக்கு எ.கா, ஆகும்.

- ❖ ''செத்தத்தின் வயிற்றல் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்'' என்று மதுரகவியாழ்வார் கேட்டதற்கு ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' என்று உரைத்தவர் - நம்மாழ்வார். இதுவும் வாசகதீக்சைக்கு எ,கா ஆகும்.
- ❖ குருவானவர் மந்திரத்தை உபதேசித்து அதை சீடர்கள் உச்சரிப்பதன் மூலம் அவர்களது மலங்களை அழியச்செய்வது - மந்திர தீக்சை.
- ❖ யோகம் என்பது - சேர்க்கை என பொருள்படும்,
- ❖ குரு மாணாக்கனை இறைவனோடு ஒன்ற வைப்பது - யோக தீக்சை.
- ❖ ஹோமா அக்னி மூலம் சீடனின் மலங்களை நீக்கச் செய்வது - ஔத்திரி தீக்கை,
- ❖ ஔத்திரி தீக்கை செய்யும் முறைகள் - 2வகை அவை
    1) கிரியாவிதி
    2) ஞானவழி.
- ❖ குண்டமண்டலங்களை ஹோமத்தோடு செய்வது - ஞான வழி.
- ❖ குண்டமண்டலங்கள் இன்றி ஹோமத்தை மனத்தால் செய்வது - ஞானவழி.
- ❖ ஔத்திரி தீக்கையின் வகைகள் - 3 அவை சமயதீக்கை, விசேடதீக்கை, நிருவாண தீக்கை.
- ❖ ஔத்திரியின் வகை மூன்றும் தனித்தனியே நர்பீசம், சபீசம் என இருவகைப்படும்,
- ❖ உபதேசிக்கும் மந்திரங்களை பீச அக்கரங்களன்றி உணர்த்துவது - நிர்ப்பீசம், அதாவது இது சமய ஆசாரங்களை ஓம்ப ஒழுக முடியாதவர்களுக்கு செய்யப்படுவது.
- ❖ நிர்பீசத்தின் வேறுபெயர் - நிரதிகாரை.
- ❖ மந்திரங்களை பீசங்களுடன் உணர்த்துவது - சபீசம்,

- சபீசத்தின் வேறுபெயர் - சாதிகாரை,
- வேள்விச்சாலை அமைத்து, தீயுருவாய் விளங்கும் இறைவனை மாணாக்கன் வழிபடும்படி செய்து ஹோமத்தால் தூய்மைப்படுத்துவது - சமயதீக்கை.
- சமயதீக்கையின வேறுபெயர் - மந்திராதிகாரை.
- சமயதீக்கை பெற்ற மாணாக்கனை சிவபுத்திரன் ஆகசெய்வது - விசேடதீக்கை.
- விசேடதீக்கையின் வேறுபெயாக்ள் - அர்ச்சனாதிகாரை, யோகாதிகாரை.
- மாணாக்கனின் சஞ்சித கன்மத்தை வலுவிழக்கச் செய்து முல மலத்தின் வலியை நீக்கி, முப்பொருள் பற்றிய மெய்யுணர்வை பொதுவகையால் விளங்கச்செய்வது - நிர்வாண தீக்கை.
- நிர்வாண தீக்கை பெற்றோர் மேற்கொள்ளும் நெறி - ஞானநெறி.

------****-----*****-----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

பிரிவு : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

பாடம் : **இந்து மதம்**

பகுதி : **<u>சித்தர்கள்</u>**


**காப்புரிமை**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி** VIIB & VIII **தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.**

**எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.**

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# சித்தர்கள்

| வ. எண் | சித்தர் பெயர் | தனி நூல்கள் | பெரிய ஞானக் கோவை | யாப்பு | தனித் தன்மைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | அகத்தியர் | பெருந்திரட்டு, சிவஜாலம், விதிநூல், மூவகைக் கண்டம், செந்தூரம் 300, வாகடம், செந்தூர முறை, மணி 400, நாடி சாஸ்திரம், வைத்திய சிகாமணி, கரிசல் பாஸ்பம் 200, ஆயுள் வேத பாஷ்யம், வைத்தியக் கும்மி, அகத்தியர் ஞானம் 12. | அகஸ்தியர் ஞானம் 5, அகஸ்தியர் ஞானம் 6, அகஸ்தியர் ஞானம் 9, அகஸ்தியர் ஞானம் 16, அகஸ்தியர் ஞானம் 13, 5 பாடல் தொகுதிகள் 52 பாடல்கள் | காப்புச் செய்யுள் மட்டும் அறுசீர் விருத்தம், இதர பாடல்கள் எண்சீர் விருத்தம் | ஜோதிடம், யோகம் பற்றிய பாடல்கள் |
| 2 | அகப்பேய்ச் சித்தர் | - | 90 பாடல்கள் | சிந்து | மறை சொற்களைக் கொண்ட பாடல்கள் |
| 3 | அழுகுணிச் சித்தர் | - | 32 பாடல்கள் | கலித்தாழிசை | யோகம் ஞானம் பற்றிய பாடல்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | இடைக்காடர் | ஊசிமுறி, அறுபது வருஷப் பலன், இடைக்காடர் ஞானம், சாரீரம் (வைத்திய நூல்) | 130 பாடல்கள் | சிந்துகள், கண்ணிகள் | முல்லை நிலம், இடையர்கள் வாழ்க்கையக் கூறல் |
| 5 | இராமதேவர் | - | பூஜாவிதி (10பாடல்கள்) | எண்சீர் விருத்தம் | குண்டலினயக் குறிப்பிடுதல் |
| 6 | உரோம ரிஷி | உரோம ரிஷி 100, உரோம ரிஷி 500, பட்சி சாஸ்திரம் | 13 பாடல்கள் | எண்சீர் விருத்தம் | சொரூப முக்தியின் தன்மையைக் கூறல் |
| 7 | சுடுவெளிச் சித்தர் | ஆனந்தக் களிப்பு (இசைப்பா) | 34பாடல்கள் | - | சிவனே சிறந்த தெய்வம் எனக் கூறுதல் |
| 8. | கருவூரார் | கருவூரார் பூஜா விதி 31 பாடல்கள் | - | எண்சீர் விருத்தம் | யோக மார்க்கத்தைச் சிறப்பித்தல் |
| 9. | காகபுகண்டார் | - | காகபுகண்டார் ஞானம் 80, காகபுகண்டார், உபநிடதம் 31, காகபுகண்டார், காவியம் 33, காகபுகண்டார் குறள் | எண்சீர் விருத்தம், எண்சீர் விருத்தம், எண்சீர் விருத்தம், குறள் வெண்பா | யோக மார்க்கத்தைச் சிறப்பித்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | குதம்பைச் சித்தர் | - | 32 பாடல்கள் | கண்ணிகள் | பாடல் கருத்துகள் மறை மொழியிலும் குழூஉக் குறியிலும் உள்ளன. |
| 11 | கொங்கணார் | கொங்கணார் கடைக் கண்டம் ஞானம் 100, குளிகை தரிகாண்டம் | வாலைக் கும்மி (110 பாடல்கள்) | | கும்மிப் பாடல்கள் |
| 12 | சட்டைமுனி | சட்டைமுனி ஞானம் 4, கைலாயக் கம்பளிச் சட்டை, முனி நாயனார் முன் ஞானம் 100, கைலாயக் கம்பளிச் சட்டை முனி நாயனார் பின் ஞானம் 100 | | எண்சீர் விருத்தம் | சித்தி அடையும் முறையும், யோகமும் கூறல் |
| 13 | சுப்பிரமணி யார் | சுப்பிரமணியார் ஞானம் 200, சுப்பிரமணியார் ஞானம் 500 | | எண்சீர் விருத்தம் | வாசி யோகத்தின் சிறப்பு, வாழிமுறை கூறல் |
| 14 | திருமூல நாயனார் | திருமூல நாயனார் ஞானம் (11 பாடல்கள்) | | எண்சீர் விருத்தம் | அந்தாதி அமைப்பில் உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | திருவள்ளு வர் | திருவள்ளுவர் ஞானம் (19 பாடல்கள்) | | 6 பாடல்கள், கட்டளைக் கலித்துறை, 2 பாடல்கள், தரவுக் கொச்சகக் கலிப்பா, 11 பாடல்கள், நேரிசை வெண்பா | காப்புச் செய்யுள் தவிர வேறு இடங்களில் இறைவனைப் பெயரிட்டு அழைக்கும் பாடல் இல்லை. |
| 16 | நந்தீஸ்வரார் | | 12 பாடல்கள் | எண்சீர் விருத்தம் | எதிரேயுள்ள மாணவர்க்கு உரைப்பது போன்றுள்ளது |
| 17 | பாம்பாட்டிச் சித்தர் | சித்தர் ஆருடம், பாம்பாட்டிச் சித்தர் பாடல் | | முதல் 111 பாடல்கள், நான்கடிக் கண்ணி, 112 முதல் 129 பாடல்கள், எண்சீர் விருத்தம் | இவரது பாடல்கள்தா ன் மக்களால் மிகுதியாகப் பாடப் படுகின்றன. |
| 18 | வால்மீகர் | | சூத்தி ஞானம் (16 பாடல்கள்) | எண்சீர் விருத்தம் | வாசி யோகத்தின் சிறப்புக் கூறப்பட்டு கிறது. |

------********-----*******-----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

பிரிவு : TNPSC Group VIIB & VIII தேர்வு

பாடம் : இந்து மதம்

பகுதி : சாத்திரம்


**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# சாத்திரம்

❖ சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்காகும்.

”உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தரவருட்
பண்பு வினா போற்றிகொடி பாசமிலா
நெஞ்சுவிடு

| | சாத்திரங்கள் | இயற்றியவர்கள் |
|---|---|---|
| 1. | திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் |
| 2. | திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் |
| 3. | சிவஞானபோதம் | மெய்கண்ட தேவநாயனார் |
| 4. | சிவஞான சித்தியார் | அருணந்தி சிவாசாரியார் |
| 5. | இருபா இருபது | ” |
| 6. | உண்மை விளக்கம் | மனவாசகம் கடந்தார் |
| 7. | சிவப்பிரகாசம் | உமாபதி சிவம் |
| 8. | திருவருட்பயன் | ” |
| 9. | வினாவெண்பா | ” |
| 10. | போற்றிப்பஃறொடை | ” |
| 11. | கொடிக்கவி | ” |
| 12. | நெஞ்சுவிடு தூது | ” |
| 13. | உண்மை நெறி விளக்கம் | ” |
| 14. | சங்கற்ப நிராகரணம் | ” |

❖ இவற்றை மெய்கண்ட சாத்திரங்கள் என்பா.

❖ இப்பதினான்கு சாத்திரங்களில் தலை சிறந்தது சிவஞானபோதமாகும்.

❖ சிவம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருள்.

- ஞானம் என்றால் அதனை அறிதல்.
- போதம் என்றால் தெளிதல்.
- சிவஞானபோதம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய கடவுளை அறிந்து தெளிதலுக்குரிய நூல் எனப் பொருள்படும்.
- இது மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பட்டது. இதில் பன்னிரண்டு சூத்திரங்கள் உள்ளன.
- பதியின் உண்மையினை முதற்சூத்திரமும், பதியின் இலக்கணத்தை இரண்டாம் சூத்திரமும், பதியின் சிறப்பிலக்கண சூத்திரமும் உணர்த்தும்.
- பசுவின் உண்மையை மூன்றாம் சூத்திரமும், பசுவின் பொது இலக்கணத்தை ஏழாம் சூத்திரமும் இயம்பும்.
- உண்மையை இரண்டாம் சூத்திரத்தாலும், பாசத்தின் இலக்கணத்தை நான்காம் சூத்திரத்தாலும், பாசத்தின் சிறப்பிலக்கணத்தை ஐந்தாம் சூத்திரத்தாலும் உணரலாம்.
- ஞானத்தினை உணரும் முறையை எட்டாம் சூத்திரத்தாலும் ஆன்மசுத்தியை ஒன்பதாம் சூத்திரத்தாலும், பாச நீக்கத்தை பத்தாம் சூத்திரத்தாலும், சிவப்பற்றினை பதினொன்றாம் சூத்திரத்தாலும், அணைந்தோர் தன்மையை பன்னிரண்டாம் சூத்திரத்தாலும் எளிதில் தெரிந்துக் கொள்ளலாம்.
- இதனை அடிப்படையாகக் கொண்டே ஏனைய சைவ சாத்திரம் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளன.
- சிவஞானபோதத்திற்கு பெருமாள் விருத்தி, சிவஞான போதச் சிற்றுரை, சிவஞானபோத மரபு எனும் உரை நூல்கள் உள்ளன. சிவஞானபாடியத்தை திராவிட மகாபாடி எனக் கூறுவர்.
- அப்பாடியம் விக்கிரமசிங்கபுரத்தில் இருந்தவரும், திருவாவடு ஆதீனத்தைச் சேர்ந்தவருமான மாதவச் சிவஞான சுவாமிகளால் எழுதப்பட்டது.
- சிவஞானபோதத்தை ஹாய்சிங்டன், பையட்பாதிரியார், கார்டன் மாத்யூஸ், நல்லசாமிப்பிள்ளை, டேவிட் நவமணி நாடார்,

சிவபாதசுந்தரம் முதலியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

- இச்சிவஞானபோதத்துக்கு அடுத்தபடியாகத் திகழும் சிவஞான போதத்தைத் தழுவி எழுதப்பட்டதும் ஆகிய பெருநூல் சிவஞான சித்தியார் என்பதாகும்.
- இதனை இயற்றியவர் அருணந்தி சிவாச்சாரியார் .
- இவர் மெய்கண்டாரின் தந்தையின் குரு.
- ஆயினும் மெய்கண்டாரின் மாணவரானார். சித்தியார் சுபக்கம், பரபக்கம் என பிரிவுகள் கொண்டது.
- இதற்கு சிவஞான யோகியரும், திருவாவடுதுரை ஆதீனத்தில் பதினாறாம் பட்டத்தில் வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி தேசிகரும் எழுதிய உரைகள் உண்டு.
- மேலும் நிரம்ப அழகிய தேசி மறைஞான தேசிகர், சிவாக்கிரயோகி ஞானப் பிரகாசர் ஆகியோர் சுபக்கத்திற்கு தனித்தனியே உரை எழுதியுள்ளார்கள்.
- பரபக்கத்திற்கு தத்துவப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் உரை எழுதியுள்ளார்.
- சித்தியாரின் பெரும்பகுதிகளை டாக்டர் கிராண்ட், நல்லசாமிப் பிள்ளை, சிவராமன் முதலிய அறிஞர்கள் ஆங்கிலத்தில் ஆக்கியுள்ளார்கள்.
- B.D.ஜெயின் என்பவர் இந்தி மொழியில் வெளியிட்டிருக்கிறார்.
- இருபா இருபதில் குருவுக்கும் மாணவனுக்கும் உள்ள சம்பாடணை முறையில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- திருவுந்தியாரில் முத்திமார்க்கம் நன்கு விளக்கப்பட்டுள்ளது.
- இதனைத் தழுவி வெளிவந்ததே திருக்களிற்றுப்படியாராகும்.
- மனவாசகம் கடந்தார் இயற்றிய உண்மை விளக்கம் சித்தாந்த உண்மைகளை நன்கு விளக்குகிறது.
- உமாபதி சிவாசாரியார் இயற்றியவை ஏனைய எட்டு நூல்களுமாகும்.

- சிவப்பிரகாசம் சிவஞானபோதத்தின் சார்பு நூலாகும்.
- சைவ நூல்களின் இயல்பும், தீட்சை வகைகளும் இதில் கூறப்பட்டுள்ளன.
- இது பொது, சிறப்பு என இரு வகைப்படும்.
- நூறு விருத்தங்களால் ஆகியது.
- பசு, பதி, பாச இலக்கணம் நன்கு இதில் கூறப்பட்டுள்ளது.
- திருவருட்பயன் திருக்குறள் போன்று குறள் வெண்பாக்களால் ஆகியது. பத்து அதிகாரங்களைக் கொண்டது. வினா வெண்பா 13 பாக்களால் ஆகியது.
- ஆசிரியர் தம் குருநாதராகிய மறைஞான சம்பந்தரிடம் சாத்திர உண்மைகளை வினவும் முறையில் எழுதப்பட்டது.
- போற்றிய பஃறொடை தமக்கு சிவஞானம் நல்கிய குருமூர்த்தியை வாழ்த்திய பாடல்கள் அடங்கியவை.
- கொடிக்கவி சில மந்திரங்களின் இயல்பை உணர்த்துவது.
- ஏறாத தில்லைக்கொடியை ஏற்றியது. நெஞ்சுவிடு தூது ஆசிரியர் தம் குருவிடம் மாலை வாங்கி வரும்படி தனது நெஞ்சை தூது விடும் முறையில் பாடப்பட்டது. உண்மை நெறி விளக்கம் முற்கூறிய தசகாரியங்களை விளக்குவது.
- சங்கற்ப நிராகரணம் சமயக் கொள்கைகளைக் கூறி வேற்றுச் சமயக் கொள்கைகளின் வேறுபாடுகளை விளக்குவது.

------*********------*******----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம்**

**பகுதி** : **குரு**

## காப்புரிமை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# குரு

- கு+ர்+உ=“கு” காரத்திற்குச் சித்தியைக் கொடுப்பவன் எனவும், ”ர” காரத்திற்குப் பாபத்தைத் தகிப்பிக்கும் தீயென்றும், ”உ” காரத்திற்கு சிவன் என்றும் பொருள்.
- இம்மூன்றும் நிறைந்தவனே குருவாவான். குரு மலத்தை நீக்குபவர். கு-மலம். ரு-நீக்குபவர்.
- குரு தன் சீடனுக்குச் செய்யும் உபகாரத்தை தீஷை எனக் கூறுவர்.
- தீ+க்ஷா=தீக்ஷா. ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தை நீக்குவது என்பது இதன் பொருளாகும்.
- தீக்கை சமய தீக்கை, விசேட தீக்கை, நிர்வாண தீக்கை, என மூவகைப்படும்.
- சரியை மார்க்கத்தைத் தொடங்குமுன் செய்யப்படும் தீக்கை சமய தீக்கை எனப்படும்.
- கிரியைக்கு விசேட தீக்கையும், யோகத்திற்கும் ஞானத்திற்கும் நிர்வாண தீக்கையும் உரியன.
- தீக்கை செய்யும் முறை ஏழுவகைப்படும். அவை ஸ்பர்சம், நயனம், மானதம், மந்த்ரம், யோகம், ஔத்தி என்பனவாம்.

1. **ஸ்பர்ச தீக்கை:**

குரு தனது கரங்களால் சீடனைத் தொடுவது ஸ்பர்ச தீக்கை எனப்படும்.

2. **நயன தீக்கை:**

குரு தனது அருட்பார்வையால் மாணவனை நோக்குதல் நயன தீக்கை எனப்படும். அருட்பார்வையால் திருவருள் பெருகும்.

3. <u>மானத தீக்கை:</u>

- குரு தன் மனத்தால் மாணாக்கனது மனத்தைத் தன்வயப்படுத்துகிறார்.
- மாணாக்கனது மனத்தைப் பற்றியுள்ள கர்மத்தின் வலி இதனால் குறைகின்றது.
- கடற்கரையில் குழி தோண்டி முட்டையிட்ட ஆமை அம்முட்டையை மனதில் நினைந்து வேகமாய்ப் பாய்ந்துவரும் மனோவலியால் முட்டை குஞ்சாவதைப்போல, ஆசாரியன் மனோசக்தியால் சீடனை நினைக்கச் சீடன் பரிபக்குவம் எய்துகின்றான்.

4. <u>வாசக தீக்கை:</u>

வாசகம் என்பது உபதேசம். இது குரு உபதேசம் எனப்படும். அறிவுடையோர் குரு உபதேசத்தால் தெளிவடைவர்.

5. <u>மந்த்ர தீக்கை:</u>

குருவானவர் ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்து முதலிய மந்திரங்களைச் சீடனுக்கு உபதேசித்து அருளுவதாம்.

6. <u>யோக தீக்கை:</u>

யோகம் என்பது சேர்க்கை. குரு மாணாக்களை இறைவனோடு ஒன்ற வைப்பதால் இது யோக தீக்கை

எனப்படும். யோக முறைகளைப் பயிற்றுவித்தலும் இத்தீக்கையின் பாற்படும்.

7. **ஔத்திரி தீக்கை:**

- இது ஹோமகுண்டத்தில் ஹோமாக்கினியில் மாணவனைப் பற்றி தின்ற மலங்களை ஈர்த்துத் தகிப்பித்து அவனைப் பரிசுத்தப் படுத்துவதாகும்.
- குண்ட மண்டலங்களை ஹோமத்தோடு செய்வது கிரியாவதியென்றும், குண்டமண்டலங்களின்றி ஹோமத்தை மனதால் செய்வது ஞானவழியென்றும், இத்தீக்கை இருவகைப்படும்.
- ஆதலின் இந்துக்களாய்ப் பிறந்த நாம் அனைவரும் அவரவருக்குகந்த தீக்கை முறைகளைக் குருவின்பாற் பெற்று அதனைக் கைக்கொண்டொழுகி, மலம் நீங்கி சுத்தமெய்தி இறைவன் மலரடி அடைந்து இன்புறுவோமாக.

------***------***----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம் (வைணவம்)**

**பகுதி** : **<u>கீதையின் உட்பொருள்</u>**

**காப்புரிமை**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி** VIIB & VIII **தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.**

**எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.**

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# கீதையின் உட்பொருள்

- பாரத யுத்த ஆரம்ப காலத்தில், கலங்கிய அர்ஜுனன்.
- நீ, ஆசிரியன், நான் உனக்குச் சிஷ்யன் எனக்கு ஹிதத்தை உபதேசம் செய்யவேண்டும் என்று சிரம் பற்றி வேண்டிக்கொள்ள, பகவான் அவனை வியாஜமாகக்கொண்டு அனைவருக்கும் ஹிதங்களை கீதையில் உபதேசிக்கிறான் என்னும் வரலாறு முதல் முதலில் அனுபவிக்கத்தக்கதாம்.
- அங்ஙனம் உபதேசம் செய்யப் பெற்றுள்ள ஹிதங்களுள், பக்தி ப்ரபத்தின் முக்கியங்களாம்.
- வேதன், மனிதன், பசு, பஷி, புல், பூண்டு, முதலிய வ்யஷ்டிப் பொருள்களைப் படைப்பதற்கு, நிலம், நீர், தீ, கால்(காற்று), விண்(ஆகாயம்) என்னும் ஐந்து பூதங்களும், கண் முதலிய ஞானேந்திரியங்கள், வாக்கு முதலிய கருமேந்திரியங்கள், மனம் ஆகிய பதினோரு இந்திரியங்களும் அஹங்காரமும், மஹத்தத்துவம் ஆக இவ்வெட்டுப் பொருள்களும் காரணமாய் இருப்பவையாம்.
- நாராயணனுடைய பூர்ணாவதாரமாகிய கண்ணனே சுவாமி, காரணன், குணக்கடல், ஆத்மா என்பது தெளிவாம்.
- எல்லாப் பொருள்களுக்கும் ஆத்மா எம்பெருமான் என்றால், எம்பெருமானுக்கு எல்லாப் பொருள்களும் சரீரம் என்பது எல்லாருக்கும் கூறாமலேயே நன்கு விளங்கும்.
- பகவத் கீதை என்பதற்கு கடவுளின் பாடல்கள் என்று பொருள்படும்.

- ராஜாஜியின் கைவிளக்கு

  பாலகங்காதர திலகரின் - தர்ம யோகம்

  மகாத்மா காந்தியின் - அநாஸக்தி யோகம்

  போன்றவை பகவத் கீதை உரைகளாகும்.
- உலகிலுள்ள பல மொழிகளில் பகவத் கீதை மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.
- ஆங்கிலத்தில் கீதையின் முதல் மொழிபெயர்ப்பு கிழக்கிந்தியக் கம்பெனியரால் செய்யப்பட்டது.
- அம்மொழிபெயர்ப்பு நூலுக்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) எனும் ஆங்கில ஆட்சியாளர் முன்னுரை அளித்ததில்

> "இங்கிலாந்து ஒரு காலத்தில் இந்தியாவை இழக்க நேரிட்டாலும் இந்தியாவில் தோன்றிய பகவத்கீதையின் கோட்பாடுகளை இங்கிலாந்து நடைமுறைக்குக் கொண்டுவருமானால் இங்கிலாந்து என்றென்றும்

- கீதை என்னும் சொல் பாடப்பட்டது அல்லது உபதேசிக்கப்பட்டது என்ற பொருள் கொண்டது.
- கண்ணன் அர்ஜுனனுக்கு போர்க்களத்தில் உபதேசித்தது பகவத் கீதையாகும்.
- தமிழ் நாட்டில் பெரியார் தலைமையிலான திராவிட இயக்கத்தினர் பகவத் கீதையை கடுமையாக எதிர்த்தனர்.
- கீதை வருணாசிரம கருத்துகளுக்கு முட்டு கொடுக்கிறது என்று பகுத்தறிவாளர்கள் கூறி வருகின்றனர்.

- கீதையில் மொத்தம் 18 அத்தியாயங்கள் உள்ளன.
- கண்ணன் அர்ஜுனனுக்கு எடுத்துரைத்த வாதங்கள் ஐந்து.

1. வேதாந்தம்,
2. சுயதர்மம்,
3. கர்மயோகம்,
4. பக்தியோகம்,
5. ஞானயோகம்.

## வேதாந்தம்

- இதில் கிருஷ்ணர் மாயை, கர்மா, பிம்பம், ஆசை, பிறவிச்சுழற்சி, மறுபிறவி, சொர்க்கம், தாந்திரீகம், தவம் ஆகியவை பற்றி எடுத்துரைக்கிறார்.

## சுயதர்மம்:

- " அர்ஜுனா உன்னுடைய சுயதர்மம் சத்திரியனுக்கு உகந்த தருமப்போராகும், இந்தப் போருக்காக பல ஆண்டுகள் காத்திருந்தாய், இப்போது நீ பின்வாங்குவது சரியன்று" என்று உபதேசிக்கிறார்.

## கர்மயோகம்:

- ஒவ்வொரு மனிதனும் கடமையைச் செய்வதில் விருப்போ, வெறுப்போ கொள்ளக் கூடாது. கடமையைக் கடமைக்காகவே

செய்ய வேண்டும். கடமையைச் செய்வதற்கு மட்டுமே உனக்கு அதிகாரம் உள்ளது என்று உபதேசிக்கிறார்.

## பக்தியோகம்:

பக்தியோகத்தின் பிரிவுகள் ஐந்து வகையாகும்

1. பற்றுடன் கூடிய பக்தி
2. பற்றில்லாமல் கூடிய பக்தி
3. சகுன உபாசன பக்தி
4. நிர்குண உபாசன பக்தி
5. ஞானயோக பக்தி

## ஞானயோகம்:

- ஞானமும் யோகமும் ஒன்று சேருவதே ஞானயோகம் ஆகும். தன்னைப் பற்றிய அறிவை அடையும் சாதனையாகும்.

-----***-----***-----

**தமிழ்நாடு அரசு**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம்**

**பகுதி** : **கடவுள்-ஓம்**

**காப்புரிமை**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி** VIIB & VIII **தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.**

**எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.**

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# கடவுள்

- கடவுள் என்ற பதம் கட என்னும் பகுதியையும் உள் என்னும் தொழிற் பெயர் விகுதியையும் கொண்டது.
- கடவுள் என்பதற்கு எல்லாவற்றையும் கடந்தவர் எனப் பொருள் கூறலாம்.
- எவற்றின் உள்ளும் கடந்து நிற்பவர் எனவும், எல்லா அண்டங்களையும் அவற்றிலுள்ள எல்லா சராசரங்களையும் கடவுகின்றவர் அல்லது இயக்குகின்றவர் எனவும் பொருள் கூறுவர்.
- எண்ணில்லாத அண்டங்கள் பரவெளியில் தாமே சுழன்றும், அவற்றுள் சிலவற்றை சில சுற்றியும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.
- அவை ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாமல் ஒரு வரையறைக்குட்பட்டு சஞ்சரிக்கின்றன என்று பூகோள, ககோள வல்லுநர்கள் கூறுகின்றனர்.
- எங்கும் நிறைந்த அணுக்கள் ஏக தாளத்தில் ஆடிக்கொண்டே இருக்கின்றன.
- இவ்வாறு இவற்றை ஆட்டுவிப்பது எது எனத் தெரியாமல் விஞ்ஞான வல்லுநர்கள் வியப்படைகின்றனர்.
- இதனை உற்று நோக்குமிடத்து மனித அறிவுக்கு எட்டாத ஒரு மகத்தான சக்தி உண்டு என்பதும், அதுவே இவ்வற்புத வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறதெனவும் விளங்கும்.
- இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்ப்பிராணிகளும், தோன்றி வாழ்ந்து மடிகின்றதை நாள்தோறும் நாம் பார்க்கிறோம்.
- இவை ஆதிகாலந்தொட்டே நடந்து வருகின்றன. இத்தொழில் ஒழுங்காய் நடக்க தோன்றாதவனும், அழியாதவனும், என்றும் நின்று நிலவுகின்றவனுமாகிய ஒருவன் அவசியம் வேண்டும். அவனே கடவுளாவான்.
- கடவுளுக்கு ஓர் நாமம், ஊர், குணம், வடிவம், குறி முதலியன இல்லை.
- அவர் நமது உடம்பினுள் உயிர் இருப்பது போல உயிரினுள் உயிர்க்குயிராய் உறைகின்றார்.

- எல்லா உயிர்களுக்கும் உடம்பு உறைவிடம். இறைவனுக்கு நமது உயிர் உறைவிடம்.

> "எவ்வுயிரும் பராபரன்றன் சந்நிதியதாகும்
> இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோவில் "

என ஆன்றோர் கூறியுள்ளனர்.

- சூரியன் ஒருவனாக இருந்து எல்லா உயிர்களுடைய கண்களுக்கும் ஒளியைக் கொடுப்பது போல கடவுள் ஒருவராய் இருந்து எல்லா உயிர்களுக்கும் விளக்கம் தருகிறார்.
- அக்கடவுள் கண்ணொளியையும், உள்உணர்வும் போல நம்முள் நின்று அரிய கருத்துகளை அறிவிக்கின்றனர்.
- இத்தகைய அருவநிலையில் இருக்கும் கடவுள் தனதருளால் உருக்கொண்டும் வருகிறார்.
- கடல்நீர் சூரிய வெப்பத்தால் நீராவியாக மாறுகிறது.
- அந்நீராவியே மேகமாகி மழையாய்ப் பொழிகிறது.
- நீராவி நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை.
- அது மேகமாகி மழையாகமற்போனால் அந்த நீராவியால் நமக்கு ஒரு பயனுமில்லை.
- அது போல் கடவுள் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கிறார்.
- அவர் மழை போல உருக்கொண்டு வராமற்போனால் நமக்கு அவரால் ஒரு பயனையும் அருள முடியாது. அதன் பொருட்டே கடவுள் அருள் உருக்கொள்ளுகிறார்.

## அளவைகள் காண்டல் அளவை

- கடவுளைக் கண்ணால் காணமுடியவில்லை. கண்ணால் காணத்தகுந்த பொருள்களையே நாங்கள் உண்டென நம்புவோம். அல்லாதவற்றை நம்பமாட்டோம் எனச் சிலர் கூறுகின்றனர்.
- ஆனால் கடவுளை கண்ணால் கண்ட பெரியோர்கள் இந்து மதத்தில் பலர் உண்டு
- பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே என சம்பந்தர் கடவுளைத் தந்தைக்குச் சுட்டிக்காட்டியள்ளார்.
- கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் என அப்பரும்,

- கண்ணால் யானும் கண்டேன் காண்க என மாணிக்கவாசகரும் கூறியுள்ளனர்.
- கடவுளிடத்தில் ஈடும் எடுப்புமில்லாத பத்தியுடைய பரமஞானிகள் அவரை நேரில் காணமுடியுமே தவிர சமயஞானமும், சமயவாழ்வும் இல்லாதவர்களால் அவரை என்றும் காணமுடியாது.
- கண்ணால் கண்டால் அன்றி நம்பமாட்டோம் என இவர்கள் கூறுவது தவறு.
- கடவுள் விறகில் தீ போலவும் பாலில் நெய்போலவும், மணியில் ஒலிபோலவும் மறைந்து உறைகின்றார்.
- கடவுளிடத்து உறவாகிய கோலினை நட்டு உணர்வாகிய கயிற்றினால் முறுக வாங்கிக்கடைய முன்னிற்பார்.

## கருதல் அளவை:

- கண்ணால் காணமுடியாது போயினும் அனுமானத்தால் அவர் உண்டென உணரலாம்.
- மலையில் தீயுண்டு என்பதை புகையால் அறிவதுபோல கடவுளின் அரிய செயல்களைக் கண்டு அவர் உண்டென அறியலாம்.

## நூலளவை:

- காட்சியாலும் அனுமானத்தாலும் அறியமுடியாத அரிய விஷயங்களை நூல்களால் உணரலாம். நாம் நமக்குத் தெரியாத இடங்களுக்குப் பிரயாணம் செய்யும்பொழுது கால அட்டவணை முதலியவற்றை நம்புகிறோம்.
- இச்சிறிய யாத்திரைக்கு இச்சிறிய நூலை நம்புவது போல இறைவனை பற்றி அறிவதற்கு அவனைப்பற்றிக் கூறும் நூலை ஏன் நம்பக்கூடாது இரயில்வே வழிகாட்டியை நம்பாதவனுக்கு யாத்திரை செய்ய முடியாததைப்போல சமயநூல்களைத் தெரியாதவனுக்கு கடவுளைப்பற்றியும் தெரிய முடியாதாகிவிடும்.
- நாம் ஒரு நதியில் நீராடுவதால் நதிக்கு எவ்விதப் பயனும் இல்லாதது போலவும் குளிர் மாற்றும் தீயின் அருகில் இருந்து

நாம் குளிர்காய்வதால் தீக்கு எவ்விதப்பயனும் இல்லாதது போலவும் நாம் கடவுளை வணங்குவதால் கடவுளுக்கு எவ்விதப் பிரயோஜனமும் ஏற்படுவதில்லை.

- தண்ணீரில் குளிப்பதாலும் தீக்காய்வதாலும் உண்டாகும் நன்மை நமக்கேயாகும். ஆதலால் கடவுளை வணங்குவதால் நாமே நன்மை பெறுகிறோம் கடவுளுக்கு அருவம், அருவுருவம், உருவம் எனும் மூன்று நிலையுண்டு.
- அருவத்தில் அவர் சிவம், சக்தி, நாதம், விந்து எனவும் ரூபாரூபத்தில் சதாசிவம் எனவும் ரூபத்தில் மகேசுவரன், உருத்திரன், மால், அயன் எனவும் ஒன்பது விதமான பெயர்களைப் பெறுகிறார். இதனை சிவஞான சித்தியார்,

" சிவம் சக்தி நாதம் விந்து சதாசிவன் திகழு மீசன்
உவந்தருள் உருத்திரன்தான் மால் அயன் ஒன்றின் ஒன்றாய்ப்
பவந்தரும் அருவம் நாலு இங்கு உருவம் நாலு உபயம் ஒன்றா
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர் " - எனக் கூறும்.

<u>கடவுளின் ரூபங்கள் 9 வகை:</u>

| அரூபம் | ரூபாரூபம் | ரூபம் |
|---|---|---|
| 1.சிவம் | 5.சதாசிவம் | 6.மகேசுவரன் |
| 2.சக்தி | | 7.உருத்திரன் |
| 3.நாதம் | | 8.மால் |
| 4.விந்து | | 9.அயன் |

- இதனால் ஏகநாயகனே, சக்தியை எழுப்பி இரண்டுருவாகவும் சக்தியோடு சேர்ந்து சதாசிவம் ஆகவும், நாத விந்துவாகவும், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன், எனும் நான்கு மூர்த்திகள் ஆகவும், நவந்தரு பேதமாக நடிக்கின்றான் என்பது விளங்குகின்றது.
- இவ்வுண்மையை உணர்ந்து சிவசக்தி வாதம். சைவ வைணவ பேதம் முதலியவற்றை விட்டு இந்துக்கள் அனைவரும்

ஐக்கியப்பட்டு அவரவர்களுக்குரிய மூர்த்திகளை வழிபட்டு அனைத்தும் ஏகநாயக வழிபாடேயாகும் எனக்கொண்டு வாழ்வார்களாக.

## ஓம்

- ‘ ஓம் ’ எனும் பிரணவம் ஓர் எழுத்துப்போல் தோன்றினும் அதில் ‘அஉம்’ எனும் மூன்று எழுத்துக்கள் அமைந்திருக்கின்றன. வடமொழி, தென்மொழி, தெலுங்கு, கன்னடம், முதலிய மொழிகளில் எல்லாம் அகரமே முதலெழுத்தாக அமைந்திருக்கின்றது. அவற்றுள் “ அ ஆ அங்காப்புடைய ” வாயைத் திறக்க ‘ அஆ’ பிறக்கும்.
- அகரம் தனித்து நின்றும் எல்லா எழுத்துகளின் உள்ளும் கலந்து நின்றும் ஒலிக்கின்றது. ஆதலால் அகரம் முதன்மைபெற்றது. அதனாலேயே வள்ளுவர்,

“ அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு ”- எனக்

- இதன், பொருள் எழுத்துக்கள் அகரத்தை முதலாக உடையன. அதைப்போல உலகு இறைவனை முதலாக உடையது.
- அகரம் தனித்தும், எல்லா எழுத்துக்களின் உள்ளும் கலந்து நின்று ஒலிப்பதைப்போல இறைவனும் தனித்தும், எல்லா உயிர்களின் உள்ளும் கலந்தும் விளங்குகின்றார்

“ அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து ”

என்று திருவருட்பயன் இக்கருத்தை விளக்குகின்றது.

- “ உ ஊ ஒ ஓ ஔ இதழ்குவிலே ” , ‘ உ ஊ ஒ ஓ ஔ ’ எழுத்துக்கள் இதழ் குவிவதால் உண்டாகின்றன.
- “ மேல் கீழ் இதழ் உற பம பிறக்கும்” மேலுதடும் கீழுதடும் சேர்வதால் ‘ப ம’ பிறக்கின்றன.

- வாயைத் திறந்தும், இதழைக் குவித்தும், உதட்டை மூடியும் ' அஉம் ' எழுத்துக்களைப் பிறக்கச் செய்கின்றோம்.
- அகர, உகர, மகரங்கள் சேர்ந்து உண்டான எழுத்தே ' ஓம் ' எனும் எழுத்தாகும்.
- சிறு குழந்தைகள் அம்மா ! அப்பா ! என அழைத்து அழுகின்றன. அது உண்மையில் அம்மாவையோ அப்பாவையோ அழைப்பதல்ல.
- வாயைத் திறந்ததால் ' அ ' பிறந்தது. வாயை மூடியதால் ' ம் ' பிறந்தது. ஆகவே அம்மா என ஆயிற்று, வாயை வலித்து மூடினால் அப்பா என ஆகும். அழுகையில் உகரமுந்தொனிக்கிறது.
- கன்றுகள் தாயை அம்மா என அழைக்கின்றன.
- சிற்றொழி ஒலிக்கும் ஈக்களின் ஒலிமுதல் பேரொலியினை முழக்கும் யானையின் பிளிற்றொலி வரையிலும் ஓங்காரமே ஒலிக்கின்றது.
- மணி ஓசையிலும், சங்கநாதத்திலும், இடிமுழக்கத்திலும் பலவித வாத்திய கோஷங்களிலும், பல மக்கள் ஒன்றுசேர்ந்து முழக்கும் ஒலிகளிலும் ஓங்காரமே ஒலிக்கின்றது.
- ஆதியில், இறைவனிடத்திலிருந்து தோன்றிய ஒலி, நாதமும் பிந்துவுமாகும். நாதமும், பிந்துவும் சேர்ந்ததே ஓங்காரமாகும்.
- ஓங்காரமே சிருட்டியின் முதற்பொருள், ஓங்காரத்திலிருந்தே அனைத்தும் உற்பவிக்கின்றன.
- தூலசூட்சம காரணங்கள் அனைத்தும் ஓங்காரத்தின் உட்பிரிவுகளான, அகர, உகர, மகரங்களின் பரிணாமங்களேயாகும்.
- மூலகாரண மூர்த்தியாகிய விநாயகர் ஓங்கார வடிவினரே, உலகப்பொருள்கள் பஞ்சேந்திரயங்களால் அறியக்கூடியவை.
- மனத்தினால் அறியக்கூடியவை, ஞானத்தினால் அறியக்கூடியவை என மூவகைப்படும்.

- ஓம் தத்ஸத். அது சத்தியமாக இருக்கிறது. ஓம் என்பது எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கவல்லது.
- 'தத்' என்றால் ஆண், பெண், அலி எனும் தன்மையற்றது. 'ஸத்' என்றால் எப்பொழுதும் நிலைத்திருப்பது.

- ஆகவே ஓம் என்பது, ஸத் , சித் , ஆனந்தம் என்ற மூன்றும் சேர்ந்த ஸச்சிதாநந்தமாகிறது.
- ஓங்காரமே உலகமெனவும், உலகை விளங்கச் செய்வது அதுவேயெனவும், இதில் எவை இருந்தனவோ, இருக்கின்றவோ, இருக்குமோ அவை அனைத்தும் ஓங்காரமயமே ஆம் எனவும், முக்காலத்துக்கும் மேலானது எதுவோ அதுவே ஓங்காரமெனவும் மண்டூக்யோபநிடதம் கூறுகின்றது.
- “விறகில் தீ போல ஓங்காரத்தினுள் பரமாத்மா அடங்கியிருக்கிறார்.” என சுவேதாசுவதர உபநிடதம் கூறுகின்றது.

❖ ஓங்காரத்தால் என்னைப் புனிதமாக்குவாய் எனவும், ஓங்காரத்தை வில்லாகவும், ஜீவாத்மாவை அம்பாகவும் இறைவனைக் குறியாகவும் கொண்டு சலனமற்ற பக்தி செய்து பரப்பிரமத்தை அடையலாம் எனவும் உபநிடதங்கள் கூறுகின்றன.

❖ ஓங்காரமே ஆகாயம், அதுவே பிரம்மம், அதுவே கீதம் என சுருதி ஸ்மிருதி, சாத்திர, இதிகாச, புராணங்கள் முறையிடுகின்றன.

❖ ஓங்காரத்திலிருந்து பூலோகம் , பூவாலோகம், சுவர்லோகம் முதலிய உலகங்கள் உண்டாயிற்று என உபநிடதம் கூறுகின்றது.

❖ நம்மாழ்வார் திருவாய்மொழி முதற்பாகத்தில்

> “ உயர்வற்ற உயர்நலம் உடையவன் யவனவன்
> மயர்வற மயர்நலம் அருளினன் யவனவன்
> அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன் ”

எனும் முதல் மூன்றடிகளில் உள்ள முதலெழுத்துக்கள் ஓங்காரத்தின் உறுப்பெழுத்துக்களாகிய அகர, உகர, மகரங்களால் அமைக்கப்பட்டுள்ளன.

❖ அப்பர்

> “ ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
> உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே ”

எனக் கூறினார்.

- விநாயகர் பிரணவ சொரூபராய் இருக்கிறார். விஷ்ணு ஆலயங்களிலும் இவர் தும்பிக்கை ஆழ்வாரெனும் பெயரில் போற்றப்படுகிறார்.
- பிரணவமே எல்லா மந்திரங்களிலும் மூல மந்திரமாகும். ‘ ஓம் ’ எனும் பிரணவ மந்திரத்தை முதலில் கூறியே எல்லா மந்திரங்களையும் கூறவேண்டுமெனும் நியதி ஏற்பட்டுள்ளது.
- இவற்றிலிருந்து ஓம் என்பதே அனைத்திற்கும் மூலாதாரமாகும் என்பது நன்கு விளங்குகின்றது.

-----****-----****----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம்**

**பகுதி** : **உபநிடதங்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# உபநிடதங்கள்

## வரலாறு:

- உபநிடதங்கள் அல்லது உபநிஷத்துக்கள் பண்டைய இந்திய தத்துவ இலக்கியமாகும்.
- வேதங்களில் இவை இறுதியாக வந்தவையாகும் . எனவே இவை ”வேதாந்தம்” எனவும் கூறப்படுகின்றன.
- உபநிஷதம் நான்கு வேதப் பிரிவுகளிலிருக்கும் சம்ஹிதை பிராம்மணம்,ஆரணியகம் என்ற பாகங்களைச் சார்ந்தவை.
- சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இவ்விலக்கியத்தில் பெரும்பாலும் யோகம், தத்துவம் போன்றவற்றைப் பற்றியே விவாதிக்கப் படுகிறது.
- பெரும்பாலும் குரு - சீடன் இடையே நடைபெறும் உரையாடலாக இவை அமைந்துள்ளன.
- நான்கு வேதங்களுக்கும் ”சாகைகள்” என்று பெயருள்ள பல கிளைகள் உள்ளன. எல்லா சாகைகளும் தற்காலத்தில் காணப்படவில்லை. ஒவ்வொரு வேதசாகை முடிவிலும் ஒரு உபநிஷத்து இருந்திருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது.

## உபநிடதம் பொருள்:

- இதில் மூன்று வேர்ச்சொற்கள் உள்ளன . 'உப', 'நி' மற்றும் 'ஸத்'. என்ற சொற்கள் புணரும்போது ஸத் என்பது ஷத் என ஆகிறது.
- 'உப' --- குருவை பயபக்தியுடன் அண்டி அவர் சொல்லும் உபதேசத்தைக் கேட்பதைக் குறிக்கிறது.
- 'நி' -- புத்தியின் மூலம் ஏற்படும் ஐயங்கள் அகலும்படியும், மனதில் காலம் காலமாக ஊறியிருக்கும் பற்பல எண்ண ஓட்டங்களின் பாதிப்பு இல்லாமலும், அவ்வுபதேசத்தை வாங்கிக் கொள்வதைக் குறிக்கிறது.
- 'ஸத்' -- அவ்வுபதேசத்தின் பயனான அஞ்ஞான -அழிவும், பிரம்மத்தின் ஞானம் ஏற்படுவதைக் குறிக்கிறது.

## உபநிடதம் பிரிவுகள் :

- வேதப்பொருள் மூன்று வகைப்படும் அவை கர்ம காண்டம்,உபாசன காண்டம்,மற்றும் ஞான காண்டம். இவற்றுள் ஞான காண்டம் தான் 'உபநிஷத்' எனப்படுவது.
- 108 உபநிஷத்துக்கள் இருப்பதாக முக்திகோபநிஷத்தில் ராமபிரான் ஆஞ்சனேயருக்குச் சொல்கிறார்.
- அவற்றில் பத்து மிக முக்கியமானவை. கீழ்காணுமாறு,

1. ஈசா வாஸ்ய உபநிடதம் (சுக்ல யசூர்வேதம் - வாஜஸனேய சாகை)

    - இது இரண்டு வழிகளைக் கற்பிக்கின்றது.
    - ஒன்று ஞானத்தின் வழி.
    - மற்றது ஞானத்தின் வழிநின்று பற்றுகளை விட்டொழிக்க வேண்டிய உளத்தூய்மையைக் கைக்கொள்ளும் வழி.

2. கேன உபநிடதம் (சாம வேதம் - தலவகார சாகை):

    - இது உளநூற் பாகுபாடுகளைத் தெளிவாக விளக்கி அனைவருக்கும் பரம்பொருளின் நிலைமையை அறிய வாய்ப்பளிக்கிறது.
    - “கேன” என்றால் சமஸ்கிருதத்தில் “கேள்வி” என்பது பொருளாகும்.
    - மந்திரங்கள் உடையது.

3. கடோபநிடதம் (கிருஷ்ணயஜுர் வேதம் - தைத்திரீய சாகை):

    - வேதாந்தத்தின் மிக உயர்ந்த கோட்பாடுகளை எடுத்துரைக்கின்றது. மறைத்தத்துவத்தை விளக்கும் பூரணமான நூல்.
    - வாழ்க்கையின் இன்ப துன்பங்களையும் வேதத்தின் விழுமிய கருத்துக்களையும் நன்குணர்ந்த ஆத்மஞானியனை ஆசிரியனாகவும் போகப் பொருள்களால் போக்கறாத பிரம்மச்சாரியாம் நகிசேதனை மாணவனாகவும் கொண்டு வேதாந்தத்தின் அதீத பயனை உலகுக்கு எடுத்து ஓதுகிறது.

4. <u>பிரசின உபநிடதம் (அதர்வண வேதம்):</u>

- ஆறு இளைஞர்கள் "திருப்பிப்பிலாதன்" என்னும் நல்லாசிரியனை நாடித் தங்களுக்கு ஏற்பட்ட வினாக்களுக்கு பதில் கோரி அவைகளைக் கேட்டுத் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டனர். அதுவே பிரசின உபநிடதம்.

5. <u>முண்டக உபநிடதம் (அதர்வண வேதம்):</u>

- மொட்டைத் தலையுடைய ஞானிகளுக்குரிய ஞான வாழ்க்கை பற்றிய கருத்தினைக் கொண்டது முண்டக உபநிடதம்.

6. <u>மாண்டுக்ய உபநிடதம் (அதர்வண வேதம்)</u>

- உருவில் மிகச் சிறியது . பன்னிரண்டு மந்திரங்கள் மட்டுமே உள்ளது.

7. <u>ஐத்ரேய உபநிடதம் (ரிக் வேதம் - ஐதரேய சாகை):</u>

- வருண பகவான் தனது மகன் பிருகுவுக்கு உபதேசமாகச் சொன்னது. நாம் உண்ணும் உணவே பிரம்மம் என்பதையும் உயிரைக் காப்பாற்றக்கூடிய உணவுப் பொருள் பிரத்தியஷமான தெய்வம் என்பதை சொல்வது.

8. <u>தைத்திரீய உபநிடதம் (கிருஷ்ணயஜுர் வேதம் - தைத்திரீய சாகை):</u>

- வாழ்க்கையைத் தொடங்குவதற்கு வழிகாட்டுமுகமாக ஆசிரியர் சீடனுக்குச் சொல்லும் அறிவுரைகள் கொண்டது.

9. <u>பிரகதாரண்யக உபநிடதம் (சுக்லயஜுர் வேதம் - கண்வ சாகை, மாத்யந்தின சாகை)</u>

- ஆறு அத்தியாயங்களைக் கொண்டது . உபதேசம், விளக்கம், உபாசனை இம்மூன்றும் இடம் பெற்றுள்ளன.

10. <u>சாந்தோக்யம் (சாம வேதம் - கௌதம சாகை):</u>

- பிராண வித்தையை "ஜாபாலசத்தியசாமர்" வியாக்கிரத பரதருடைய குமாரன் கோசுருத்திற்கு உபதேசித்தது.

## 108 உபநிடதங்களின் வகைப்பாடு அட்டவணை:

| வ.எண் | வேதகால உபநிடதங்கள் | வகைப்பாடுகள் |
|---|---|---|
| 01. | ரிக் வேதத்தைச் சார்ந்தது | 10 |
| 02. | கிருஷ்ணயஜுர் வேதத்தைச் சார்ந்தது | 32 |
| 03. | சுக்லயஜுர் வேதத்தைச் சார்ந்தது | 19 |
| 04. | சாம வேதத்தைச் சார்ந்தது | 16 |
| 05. | அதர்வண வேதத்தைச் சார்ந்தது | 31 |
| | மொத்தம் | 108 |

## 108 உபநிடதங்களின் வகைப்பாடுகள்:

| வ.எண். | உபநிடதங்கள் | வகைப்பாடுகள் |
|---|---|---|
| 01. | சாமானிய வேதாந்த உபநிடதங்கள் | 24 |
| 02. | யோக உபநிடதங்கள் | 20 |
| 03. | சந்நியாச உபநிடதங்கள் | 17 |
| 04. | வைணவ உபநிடதங்கள் | 14 |
| 05. | சைவ உபநிடதங்கள் | 14 |
| 06. | சாக்த உபநிடதங்கள் | 09 |
| | மொத்தம் | 108 |

**பழங்கால உபநிடதங்கள் - மூன்று வகைப்படும்:**

- கி.மு. 700 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் இருந்த மூன்று உபநிடதங்கள் பழங்கால உபநிடதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- அவை -
    1. ஈசா
    2. சாந்தோக்யம்
    3. பிரகதாரண்யகம்

**இரண்டாம் காலகட்ட உபநிடதங்கள் இரண்டு வகை:**

- கி.மு. 600 -500 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த இரண்டு உபநிடதங்கள் இரண்டாம் காலகட்ட உபநிடதங்கள் என்று சொல்லப்படுகின்றன.
- அவை
    1. ஐத்ரேயம்
    2. தைத்திரீயம்

**மூன்றாம் காலகட்ட உபநிடதங்கள் ஐந்து வகை:**

- கி.மு. 500 -400 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த ஐந்து உபநிடதங்கள் மூன்றாம் காலகட்ட உபநிடதங்கள் என்று சொல்லப்படுகின்றன.
- அவை
    1. பிரச்னம்
    2. கேனம்
    3. கடம்
    4. முண்டகம்
    5. மாண்டூக்யம்

**<u>நான்காம் காலகட்ட உபநிடதங்கள் மூன்று வகை:</u>**

- கி.மு. 200 -100 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த மூன்று உபநிடதங்கள் நான்காம் காலகட்ட உபநிடதங்கள் என்று சொல்லப்படுகின்றன.
- அவை
    1. கவுஷீதகி
    2. மைத்ரீ
    3. சுவேதாசுவதரம்

[

**<u>இதர முக்கிய உபநிடதங்கள்:</u>**

- முக்கிய பத்து உபநிடதங்களை தவிர , இதர 98-ல் முன்னிடத்தில் வைக்கப்பட்டுள்ளவை.
    1. சுவேதாச்சவதரம்
    2. கௌஷீதகியம்
    3. நரசிம்ம பூர்வதாபனீயம்
    4. மகோபநிஷத்
    5. கலிஸ்ந்தரணம்
    6. கைவல்யம்
    7. மைத்ராயணீயம்

**<u>உபநிடதங்களுக்கு உரைகள் எழுதியவர்கள்:</u>**

- ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர், நீலகண்ட சிவாச்சாரியார் ஆகிய நால்வரும் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், சித்தாந்தம் என்னும் கொள்கைகளையொட்டி, முக்கியப் பத்து உபநிடதங்களுக்கு உரையெழுதியுள்ளனர்.
- 18- ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த “உபநிஷத் பிரம்மேந்திரர்” என்ற துறவி 108 உபநிடதங்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

------*****-----*****----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம் (சைவம்)**

**பகுதி** : **இறைவனின் எட்டு குணங்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# இறைவனின் எட்டு குணங்கள்

- தடத்த (அ) சகள நிலையில் இறைவன் எட்டு குணங்களை உடையவனாக சைவசித்தாந்தம் கருதுகின்றது.
- தன்வயத்தினனாதல்; இறையன் தன்னுடைய சுய இருப்பிற்கு யாரையும் சார்ந்து இருப்பது இல்லை , கட்டுப்பாடுகளற்ற முழுச் சுதந்திரனாக தன் இருப்பிற்கு தன்னையே சார்ந்து உள்ளான்.
- தூயவுடம்பினாதல்; இறைவன் எவ்வடிவம் எடுத்தாலும் அவ்வடிவினால் எவ்வித மாற்றமோ , விகாரமோ தன் இயல்பில் கொள்வது இல்லை . மேலும் காலம் , செயல் இவைகளுக்கு உட்படுவதும் இல்லை . அதன் விளைவான ஒடுக்கத்திற்கு (முடிவு) உட்படுவதும் இல்லை.
- இயற்கையுணர்வினனாதல்; இறைவன் சுத்த சித்தானவன் பரி பூரண ஞானம் உடையவன் யாரும் எதையும் அறிவிக்காமல் அனைத்தையும் அறியும் இயல்புடையவன். இறைவன் அநாதிகாலமாக இருப்பவன்.
- இறந்தகாலம், நிகழ்காலம், இனிவரும் காலம் அனைத்தையும் முற்றிலும் உணர்ந்தவன்.
- இயல்பாகவே தளைகளின்றிருத்தல் ; இறைவன் தன் இயல்பில் தளைகளோ, பாசங்களோ அற்றவன் . அவனை கன்மமோ , காலமோ கட்டுப்படுத்த இயலாது.
- பேரருளுடைமை; இறைவன் எல்லையில்லா அருளை உடையவன் , அனைத்து ஆன்மாக்களுக்கு வீடுபேறு அடைய அருளுகின்றான் , அவன் அருள் இன்றி அணுவும் அசையாது.
- முடிவில் ஆற்றலுடைமை; இறைவனின் ஆற்றல் அளவிட முடியாது. அவ்வாற்றலுக்கு எல்லையும் இல்லை, ஆனால் அவனுடைய வரம்பிலா ஆற்றலுக்கு கட்டுப்பட்டே ஆன்மா மற்றும் சடம் இருக்கின்றன.
- வரம்பிலா இன்பமுடையவன்; இறைவன் தன் இயல்பிலேயே வரம்பில்லா ஆனந்தத்தையுடையவன் அவன் எண்ணிலடங்கா ஆன்மாக்களுக்கு பேரானந்தத்தை வரம்பில்லாமல் வழங்க வல்லவன் எனவே தான் சச்சிதானந்தனாக உள்ளான்.

-----*****-----*****-----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம் (வைணவம்)**

**பகுதி** : **இராமானுஜரும் கோட்பாடுகளும்**


**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இராமானுஜரும் கோட்பாடுகளும்

- வைணவத்தின் பரவல்
- இராமனுஜர் பாரததேசம் முழுவதும் யாத்திரை செய்து வைணவத்தின் பெருமையை எங்கும் பறை சாற்றினார்கள்
- எதிர் வாதங்கள் புரிந்தவர்களை வென்று வைணவ மடங்களை நிறுவினார்
- சில இடங்களில் ஆன்மீகத்தில் பிடிப்பு இருந்தும் இல்லறத்திலேயே இருக்க விரும்பியவர்களையும் தன் மடங்களின் ஆன்மீகத் தலைவர்களாக்கினார்.
- திருவரங்கத்திலுள்ள தலைமை மடத்திற்கு மடாதிபதியாக வரவேண்டிய விதி முறைகளை வழிப்படுத்தினார்.
- ஒவ்வொருவரிடமும், முக்கியமாக தாழ்த்தப்பட்ட இன மக்களிடையேயும், இரக்கம், கருணை, பரிவு முதலிய நற்குணங்களைச் சொரிந்ததோடு ”திருக்குலத்தார்” என்றும் அவர்களை அழைக்கலானார்.
- இராமானுஜரின் இக்குணத்தால் கவரப்பட்டே பின்னர் வந்த காந்தி மகானும் ”ஹரிஜன்” என்றார்.
- தமிழ் பிரபந்தங்களை ஓதவும் வைணவச் சின்னங்களை தரிக்கவும் எந்தச் சாதியினரோ ஆணோ பெண்ணோ எல்லோருக்கும் வைணவத்தில் இடம் இருக்கச் செய்தார்.

## இராமனுஜர் அருளிச் செய்த நூல்கள்:

- வடமொழியில் இராமானுஜர் இயற்றிய ஸ்ரீபாஷ்யம் அவருடைய தலைசிறந்த படைப்பு.
- வேதாந்தத்தில் விசிஷ்டாத்வைத தத்துவத்தை காலத்திற்கும் நிலை நாட்டிய நூல் ஸ்ரீபாஷ்யம் ஆகும்.
- வேதாந்த சங்கிரகம் - இது உபநிடத தத்துவங்களை விவரித்துச் சொல்கிறது.
- இராமானுஜர் அருளிச் செய்த வேதாந்த சாரம், மற்றும் வேதாந்த தீபம், இவை பிரம்ம சூத்திரத்தைப் பற்றிய சுருக்கமான உரைகள்.
- கீதா பாஷ்யம், இது கீதைக்கு விசிட்டாத்துவைத்தையொட்டி இராமானுஜரால் எழுதப்பட்ட உரையாகும்.
- இராமானுஜரின் நித்யக்கிரந்தங்கள் அன்றாட வைதீக சடங்குகளும், பூசை முறைகளாகும்.
- இராமானுஜர் அவருடைய சொற்பொழிவுகளை தமிழில் செய்தாலும் தமிழில் அவர் எழுதியதாகத் தெரியவில்லை.

## ஆச்சாரிய பரம்பரை:

- ஒன்பதாவது நூற்றாண்டைச் சார்ந்த நாதமுனிகள் என்ற முதல் ஆச்சாரியார் அடங்கிய குரு பரம்பரையில் ஆளவந்தாருக்கு அடுத்து வந்தவர் இராமானுஜர்.

- ஸ்ரீவைணவப் பண்பாட்டில் ஆழ்வார்கள் பன்னிருவரும் மக்களின் இதயத்தைத் தொடர்ந்து மனதை மாற்றியவர்கள்.
- ஆச்சாரியர்களோ புத்தி பூர்வமாக மனதைத் தொட்டவர்கள்.
- பல நூற்றாண்டுகளுக்கு முன் புவியில் உலாவிய ஆழ்வார்களின் பிரபந்தங்களை நாதமுனிகள் தான் தமிழ்நாட்டில் தேடித்தேடி வெளிக் கொணர்ந்தார். மேலும் பாசுரங்களை இசைக்குகந்ததாக ஆக்கி எல்லா இடங்களிலும் பரப்பினார்.
- யோக சக்திமூலம் நம்மாழ்வாரிடமிருந்து பிரபந்தங்களை நேரடியாகப் பெற்றார் என்பது ஸ்ரீவைணவர்கள் நம்பிக்கை.

## <u>நிர்வாகி</u>

- இராமானுஜர் சிறந்த வேதாந்தி மட்டும் அல்ல பெரிய நிர்வாகியும் கூட.
- திருவரங்கம் கோயிலின் நிர்வாகத்தை ஏற்று அதை முற்றிலும் சீர்படுத்தி அன்றாடம் நடக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை உண்டாக்கினார்.
- தற்கால ஸ்ரீவைணவ நடைமுறைகளை உருவாக்கி சடங்குகளோ, சம்பிரதாயங்களோ, பழக்க வழக்கங்களோ எல்லாவற்றிற்கும் கருத்துச் செறிவுடன் உயிர் கொடுத்தவரும் இராமானுஜரே.
- திருவரங்கம் கோயில் உடைமைகளை சிறப்புற மீட்டெடுத்து நிர்வாகம் செய்ததால் திருவரங்கநாதன் இராமானுஜரை "உடையவர்" என அழைத்தார்.

## மூன்று திருமேனிகள்

- வைணவப் புரட்சித் துறவி இராமானுஜரின் மூன்று திருமேனிகள் புகழ்பெற்றவையாகும்.
    1. தமர் உகந்த திருமேனி (மேல்கோட்டை என்ற திருநாராயணபுரம், மைசூர்)
    2. தானுகந்த திருமேனி (ஸ்ரீபெரும்புதூர்)
    3. தானான திருமேனி (ஸ்ரீரங்கம்)

------****-----****----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**
**பாடம்** : **இந்து மதம்**
**பகுதி** : **இந்து மதம் - தோற்றமும் வரலாறும்**


**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# இந்து மதம் - தோற்றமும் வரலாறும்

## <u>தோற்றமும் வரலாறும்</u>:

- ஆரியர்கள் சிந்துநதி தீரத்தில் வசித்து வந்தபோது அவர்களை சிந்துக்கள் அல்லது இந்துக்கள் எனப் பாரசீகரும், கிரேக்கரும் அழைத்து வந்தனர் என்றும், அந்த சிந்துக்களுடைய மதமே இந்து மதம் என ஆயிற்று என்றும் சரித்திர ஆசிரியர்கள் சிலர் கூறுகின்றனர். இந்திய நாட்டினரின் மதமே இந்து மதம் எனப் பொருள் கூறுவாரும் உளர்.
- ஒரு நாட்டின் பெயராலோ, ஒரு ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. ஆதலால் இதன் உண்மைப் பொருளை அறிய வேண்டுவது அவசியமாயிற்று.
- இந்து மதம் எனும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும். இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம்+து எனப் பிரிக்கலாம்.

  உ.ம்- ஹிம்- ஹிம்சையில், து-துய்க்கின்றவன்
- ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாயிருந்தால். அதற்காக வருந்தி அத்துன்பம் தனக்கு வந்ததாய்க் கருதி அதை அகற்ற எவன் ஒருவன் பணிபுரிகிறானோ அவனே இந்து ஆவான். அப்பண்பு வாய்ந்த மக்களைக் கொண்ட மதமே இந்து மதமாகும்.

## இந்துமத கருத்து:

.

”ஹிம்ஸாயாம் தூயதேய : ஸ : ஹிந்து :
இத்யபி தீயதே”-

என்ற சுருதி வாக்கியத்தாலும் அறியலாம்

- ❖ இதிலிருந்து இந்து மதம் என்பதற்கு, அன்பு மதம் எனப் பொருள் கொள்ளலாம்.
- ❖ அஹிம்ஸா பரமோதர்ம மேலான அறம் எனப்படுவது அஹிம்சையே. அஹிம்ஸையாகிய அரும்பு அன்பாகிய மலராக மலர்கிறது. அன்பிற்கு அடிப்படை அஹிம்ஸையே ஆகும்.
- ❖ அன்பே கடவுள். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காது உறைகிறான். எல்லா உயிர்ப்பிராணிகளுடைய உடம்பையே அவன் கோயிலாக கொண்டிருக்கிறான்.
- ❖ ஆதலால், எந்த உயிரின் உடலுக்கும் துன்பம் நேராவண்ணம் அவைகளிடத்து அன்பு செலுத்தினால் அன்புருவாகிய ஆண்டவனது அருள் பெறலாம்.

”அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே”-

எனத் திருமந்திரம் கூறுகின்றது.

- ❖ இந்து மதம் என்பதற்கு “சநாதன தர்மம்” என வேறு ஒரு பெயர் கூறுவாரும் உளர்.
- ❖ இதற்கு அழிவிலா அறம் என்பது பொருள்.
- ❖ அன்றியும் திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்நெறி, சன்மார்க்கம் என்பன போன்ற பல பெயர்களை இட்டு வழங்குவாரும் உளர்.
- ❖ மதத்தைச் சமயம் எனவும் கூறுவர்.

- சமயம் என்பதில், சமை என்பது பகுதி. இதற்கு உடம்பை வளர்ப்பதற்கு உணவுப் பொருட்களைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு உரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பக்குவப்படுத்துவது என்பது பொருளாகும்.
- சமயம் நமது கண்ணால் காணப்படும் உலகத்தையும், அனுமானத்தால் அறியத் தகுந்த ஆன்மாவினையும், இறைவனையும் இனிது காட்டும் ஞான ஒளி மனிதனுடைய உடல் நலத்திற்கும் உதவும் அமுதம்.
- மனிதர் அன்போடு அளவளாவி வாழ்வதற்குரிய வழிகளை வகுக்கும் ஒழுக்க பீடம் மனிதர்களுடைய இகபர வாழ்விற்குரிய நலன்கள் அனைத்தையும் அருளும் கற்பக மரம்.

<u>இந்து மதப் பெருமைகள்:</u>

- இந்தியாவில் தோன்றிய இந்து சமயம் காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றெனக் கருதப்படுகிறது.
- ஏறக்குறைய 850 மில்லியன் இந்துக்களைக் கொண்டு உலகின் மூன்றாவது பெரிய சமயமாக இருக்கின்றது.
- உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் தாய் மதம் இந்து மதம் எனலாம்.
- பிற சமயங்கள் போலன்றி இந்து சமயத்தைத் தோற்றுவித்தவர் என்று யாருமில்லை.
- இதனை நெறிப்படுத்த அல்லது கட்டுப்படுத்த என ஒரு மைய அமைப்பு இதற்கு இல்லை.
- பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமய நூல்கள் என்பனவற்றை உள்வாங்கி உருவான ஒரு சமயம் இந்து சமயம் வேதங்களையும் தொடர்ந்து வந்த உபநிடதங்கள் மற்றும் காலங்காலமாகப் பல்வேறு குருமார்களின் அறிவுரைகளையும் ஆதாரமாகக் கொண்ட ஆன்மிக அடிப்படையில் அமைந்தது.

- இந்து மதம் வெறும் நம்பிக்கையோடு நின்றுவிடாமல் ஒவ்வொரு கொள்கையையும் ஆராய்ந்து ஐயங்களை அகற்றி அறிவினைப் புகட்டுவது.
- மனிதர்களைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தாது சுதந்திரத்தோடு வாழச்செய்வது.
- இவ்விதப் பெருமைகளை வேற்று நாட்டுப் பெருமக்களின் மாபெரும் கூட்டங்களில் சுவாமி விவேகானந்தர் போன்ற இந்து மத ஞானிகள் எடுத்தியம்பியுள்ளனர்.
- அவற்றைக் கேட்ட பல மேல்நாட்டு அறிஞர்களும், பத்திரிக்கை ஆசிரியர்களும் இந்து மதத்தைப் பெருமைப்படுத்திப் பேசியும், எழுதியும் பாரட்டியுள்ளனர் சிலர் இந்துக்களாகி இனிது வாழ்ந்து வருகின்றனர்.
- வேதம், தத்துவங்கள், பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், யோகா மற்றும் தந்திர ஆகமப் பிரிவுகள் அனைத்தும் "இந்து மதம்" என்ற ஒரே கடலில் சங்கமமாகின்றன.
- இந்து சமயத்தில் பலவகையான தா்மங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன.
- அவற்றுள் பக்தி யோகம், கர்ம யோகம், ஞான யோகம் ஆகியவை முக்கியமானவை.
- இவை பகவத்கீதை மற்றும் யோகசூத்திரங்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.
- அறம், பொருள், இன்பம், வீடு இவை நான்கும் இந்துக்கள் அடைய வேண்டிய இலக்குகள் ஆகும்.
- நான்கு வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், பிரம்ம சூத்திரம், புராணங்கள், இதிகாசங்கள், பாகவதம் முதலானவை இந்து மத நூல்களாகும்.

------*******-----*******-----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம்**

**பகுதி** : **<u>இந்து மத உட்பிரிவுகள்</u>**


## காப்புரிமை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# இந்து மத உட்பிரிவுகள்

- நமது இந்தியாவில் இந்து மதம் ஒன்றே எனினும் அதில் பல கிளைகள் உள்ளன.
- இந்து மதத்தில் மாறுபட்ட சில கொள்கைகள் கொண்டவர்களும் உள்ளனர்.
- இந்து மதத்தில் கடவுளே இல்லை என்று சொல்லுகின்ற கொள்கையாளரும் உள்ளனர்.

## இந்து மத சமயங்கள் நான்கு வகைப்படும்:

1. புறப்புறச் சமயங்கள்
2. புறச்சமயங்கள்
3. அகப்புறச்சமயங்கள்
4. அகச் சமயங்கள்

இந்துமத ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும், மேன்மைக்கும் அடித்தளம் அமைப்பதாய் இருக்குமாதலின் இந்துமதக் கிளை மதங்கள் ஒவ்வொன்றினுடைய கொள்கைகளை எடுத்துக்கூறி நடுநிலையோடு ஆராய்ந்து ஒரு முடிவான கொள்கைகளை எடுத்துக்கூறி அமைப்பது இந்து சமய அறிஞரின் கட்டுப்பாடாகும்.

## கடவுள் இல்லையெனக் கூறும் சமயங்கள் ஐந்து வகை

1. உலகாயதம்
2. பௌத்தம்
3. சமணம்
4. சாங்கியம்
5. மீமாம்ஸம்

## 1. உலகாயத மதக் கொள்கைகள்:

- ❖ ஐம்பெரும் பூதங்களான நிலம், நீர், தீ, காற்று எனும் நான்கு பூதங்களே உள்ளன.
- ❖ நான்கு பூதங்களும் சேர்ந்தே உடம்பு உண்டாகி அவற்றிலிருந்து அறிவு உண்டாகும்.
- ❖ நல்ல பெண்களை மணந்து அவரோடு இன்பம் நுகர்வதே முத்தி என்பதே “சாருவாகம்” எனப்படும்.
- ❖ உலகாயத மதக்கொள்கை உடையவர்கள் கண்ணால் கண்டதையே நம்புவார்கள் என்பதற்கு “காட்சிவாதம்” அல்லது “நாஸ்திகவாதம்” எனவும் கூறுவர்.
- ❖ இக்கொள்கையுடைய சிலர் உடம்பை ஆன்மா எனவும் கூறுவர்.
- ❖ வேறு சிலர் பிராண வாயுவே ஆன்மா என்றும், மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களாகிய அந்தக்கரணங்கள் அல்லது உட்கருவிகளே “ஆன்மா” எனவும் கூறுகின்றனர்.
- ❖ இன்பம் என்பது தன்னிடத்திருந்தே எழுகின்ற உணர்வே ஓர் உணர்வாகும்.
- ❖ ஒரு பொருளை கண்டறிவதற்கு மூன்று அளவைகள் உள்ளன. அவை காண்டல் அளவை, கருதல் அளவை, நூல் அளவை என்பதாகும்.
- ❖ மின்சாரத்தைக் கண்ணால் காண முடியாது. ஆனால் மின்சாரம் செய்யும் வேலையால் அது உண்டென உணர்கிறோம். அது போலவே கடவுளைக் கண்ணால் காணமுடியவில்லை எனவும் கூறுவர்.
- ❖ இந்திரியங்கள்(மெய், வாய், கண், மூக்கு, செவி) ஆன்மாவாகும் எனவும் சிலர் கூறுகின்றனர்.
- ❖ ஐந்து இந்திரியங்கள் வேறாக ஒன்ற இருந்து அவற்றைச் செய்விப்பதே “ஆன்மா” என்பதாகும்.

## (2) புத்த மதம்:

- கி.மு.6-ம் நூற்றாண்டில் புத்தர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட மதம் “புத்த மதம்” எனப்படும்
- புத்தர் என்ற சொல்லுக்கு அறிஞர் என்றுப் பொருள்
- ஆசையே துன்பத்திற்கு காரணம் என்பதால் உலக மக்களின் துன்பத்தை நீக்க முயன்றார்.
- இவர் போதனை அடங்கிய நூலுக்கு “பீடக நூல்” என்று பெயர்.
- ஹீனயானம் என்பது பௌத்த சமயத்தின் பெரிய உட்பிரிவாகும்.
- புத்த மதத்தின் இந்து சமய நூல்கள் பாலி மொழியில் எழுதப்பட்டது.
- புத்தரின் நல்லொழுக்க நெறிகளை வலியுறுத்துவது ஹீனயான புத்த சமயமாகும்.
- ஹீனயான புத்த சமயம் அசோகர் காலத்தில் கிளைத்தது.

## புத்தரின் வாழ்க்கை வரலாறு:

- புத்தரின் இயற்பெயர் - சித்தார்த்தர்
- புத்தர் பிறந்த இடம் - கபிலவஸ்து (லும்பினி வனம்)
- சாக்கிய முனி எனப்படுபவர் - புத்தர்
- புத்தர் பிறந்த ஆண்டு - கி.மு.567
- புத்தர் தந்தை பெயர் - சுத்தோதனார்
- புத்தரின் மரபு - சாக்கிய மரபு
- புத்தர் தாயார் பெயர் - மாயா தேவி
- புத்தரின் வளர்ப்புத்தாய் - மகா பிரஜாபதி கௌதமி
- புத்தரின் மனைவி பெயர் - யசோதரா
- புத்தரின் மகன் பெயர் - இராகுல்
- புத்தரின் முதல் குரு - அரதகலமா
- புத்தரின் இரண்டாவது குரு - ருத்ரகா
- புத்தர் துறவறம் பூண்டது - 29-ம் வயதில்
- புத்தர் உண்மைய தேடி அலைந்தது - 7 ஆண்டுகள்

வாய்மையே வெல்லும்

- புத்தர் தியான நிலையில் இருந்தது - 12 ஆண்டுகள்
- புத்தர் இறந்த இடம் - குசிநகரம்
- புத்தர் இறந்த ஆண்டு - கி.மு.487
- புத்தர் இறக்கும் போது வயது - 80
- புத்தரின் சீடர்கள் - சரிபுட்டர், மொக்கலண்ணர், ஆனந்தர், கசபர், உபாலி
- புத்த மதத்தின் இரு பிரிவுகள் - ஹீனயாணம், மகாயாணம்
- புத்தரின் போதனைகள் - திரிபீடகங்கள்
  1. சுத்த பீடகம்
  2. வினய பீடகம்
  3. அபிதம்ம பீடகம்
- புத்தரின் போதனைகளான திரிபீடகங்கள் எழுதப்பட்ட மொழி - பாலி
- புத்தரின் கோட்பாடுகளின் முக்கிய கருத்து - அறியாமை அகற்றுதல்
- துயரங்களிலிருந்து விடுபட பின் பற்றிய முறை - எண்வழிப்பாதை

## புத்தரின் நான்கு சீரிய உண்மைகள்

- இவ்வுலகம் துன்பமயமானது,பிறப்பு, பிணி, சாக்காடு, பிரிவு அனைத்தும் நமக்குத் துன்பத்தையும் தொல்லையையும் கொடுக்கின்றன.
- எல்லா துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் காரணம் ஆசையே.
- ஆசையை அழித்துவிட்டால் துன்பங்கள் அறவே அகன்றுவிடும்.
- துன்ப நீக்கத்திற்கு நான்காவது உண்மையில் புத்தர் எண்வகை வழிகளை மேற்கொள்ளக் கூறுகிறார்.
- இந்நெறியைக் கடைப்பிடித்தால் ஆசைகளை ஒழித்து துன்பங்களினின்று விடுபட்டு நிர்வாண நிலையை அனைவரும் அடையலாம்.

## புத்தரின் நெறிமுறைகள் எட்டு:

1. நன்னம்பிக்கை - Right View
2. நல்லெண்ணம் - Right Thought
3. நன்மொழி - Right Speech
4. நற்செய்கை - Right Conduct
5. நல்வாழ்க்கை - Right Livelihood
6. நன்முயற்சி - Right Effort
7. நற்கடைப்பிடி - Right Mindfulness
8. நற்தியானம் - Right Meditation

## புத்த மதம் கூறு நற்குணங்கள் பத்து:

1. நல்ல வார்த்தை பேசுதல்
2. மெய் பேசுதல்
3. இனியன கூறல்
4. பயன்படுவன சொலல்
5. புள்ளிவலம் வருதல்
6. துவம்புரிதல்
7. துனாம் செய்தல்
8. அருள் நினைவு
9. ஆசை துறத்தல்
10. தவப்பற்று

### புத்த மதம் கூறும் தீக்குணங்கள் பத்து:

1. பொய் சொல்லல்
2. கோள் சொல்லல்
3. கோபித்து பேசுதல்
4. பயனல்ல பேசுதல்
5. களவு
6. வீணான வேலை செய்தல்
7. காலை
8. தீயன நினைத்தல்
9. தீயன ஆசைப்படுதல்
10. காமப்பற்று

## புத்தரின் சமய மாநாடுகள்:

| வ. எண் | மாநாடு நடைபெற்ற இடம் | மாநாட்டை கூட்டியவர் | மாநாட்டின் தலைவர் |
|---|---|---|---|
| 01. | ராஜகிருஹம் | அஜாதசத்ரு | மகாகாசபர் |
| 02. | வைசாலி | காலசோகன் (சாகவர்மன்) | சபகமி |
| 03. | பாடலிபுத்திரம் | அசோகர் | மொகாலிபுத்த திஸ்ஸா |
| 04. | காஷ்மீர்(குந்தல்வனம்) | கனிஷ்கர் | வசுமித்தரர், அசுவகோஷர் |

## புத்த மத பிரிவுகள் - மூன்று வகை:

### ஹீனயானம்:

- புத்தரின் கொள்கையை மட்டும் ஏற்றுக்கொண்டவர்கள்.
- உருவ வழிபாடு கிடையாது.

### மகாயானம்:

- புத்தரையே கடவுளாக ஏற்றுக்கொண்டவர்கள்

### வஜ்ரயானம்:

- வஜ்ரயானம் என்பது மகாயான பௌத்தத்தின் ஒரு நீட்சியாக கருதப்படுகிறது.

வாய்மையே வெல்லும்

## (3) சமணம்:

- இந்தியாவில் உள்ள பழம்பெரும் சமயங்களுள் சமண சமயம் ஒன்றாகும்.
- பழமையான ரிக் வேத மந்திரங்களில் இரு சமண தீர்த்தங்கரர்களைப்பற்றி தெளிவான குறிப்புகள் உள்ளன.
- சமண மதத்தை "ஆறுகதம், ஜைனம்" எனவும் கூறுவர்.
- சமண மதத்தில் கூறப்படும் பொருள் ஏழு வகைப்படும்.
- (சீவன், அசீவன், ஆச்சிரவம், சமுவரம், நிர்ச்சரம், பந்தம் மற்றும் வீடு என்பனவாகும்)
- சீவன் அநாதி சித்தன், முத்தன், பெத்தன் என மூன்று வகை உண்டு.
- அநாதி சித்தனே அருகக் கடவுள் என்பதாகும்
- முத்தன் ஆசாபாசம் நீக்கிக் கட்டுறுத்தவன்
- பெத்தன் ஆசை முதலியவற்றால் கட்டுண்டவன் என்பதாகும்.
- சீவன் ஆசாபாசம் விட்டு சுதந்திரம் அடைந்து அனந்தஞானம் முதலிய எட்டுக்குணங்களைப் பெற்று உலகம் கடந்து எல்லையில்லா ஆகாயத்தில் மேல்நோக்கிச் சென்று அம்மேலிடத்தில் இருப்பதுவே முத்தியாகும் என்பர்.
- தீர்த்தம் என்பது ஆறு குளத்தின் துறை என்று பொருள்படும்.
- கரையில் துறையில் மக்களை ஏற்றியவர்கள் தீர்த்தங்கரர் எனப்படுவார்கள்.
- சமண சமயத்தில் 24 தீர்த்தங்கரர்களின் போதனைகள் அடங்கியது "சமணம்" ஆகும்
- முதல் 22 தீர்த்தங்கரர்களைப்பற்றிய வரலாறு கிடைக்கப்பெறவில்லை.

| | | |
|---|---|---|
| 23 -வது தீர்த்தங்கரர் | - | பார்சவ நாதர் |
| 24-வது தீர்த்தங்கரர் | - | மகா வீரர் |

## 23-வது தீர்த்தங்கரர் - பார்சவ நாதர்:

- பார்வசநாதர் உயிர்க்கொலை கூடாது, பொய் பேசுதல் கூடாது, சொத்துக்கள் பெற்றிருத்தல் கூடாது. திருடுதல் கூடாது என்ற நான்கு உண்மைகளை உலகம் அறிந்து ஏற்று வாழும்படிச் செய்தார்.
- பக்தர்கள் வெண்ணிற ஆடை அணிய அனுமதிக்கப்பட்டனர்.
- மகாவீரரின் பெற்றோரும் பார்சவநாதரது போதனைகளைப் பின்பற்றியதாய்த் தெரிகிறது.

## சமண சமயத்தின் சொல்விளக்கம்:

- ஜீனரின் வழிச் செல்பவர்கள் ஜெயினர்- சமணர் எனப்பட்டனர்.
- ஜீன் என்பது ஜீத் என்ற பகுதியின் அடியாகப் பிறந்தது.
- ஜீத் என்பதற்கு ஜெயித்தல், வெற்றிப்பெறுதல் என்பது பொருள்.
- ஜீனன் என்றால் வெற்றி கண்டவன் - அதாவது தனது மனதையும் பொறிகளையும் அடக்கி வெற்றி கண்டவர் என்பது பொருள்.
- அத்தகைய ஜீனர்களைக் கொண்ட சமயமே சமண சமயம்.

## தீர்த்தங்கரர்:

- தீர்த்தம் என்பது ஆறு - குளத்தின் துறை என்று பொருள்.
- தெய்வத் தன்மையும், மெய்யுணர்வும் பெற்ற தீர்த்தங்கரர்கள் மக்கள் மனதில் உள்ள அறியாமை மற்றும் அஞ்ஞானமாகிய இருளை அகற்றி ஆன்ம ஒளி வீச கரையேற்றுபவர்கள் ஆவர்.
- தான் கண்ட நெறியைப் பிறருக்குப் பயன்பட உதவியவர்கள் என்று பொருள் கொள்ளலாம்.

## சமண சமயப் இரண்டு பிரிவுகள்:

- திகம்பரர்கள்
- சுவேதம்பரர்கள்

## திகம்பரர்:

- திகம்பரர் - திக் ஸ்ரீ அம்பரம் - திக் - திசை, அம்பரம் - ஆடை, ஆடை அணியாதோர்(ஆடை துறந்தோர்) என பொருள்படும்.
- எவன் திசைகளை ஆடையாகக் கொண்டு வாழ்கிறானோ அவன் திகம்பரன் ஆவான்.

## சுவேதம்பரர்:

- வெண்ணிற ஆடை அணிவோர் சுவேதம்பரர் என்று அழைக்கப்பட்டனர்.
- சுவேதம் - தூய்மையான வெண்ணிறம் என்பது பொருள்.

## 24-வது தீர்த்தங்கரர்- வர்த்தமான மகாவீரர் வரலாறு:

- மகாவீரர் இயற்பெயர் - வர்த்தமானர்
- மகாவீரர் - 24வது தீர்த்தங்கர் (கடைசி துறவியும் ஆவர்)
- மகாவீரரின் வேறு பெயர் - வீரா, வீரப்பிரவு, சன்மதி, அதிவீரர் மற்றும் ஞானப்புதிரர்
- வரலாற்று நாள் - கி.மு.599 முதல் கி.மு.527 வரை(72 ஆண்டுகள்)
- தந்தை - சித்தார்த்தர்
- தாயார் - திரிசலா
- மனைவி - யசோதை
- மகள் - பிரியதர்சனா
- பிறந்த இடம் - குண்டாக் கிராமம் (வைசாலிக்கு அருகில்- இந்தியா)
- பிறந்த வருடம் - கி.மு. 546- ல் பிறந்ததாக கூறும் டாக்டர் இராதா குமுத் முகர்ஜி குறிப்பிடுகிறார்

- மகாவீரர் பரம்பரை - இச்வாகு
- துறவறம் மேற்கொண்டது - 30-வது வயதில் (மகள் பெற்ற பின்னர்) பன்னிரண்டு ஆண்டுகள் அலைந்து திரிந்தார். பதின்மூன்றாம் ஆண்டில் இரிஜீபாலிகா என்னுமிடத்தில் சால் மரத்தினடியில் நிர்வாணம் எனப்படும் உயர் நிலையை அடைந்தார்.
- மகாவீரர் முக்தி அடைந்தது - கி.மு.468ல் 72 ஆம் வயதில் பாவபுரி (பீகார்) என்னுமிடத்தில் உயிர் நீத்தார்.
- மகாவீரர் சமண சமயத்தை கருத்தை போதித்த நாடுகள் - மகதம், கோசலம்

## மகாவீரரின் சமணக் கொள்கைகள்;

- பார்சவநாதர் உலகிற்கு அளித்த அகிம்சை, சத்யம், அஸ்தேயம், அபரிக்ருகம் என்ற நான்குடன் மகாவீரர் பிரம்மசரியம் எனப்படும்.
- தன்னடக்கத்தை மேற்கொள்ள வேண்டும்
- கடவுள் என்ற ஒருவர் இல்லை
- உலகம் இயற்கையாக இயங்குகிறது என்பதை வலியுறுத்தினார்.

## சமணக் கோட்பாடுகள்:

- வினைப் பயனிலிருந்து விடுதலை பெற்று நற்கதி அடைவதே சமணத்தின் முக்கிய நோக்கமாகும்.
- மும்மணிகள் அல்லது மூன்று இரத்தினங்கள் என்னும் உயரிய நெறிகளை பின்பற்ற வேண்டும்.
- மும்மணிகளாவன நன்னம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் என்பனவாகும்.

**நன்னம்பிக்கை:**

- வீடு பேற்றினை அடைய வர்த்தமான மகாவீரர் போதித்த ஏழு தத்துவங்களிலும் முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- இதுவே நல்ல நம்பிக்கை எனப்பட்டது. இதனை “சம்யக் தரிசனம்” எனவும் வழங்குவர்.

**நல்லறிவு:**

- இந்த உலகத்தை யாரும் படைக்கவில்லை, இது இயற்கையாகத் தோன்றியது என்றும், முழுமையான ஞானம் அல்லது சம்யக்ஞானம் பெற்று பொருள்களைப் புரிந்து கொள்வதே நல்லறிவாகும்.

**நற்செயல்:**

- கொல்லாமை, பொய்பேசாமை, திருடாமை, சொத்து சேர்க்காமை, கற்புடமை ஆகும். இதனை “ சம்யக் சாரித்திரம்” எனப்படும்.

## மகாவீரரின் ஐந்து நெறிகள்

### அகிம்சை

- சமணர்களின் அடிப்படை கோட்பாடுகளான இன்னா செய்யாமை, அருளுடைமை, புலால் மறுத்தல் ஆகிய நான்கும் இணைந்த “அகிம்சையே” சமணம் என்பதாகும்.
- சமணர்களின் அறங்களுள் அகிம்சையே தலை சிறந்ததாகும்.
- சிந்தை, சொல், செயல் இவற்றால் பிற உயிர்க்கும் துன்பம் இழைக்காமல் அன்பையும் கருணையையும் காட்டுவதே அகிம்சை ஆகும்.

## அகிம்சையின் ஐந்து பெரும் நோன்புகள் அல்லது பஞ்சமஹாவிரதம்:

- அகிம்சை அல்லது இன்னா செய்யாமை
- சத்யா அல்லது வாய்மை
- அஸ்தேய அல்லது பிறர் பொருளை கவராமை
- அப்பரிகிரஹா அல்லது பற்று பாசம் இவற்றிலிருந்து விடுபடுவது
- பிரம்மச்சரியம் அல்லது ஐம்புலன்களையும் அடக்கியாளுகின்ற தன்னடக்கம்.

## (4) சாங்கியம்:

- இம்மதத்தை தோற்றுவித்தவர் கபிலர் ஆவார்.
- இம்மதத்தில் இறைவன் ஒருவன் இல்லையெனவும் மூலப்பகுதியில் ஆன்மாவும் உண்டு என்றும் கூறப்படுகிறது.
- சாங்கியம் தத்துவத்தில் இருபத்து நான்காவதாகும்
- முக்குணங்களின் சேர்க்கையால் மட்டுமே இந்த உலகம் உருவானது என்பது இத்தத்துவத்தின் கொள்கையாகும்.
- பிரகிருதி (இயற்கை), புருடன் (அறிவுள்ள பொருள்) ஆகிய இரு பொருட்கள் பற்றி மட்டுமே பேசுகின்ற சடவாத தரிசனமாகும்.
- பரம்பொருள் (இறைவன்) குறித்து எதுவும் கூறப்படவில்லை. உலகத் தோற்றம் (படைப்பு) படைப்பு குறித்தான கருத்துக்களை மட்டும் அத்வைத வேதாந்திகள் ஏற்றுக் கொள்கின்றனர்.

## சாங்கியம் கூறும் 28 (3+9+11+5) தத்துவங்கள்

- சத்துவ குணம் , இராட்சத குணம் , தாமச குணம் எனும் முக்குணங்கள் சேர்ந்த மூன்று தத்துவங்கள்.
- புருஷன் ( அறிவுள்ள வஸ்து), பிரகிருதி (இயற்கை), மஹத் தத்துவம், அகங்காரம் மற்றும் பஞ்சபூதங்கள் எனும் ஆகாயம் , காற்று, அக்னி, நீர், பூமி எனும் ஒன்பது தத்துவங்கள்.
- ஐந்து ஞானேந்திரியங்களான, காது, தோல், கண், மூக்கு, நாக்கு, எனும் ஐந்துடன் , ஐந்து கர்மேந்திரியங்களான, வாக்கு, கை, கால், மலத்துவாரம், சிறுநீர் குழாய் எனும் ஐந்து கர்மேந்திரியங்கள்,

இவற்றுடன் 'மனம்' (மனதை ஞானேந்திரியமாகவும் அல்லது கர்மேந்திரியமாகவும் கொள்ளலாம் ) சேர்த்தால் பதினொரு தத்துவங்கள்.

- சப்தம் (கேட்கும் சக்தி ), ஸ்பர்சம் (தொடு உணர்வு ), ரூபம் (பார்க்கும் திறன்), இரஸம் (சுவைக்கும் உணர்வு), கந்தம் (வாசனை அறியும் சக்தி ) எனும் ஞானேந்திரியங்களின் ஐந்து விசேஷ சேர்க்கை சேர்த்தால் ஐந்து தத்துவங்கள்.

(5) <u>மீமாம்சம்</u>

- மீமாம்சம் என்பது "வேதம் அநாதி" ஆகும்
- மீமாம்சம் இயற்றியவர் "ஜைமினி" ஆவார்
- பிராமணம், வினை, மோட்சம் முதலியவற்றைத் தரும்
- கடவுள் உண்டென்பது பொய் உலகம் தோன்றி அழியும் என்பதும் பொய்யாகும்
- உலகம் நிலைபெற்று விளங்கும் எனக் கூறுவர்.

<u>பிரிவுகள்</u>

1. பூர்வ மீமாம்சம் (கர்ம காண்டம்)
2. உத்திர மீமாம்சம்( ஞான காண்டம்)

- பூர்வ மீமாம்சம் நான்கு வேதங்களுக்கும் பொருள் கூறுவதாக உள்ளது
- உத்திர மீமாம்சத்தை தொகுத்தவர் வியாசர். நான்கு வேதங்களுக்கு இறுதியிலுள்ள வேதாந்தங்களான உபநிடதங்களை உத்தர மீமாம்சம் என்பர்.
- பூர்வ மீமாம்சர்கள் ஞானகாண்டத்தை இகழ்ந்து கர்மகாண்டத்தைக் கைகொள்வர்
- பிரபாகர மதத்தினர் "ஞானம் கெட்டபோது கல்போல் கிடப்பதே முத்தி"என்பர்
- பௌத்தம், சமணம் முதலிய மதங்களில் கூறப்படும் ஒழுக்க நெறிகள் இந்துமதத்தில் உள்ளனவாகும்.
- சைவப் பெரியார்கள், அத்வைதத்தினர், வைணவத்தினர் துவைதத்தினர் இம்மதத்தில் கடவுள் இல்லையென கண்டித்தார்கள்.

## வைசேடிகம்

- வைசேடிகம் என்பது இந்திய மெய்யியலில் வேதத்தை ஏற்கும் ஆறு முக்கிய பிரிவுகளில் ஒன்றாகும்.
- கணாதன் எனப்படும் கணபுஜா என்கின்ற குரு உருவாக்கிய சாத்திரம்.
- ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்து அடையாளம் கண்டு கொள்வதற்கு அதன் சிறப்புத் தன்மையே இதன் அடிப்படை அதன் . சிறப்புத் தன்மையை ஆராய்வதால் இதற்கு வைசேடிகம் அல்லது வைசேஷிகம் என்று பெயர்.
- இந்திய தத்துவவியலில் *தர்சனம்* எனும் சொல் முதன்முதலில் வைசேடிக தத்துவ நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய தத்துவ அறிஞர் *தாஸ் குப்தா* கூறுகிறார்.

## கணபுஜா:

- கணபுஜா என்பதற்கு அணுக்களை உண்பவர் என்று பொருள்
- அறுவடை முடிந்த நிலங்களில் சிதறிக்கிடக்கும் நெல் , கோதுமை மற்றும் இதர தா னியங்களை பொறுக்கி அதனை சமைத்து உண்பவர்.

## தத்துவம்:

- வைசேடிக தத்துவத்தில் ஒரு பொருளை நன்கு அறியும் அறிவுக்கு பிராமாணம் என்று பெயா்.
- வைசேடிகம் ஒரு பொருளை நான்கு வழிகளில் அறிய முடியும் எனக்கூறுகிறது.
    1. உணர்தல் (நேரில் பார்த்து உணர்தல்) (பிரத்தியட்சம்),
    2. ஊகம் (அனுமானம்)
    3. உவமை,
    4. வாய்சொல்
- வைசேடிக சூத்திரத்தின் தொகுப்பு கிடைக்கப் பெறவில்லை. இருப்பினும் பௌத்த சமயம் மற்றும் சமண சமய நூல்களிலிருந்து, வைசேடிக சூத்திரத்தின் சில விளக்கங்கள் அறிய இயலுகிறது.

## வைசேடிகத்தின் உரைநூல்கள்:

- *இராவண பாஷ்யம் ரசஸ்பாதர்*` என்பவர் எழுதிய `*பதார்த்த-தர்ம-சங்கிரகம்*` என்ற நூல் வைசேடிக தத்துவத்தை விளக்குவதாக உள்ளது.

## நியாயா - வைசேடிக கலப்புத் தத்துவம்:

- கி. பி. , 200-ஆம் ஆண்டில் கௌதமர் (அக்கபாதர்) இயற்றிய நியாயம் (இந்து தத்துவம் ), கணாதரர் இயற்றிய வைசேடிகமும் இணைந்து `நியாய - வைசேடிக தத்துவம்` உருவானது.
- நியாய-வைசேசிகம் தத்துவத்தில் கிரேக்க தத்துவ அறிஞர்களின் தாக்கம் உள்ளதாக இந்திய தத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர்.

## நியாயம் (இந்து தத்துவம்):

- இது ஏரணத்தையும் (அளவையியல், (logic)), அறிவாராய்ச்சியியலையும் (epistemology) முதன்மையாகக் கொள்கிறது.
- கௌதமர் (அக்கபாதர்) என்பவர் எழுதிய நியாய சூத்திரம் என்னும் நூலை அடிப்படையாக கொண்டது.
- தருக்கம் அல்லது ஏரணம் (அளவையியலை) அடிப்படையாகக் கொண்ட இந்த வழிமுறையைப் , பின்னர், பெரும்பாலான மற்ற இந்து தத்துவப் பிரிவுகளும் கைக்கொள்ளலாயின.
- நியாயத்தைப் பின்பற்றுபவர்கள் , ஏற்புடைய அறிவைப் ( valid knowledge) பெறுவதன் மூலமே துன்பங்களிலிருந்து விடுதலை பெற முடியும் என நம்புகிறார்கள்.
- நியாயத் தத்துவப் பிரிவினர் இந்த ஏற்புடைய அறிவை அடையாளம் காண நான்கு பிரமாணங்கள் அல்லது வழிமுறைகளைக் கைக்கொள்கிறார்கள்.
    1. பிரத்தியட்சம் - நேரடிக்காட்சி
    2. அனுமானம் - உய்த்துணர்வு
    3. உபமானம் - ஒப்பீடு
    4. சப்தம் - உரைச்சான்று என்பனவாகும்.

## 7.அளவை:

- இந்த நெறியாளர் தெரியாத தெய்வத்தைத் தெரியும்படி விளக்கிக் காட்டுபவர்கள். ஐம்புலனால் அறியப்படாத தெய்வத்தை ஐம்புல அனுமானத்தால் விளக்குபவர்கள் . எந்தெந்த வகையான அனுமான அளவைகளால் தெய்வத்தின் இருப்பு உய்த்துணரப்படும் என்பதன் விளக்கமே அளவை.
- வைதிக மார்க்கம் அளவை நெறியைப் பின்பற்றுவது.
  வேத வியாதன்
  கிருத கோடி
  சைமினி என்னும் ஆசிரியர்கள் அளவை நெறியைக் காட்டிய முன்னோர்.

## 10 அளவைகள்:

1. காண்டல் (காட்சி)
2. கருதல்
3. உவமம்
4. ஆகமம் (நூல்)
5. ஆண்டைய அருத்தாபத்தி (பொருட்பேறு)

1. இயல்பு
2. ஐதிகம் (உலகுரை)
3. அபாவம் (இன்மை)
4. மீட்சி
5. ஒழிவறிவு எய்தி உண்டாம் நெறி (உள்ள நெறி)

*அளவை பத்து விளக்கம்:*

**காட்சி**

- கண்ணால் வண்ணமும் , செவியால் ஓசையும் , மூக்கால் நாற்றமும், நாவால் சுவையும், மெய்யால் ஊறும் காண்பது.
- சுகம், துக்கம் காண்பது.
- உயிர், ஐம்பொறி வாயில், மனம் மூன்றைக் காண்பது.
- இவற்றிற்குப் பெயரிட்டு , அந்தப் பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே அதன் குணத்தை உணர்ந்துகொள்வது.

**கருத்து:**

- கருத்து என்பது ஒருவனது குறிக்கோள இது 3 வகை.
- (பொது சாதனம்), சாத்தியம் முன்பு யானையைக் கண்டு அதன் - ஒலியைக் கேட்டவன் பின்பு யானை ஒலியை மட்டும் கேட்டபோது அங்கு யானை உண்டு என உணர்தல் அனுமான அனுமேயம்.

**உவமம்:**

- அவன் ஆடை பால் போல் வெள்ளை என்றவுடன் அவனது ஆடை நிறம் மனக்கண்ணில் தோன்றுதல்.

**நூல்:**

- அறிவன் செய்த நூல் 'மேலுலகம்' உண்டு என்பதை நம்புதல்.

**பொருட்பேறு:**

- 'ஆய்குடி கங்கை ' என்றவுடன் கங்கைக் கரையில் ஆய்குடி உள்ளது என உயர்தல்.

**இயல்பு :**

- யானைமேல் இருப்பவன் தன் தோட்டியை (அங்குசத்தை) .அடுத்தவனுக்குத் தரமாட்டான்.

**உலகுரை:**

- ஊரார் சொல்வதை நம்புதல் இந்த மரத்தில் பேய் உண்டு எனச் . சொல்வதை நம்புதல்.

**இன்மை:**

- குதிரைக்குக் கொம்பு இல்லை என ஒப்பிட்டுத் தெளிதல்.

**மீட்சி:**

- இராமன் வென்றான் என்றால் இராவணன் தோற்றான் என உணர்தல்.

**உள்ளநெறி:**

- **'நாராசத் திரிவில் கொள்ளத் தகுவது காந்தம்'.**

**அளவைக் குற்றம் எட்டு:**

1. **சுட்டுணர்வு**
2. **திரியக் கோடல்**
3. **ஐயம்**
4. **தேராது தெளிதல்**
5. **கண்டுணராமை**
6. **இல்வழக்கு**
7. **உணர்ந்ததை உணர்தல்**
8. **நினைப்பு**

***அளவைக் குற்றம் விளக்கம்***

1. **சுட்டுணர்வு பழைய நிகழ்வை எண்ணிப் பார்த்துப் புதியதும் - அவ்வாறே நிகழும் எனக் கருதுதல்**
2. **திரியக் கோடல் (கிளிஞ்சிலைப்) வெயிலில் மின்னும் இப்பியைப் - .பார்த்து வெள்ளி எனல்**
3. **ஐயம் தொலைவில் தெரியும் -சோளக்கொல்லைப் பொம்மையைப் பார்த்து வைக்கோல் பொம்மையோ, மகனோ என ஐயுறல்**
4. **தேராது தெளிதல் ஆராய்ந்து பார்க்காமல் வைக்கோல் - .பொம்மையை மகன் எனல்**
5. **கண்டுணராமை புலியா -ஆண்டலையா ஆண்டுகொண்டு) ( அலையும் அரிமா) என்று கண்ணால் காணாமலேயே உண்ட விலங்கின் மிச்சிலைப் பார்த்து முடிவெடுத்தல்**
6. **இல்வழக்கு எங்குத் தேடினும் முயல் கொம்பு என்று சொல்லுத - .அவன் பெறப்போவது முயற்கொம்பே.**
7. **உணர்ந்ததை உணர்தல் கடும்பனிக்கு மருந்து தீக்காய்தல் என - உணர்தல்**
8. **நினைப்பு இவர் தந்தை எனத் தாய் சொல்லக் கேட்டு - இஉணர்தல கூறுதல்.**

------*******-----*******-----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

பிரிவு : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

பாடம் : **இந்து மதம்**

பகுதி : **<u>இதிகாச புராணங்கள்</u>**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## இதிகாசம்:

- இதிகாசம் என்பதற்கு – ஐதீகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு என்று பொருள்.
- வேத உபநிடதங்களின் உட்பொருளை அடக்கிக் கதை வடிவத்தில் இவை எழுதப்பட்டுள்ளன.
- இராமாயணமும், மகாபாரதமும் இதிகாசங்களாகும்.
- இராமாயண காவியத்தை இயற்றியவர் வால்மீகி முனிவர் ஆவார்.
- இதில் அரசநீதி, சத்யபரிபாலனம், புத்திரர் கடமை, பெரியோர் வழிபாடு, கற்பு நெறியின் மேன்மை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.
- மகாபாரதத்தை இயற்றியவர் வியாச முனிவர்.
- இதை ஐந்தாம் வேதம் என்றும் சிறப்பித்துக் கூறுவர்.
- இதில் இல்லாதது வேறு எங்கும் சொல்லப்படவில்லை என்ற சிறப்பினையுடையது.
- ஞான நூல்களில் சிறந்த பகவத் கீதை இதனுள் அடங்கி இருக்கிறது.
- இந்த இரு இதிகாசங்களும் தர்ம, அதர்மப் போராட்டத்தில் தர்மமே முடிவில் வெற்றி பெறும் என்பதை நன்கு விளக்கிக் கூறியுள்ளன.

## புராணங்கள்:

- புராணம் என்பதற்கு பழைய வரலாறு என்பது பொருள்.
- இதனை எழுதியவர் வேத வியாஸர். இதனை உலகிற்கு அளித்து உதவியவர் சூதபுராணிகர்.
- புராணங்கள் பதினெட்டாகும்.

| சிவபுராணங்கள் - 10 | |
|---|---|
| 1. | சைவம் |
| 2. | பவிஷ்யம் |
| 3. | மார்க்கண்டேயம் |
| 4. | இலிங்கம் |
| 5. | ஸ்காந்தம் |
| 6. | வராகம் |
| 7. | வாமனம் |
| 8. | மச்சம் |
| 9. | கூர்மம் |
| 10. | பிர்மாண்டம் |
| விஷ்ணு புராணங்கள்- 4 | |
| 1. | காருடம் |
| 2. | நாரதீயம் |
| 3. | வைஷ்ணவம் |
| 4. | பாகவதம் |
| பிரமன் - 2 | |
| 1. | பிர்மம் |
| 2. | பதுமம் |
| அக்கினி-1 | |
| 1. | ஆக்னேய புராணம் அக்கினியையும் |
| சூரியன்-1 | |
| 1. | பிரம கைவர்த்தம் சூரியனையும் சார்ந்தவை |

- வேதம் ”ஸத்யம்வத , தர்மம்சர ” என்று கூறுகிறது. இதன் பொருள் ”உண்மையைப் பேசு, தர்மத்தைச் செய் என்பதாகும்.
- இத்தகைய வேதக் கட்டளைகளைப் புராணங்கள், கற்றோரும், மற்றோரும் நன்கு அறிந்து கடைபிடித்து உய்யுமாறு சுவையான நீதிக்கதைகளால் விளக்குகின்றன.

------*********-----*********-----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம் (வைணவம்)**

**பகுதி** : **ஆழ்வார்களின் வரலாறு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# ஆழ்வார்களின் வரலாறு

- ஆழ்வார்கள் மொத்தம் 12 பேர்.
- இறைவனின் திருவடியில் / கல்யாண குணங்களில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர்.
- 12 ஆழ்வார்களும் பாடிய நூல்கள் =24
- பிரபந்தத்தில் உள்ள மொத்த நூல்கள் =24
- 12 ஆழ்வார்கள் பாடிய மொத்தப் பாடல்கள் =3776

## 1.பொய்கையாழ்வார்:

- ஊர் காஞ்சிபுரம்
- சங்கின் அம்சமாகப் பிறந்தவர்
- பாடியது முதலாம் திருவந்தாதி
- முதலாம் திருவந்தாதியில் 100 வெண்பாக்கள் உள்ளன.
- முதல் முதலாக திருமாலின் 10 அவதாரங்களைப் பாடியவர்.

## 2.பூதத்தாழ்வார்:

- ஊர் மகாபலிபுரம்
- கதாயுதத்தின் அம்சமாகப் பிறந்தவர்
- பாடியது இரண்டாம் திருவந்தாதி. இதில் 100 வெண்பாக்கள் உள்ளன.
- பெருந்தமிழன் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ஆழ்வார்.

## 3.பேயாழ்வார்:

- ஊர் மயிலாப்பூர்
- வாளின் அம்சமாகப் பிறந்தவர்
- பாடியது மூன்றாம் திருவந்தாதி
- மூன்றாம் திருவந்தாதியில் 100 வெண்பாக்கள் உள்ளன.
- முதலாழ்வார் மூவரும் அந்தணர்கள்.
- இவர்களின் காலம் 6 ஆம் நூற்றாண்டு என்றும் 8 ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர்.
- முதலாழ்வார்கள் மூவரும் சந்தித்துக் கொண்ட இடம் திருக்கோவிலூர் (கிடக்க, இருக்க, நிற்க)
- சூரியனை விளக்காக ஏற்றியவர் பொய்கையாழ்வார்
- ஞானத்தை விளக்காக ஏற்றியவர் பூதத்தாழ்வார்
- பருப்பொருளை விளக்காக ஏற்றியவர் பொய்கையாழ்வார்
- நுண்பொருளை விளக்காக ஏற்றியவர் பூதத்தாழ்வார்
- பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் ஏற்றிய விளக்கில் இறைவனைக் கண்டவர் பேயாழ்வார்.
- முதலாழ்வார்கள் மூவரும் திருமழிசையாழ்வாரைச் சந்தித்த இடம் திருவல்லிக்கேணி
- தாமரையில் அவதரித்தவர் பொய்கையாழ்வார்.
- குருக்கத்தியில் அவதரித்தவர் பூதத்தாழ்வார் (குருக்கத்திப்பூ)
- செவ்வல்லியில் அவதரித்தவர் பேயாழ்வார் (அல்லிப்பூ)

## 4.திருமழிசையாழ்வார்:

- ஊர் திருமழிசை
- சக்கரத்தின் அம்சமாகப் பிறந்தவர்
- காலம் 7 ஆம் நூற்றாண்டு
- சக்கரத்தாழ்வார், பக்தி சாகரர் என்ற வேறு பெயர்களும் இவருக்கு உண்டு.
- சைவம் முதலிய பல சமயங்களுக்கும் சென்று இறுதியில் வைணவத்திற்கு வந்தவர்.
- இவர் சைவராக இருந்தபோது சிவவாக்கியார் என்ற சித்தராக இருந்தார் என்பர்.
- பாடியவை - நான்காம் திருவந்தாதி என்ற நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்.
- திருமழிசையாழ்வாரின் சீடன் கணிகண்ணன்.
- சொன்ன வண்ணம் செய்த பெருமாள் இருக்குமிடம் திருவெஃகா (காஞ்சிபுரம்).

## 5.பெரியாழ்வார்

- ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர்
- 9 ஆம் நூற்றாண்டு
- கருடாழ்வார் அம்சமாகப் பிறந்தவர்
- பெரிய திருவடி என்பது கருடன்
- சிறிய திருவடி என்பது அனுமான்

- இயற்பெயர்- விஷ்ணு சித்தர்
- வேறுபெயர்கள் - பட்டர்பிரான், கிழியறுத்த ஆழ்வார்.
- மதுரை மன்னன் வல்லபதேவன் கட்டிய பொற்கிழியை, வேதத்தை விரைந்து ஒதி அறுத்துக் கிழி அறுத்த ஆழ்வார் என்ற பெயர் பெற்றார்.
- பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் ஆண்டாள்
- ஆண்டாளுக்குக் கோதை என்று பெயரிட்டவர் - பெரியாழ்வார்
- ஆண்டாள் சூடிக் கொடுத்ததை இவர் இறைவனுக்குச் சூட்டியவர்.
- பாடியவை - திருப்பல்லாண்டு, திருமொழி
- திருப்பல்லாண்டு வைணவர்களால் நாள்தோறும் ஓதப்பெறும் பாராயண நூல்.
- பிள்ளைத்தமிழ் என்ற சிற்றிலக்கிய வகையின் முன்னோடி அதற்கு இலக்கிய வடிவம் கொடுத்தவர்.
- பிள்ளைத்தமிழில் பத்துக்கும் மேற்பட்ட பருவங்களைப்பாடியவர்.
- அம்புலிப்பருவத்தில் சாம தான பேத தண்டம் என்ற அமைப்பில் பாடும் முறையை முதன் முதலில் தோற்றுவித்தவர்.
- கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியவர்.
- கண்ணனைப் பாதாதி கேசமாகப் புகழ்ந்துள்ளார்.
- தொட்டில் பாட்டு என்ற தாலாட்டுப் பாட்டாகிய கண்ணன் தாலாட்டே பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையின் முன்னோடி நூல்.
- தன்னை யசோதையாகப் பாவித்துப் பாடிய ஆழ்வார்
- இராமனை குழந்தையாகப் பாவித்துத் தாலாட்டுப் பாடியவர் குலசேகராழ்வார்.

## 6.ஆண்டாள்

- ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர்
- 9 ஆம் நூற்றாண்டு
- பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்
- பூமகள் அம்சமாகப் பிறந்தவர்
- துழாய் (துளசி) வனத்தில் கண்டெடுக்கப்பட்ட பெண்
- மாலைகட்டிக் கொடுத்ததால் கோதை எனப்பட்டாள்
- சூடிக்கொடுத்ததால் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி எனப்பட்டாள்.
- இறைவனுக்கு மனைவியானதால் நாச்சியார் எனப்பட்டார்.
- ஆண்டவனையே ஆண்டதால் ஆண்டாள் எனப்பட்டாள்
- ஆண்டவனை எழுப்பித் தன் குறையைத் தானே சொன்னவள் ஆண்டாள்.
- இறைவனுக்கும் ஆண்டாளுக்கும் திருமணமான இடம்- திருவரங்கம்.
- பாடியவை - திருப்பாவை, திருமொழி
- பாவை நூல்களில் காலத்தால் முற்பட்டது திருப்பாவை
- ஆண்டாள் திருமொழிக்கு நாச்சியார் திருமொழி என்ற பெயரும் உண்டு.
- திருப்பாவையே வேதம் அனைத்திற்கும் வித்து என்று சொன்னவர் இராமானுஜர்.

மேற்கோள்:

- கற்பூரம் நாறுமோ ! கமலப்பூ நாறுமோ?
- திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்து இருக்குமோ

- மருப்பு ஒசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும் விறுப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழிவெண்சங்கே.
- வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து நாராயணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர். பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும் தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி ! நான்.
- மானிடவர்க்கு என்று பேச்சுப்படின் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே.
- நாராயணனே நமக்கே பறைதருவான்
- மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால்
- கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா

## 7.குலசேகராழ்வார்:

- ஊர் திருவஞ்சைக் களம்
- 9 ஆம் நூற்றாண்டு
- கௌத்துவ மணியின் அம்சமாகப் பிறந்தவர்.
- சேர நாட்டு மன்னர் மரபில் வந்த வைணவர் குலசேகராழ்வார்.
- சேர நாட்டு மன்னர் மரபில் வந்த சைவர் சேரமான் பெருமாள் நாயனார்
- வேறு பெயர்கள் - கொல்லிக் காவலன், கூடல் நாயகன், கோழிக்கோ
- இராமனுக்குத் தாலாட்டுப் பாடியவர் குலசேகராழ்வார்.
- கண்ணனுக்குத் தாலாட்டுப் பாடியவர் பெரியாழ்வார்.
- இராமனிடம் பக்தி கொண்டவர் குலசேகராழ்வார்.
- கண்ணனிடம் பக்தி கொண்டவர் - பெரியாழ்வார்.
- பெரும்பாலான ஆழ்வார்கள் கண்ணனிடம் பக்தி கொண்டவர்கள்.

- திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால் அதற்கு குலசேகர வீதி என்ற பெயர் வழங்குகிறது.

## 8.தொண்டரடிப் பொடியாழ்வார்:

- ஊர் திருமண்டங்குடி
- வனமாலை அம்சமாகப் பிறந்தவர்
- இயற்பெயர்- விப்ர நாராயணன்
- வேததேவி என்ற விலைமாதின் மையலுக்கு வசப்பட்டுச் சிறை சென்று இறைவனால் விடுவிக்கப்பட்டவர்.
- பாடியவை - திருமாலை, திருப்பள்ளி எழுச்சி
- திருமாலுக்குத் திருப்பள்ளி எழுச்சிப் பாடியவர் தொண்டரடிப் பொடியாழ்வார்.
- சிவனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியவர் மாணிக்கவாசகர்
- பாரத மாதாவுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியவர் பாரதியார்.

## 9.திருமங்கையாழ்வார்:

- ஊர் திருக்குறையலூர்
- 9 ஆம் நூற்றாண்டு
- வில்லின் அம்சமாகப் பிறந்தவர்
- இயற்பெயர் - கலியன்
- தந்தை பெயர் - நீலன்
- மனைவி - குமுதவல்லி
- வேறுபெயர்கள் - கலிநாடன், கலிகன்றி, அருள்மாரி, பரகாலன், குறையலாளி, மங்கையர் கோன், மங்கை வேந்தன்.
- இவர் ஆண்ட நாடு திருவாலி நாடு

- வழிப்பறி செய்து இறைவனுக்குத் தொண்டாற்றியவர்.
- திருமங்கையாழ்வாருக்கு நாராயான மந்திரத்தை உபதேசித்தவர் திருமால்,
- பாடியவை ஆறு நூல்கள் -

  1.பெரிய திருமொழி

  2.திருநெடுந்தாண்டகம்

  3.திருக்குறுந்தாண்டகம்

  4.திருஎழுகூற்றிருக்கை

  5.சிறிய திருமடல்

  6.பெரிய திருமடல்
- இவர் பாடிய ஆறு நூல்களும் தமிழ் வேதமாகிய திருவாய் மொழியின் ஆறு அங்கங்கள் எனப்படும்.
- ஆறு அங்கம் கூறிய ஆதிநாடன் என்றும் அழைக்கப்படுபவர்.
- முதன் முதலாக மடல் என்ற சிற்றிலக்கிய வகையைத் தொடங்கியவர்.
- இவரின் மடல் கலிவெண்பாவால் ஆனது.
- இவரின் மடல் தொல்காப்பிய அக நெறிக்கு முரணானது
- தாண்டகம் பாடிய ஆழ்வார் திருமங்கையாழ்வார்.
- தாண்டகம் பாடிய நாயன்மார் திருநாவுக்கரசர்.
- நாட்டுபுறப் பாடல் வடிவங்களுக்கும் இடங்கொடுத்துப் பாடிய ஆழ்வார் திருமங்கை ஆழ்வார்.
- நாட்டுப்புறப்பாடல் வடிவங்களுக்கும் இடங்கொடுத்துப் பாடிய நாயன்மார் மாணிக்கவாசகர்.

## 10.நம்மாழ்வார்:

- வைணவ தலைப்புகளில் 06 ஆம் தலைப்பு ஆகும்.

## 11.மதுரகவி ஆழ்வார்:

- ஊர் திருக்கோவளூர்
- 9 ஆம் நூற்றாண்டு
- கருடாழ்வார் அம்சமாகப் பிறந்தவர்
- பெரியாழ்வாரும் இதே அம்சம்.
- நம்மாழ்வாரின் சீடர்
- திருமாலைப் பாடாமல் நம்மாழ்வாரையே தெய்வமாகப் பாடியவர்.
- சைவத்தில் திருநாவுக்கரசரைத் தெய்வமாகப் போற்றியவர் அப்பூதியடிகள்.
- வடதிசை (அயோத்தி வரை) சென்ற ஒரே ஆழ்வார்.
- 11 பாடல்கள் கொண்ட ஒரே ஒரு பதிகம் பாடியுள்ளார் அப்பதிகம் கண்ணினுன் சிறுதாம்பு என்று தொடங்கும் பதிகம்.

## 12.திருப்பாணாழ்வார்:

- ஊர் உறையூர்
- 9 ஆம் நூற்றாண்டு
- ஸ்ரீ வத்ஸம் (திருமகு) அம்சமாகப் பிறந்தவர்
- பாண்குடியினர்.
- சைவத்தில் பாண்குடியில் பிறந்தவர் நீலகண்ட யாழ்ப்பானர்

- திருவரங்கக் கோயிலுள் செல்ல இயலாது காவிரிக் கரையில் நின்று பாடியவர்.
- இவரை உலோக சாரங்கர் முதலிய அந்தணர்கள் கல்லால் அடித்தனர்.
- இவரை உலோக சாரங்கரே தோளில் தூக்கிக் கொண்டு கோயிலுள் சென்றார்.
- திருவரங்க நாதனைக் கண்டு இவர் பாடியது அமலனாதிபிரான் என்ற பதிகம். இது 10 பாடல்கள் கொண்ட ஒரே பதிகம்.
- இப்பதிகம் அகத்துறைப் பாடல்களால் ஆனது.
- இவர் பிறந்ததால் பானோங்கு உதந்தை என்று இவர் ஊர் சிறப்பிக்கப்பட்டது.

------*******------*******------

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

பிரிவு : TNPSC Group VIIB & VIII தேர்வு

பாடம் : இந்து மதம்

பகுதி : **ஆலயம், ஆலய அமைப்பு, ஆலய வழிபாடு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# ஆலயம்

- ஆலயம் என்பதை ஆ + லயம் எனப் பிரிக்கலாம்.
- ”ஆ” என்பதற்கு ஆன்மா என்று பொருள்.
- ”லயம்” என்பதற்கு இலயமாவதற்கு அல்லது சேருவதற்கு உரிய இடம் என்பது பொருள்.
- ஆ என்பது ஆணவ மலத்தையும், லயம் என்பது அடங்கி இருத்தலையும் குறிக்கும். இதனைக் கோயில் எனவும் கூறுவர்.
- கோ + இல்=கோயில். கோ=கடவுள், இல்=தங்குமிடம். கோவில்=கடவுள் தங்குமிடம்.

# ஆலய அமைப்பு
# ஆலயம் மனித வடிவம்

- கோயில்கள் நமது உடம்பின் வடிவிலேயே அமைக்கப்படுகின்றன.
- இதனை "ஷேத்திரம் சரீரப்பிரஸ்தாரம்" என்பர்.
- ஆலயம் மனிதர் உடம்புபோல் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது இதன் பொருள்.

| மனித உறுப்பு | இடம் |
|---|---|
| பாதங்கள் | கோபுரம். |
| முழங்கால் | ஆஸ்தான மண்டபம். |
| தொடை | நிருத்த மண்டபம் |
| தொப்புள் | பலிபீடம் |
| கழுத்து | அர்த்த மண்டபம் |
| சிரம் | கர்ப்பக்கிரகம் |
| சிரத்தில் உள்ள வலது செவி | தட்சிணாமூர்த்தி |
| சிரத்தில் உள்ள இடது செவி | சண்டிகேசுவரர் |
| மார்பு | நடராஜர் |
| கழுத்து | நந்தி |
| வாய் | ஸ்நபன மண்டபவாசல் |
| மூக்கு | ஸ்நபன மண்டபம் |
| புருவமத்தி | இலிங்கம் |
| தலையின் உச்சி | விமானம் |

## 1. கோபுரம்:

- கோபுரம் ஸ்தூலலிங்கமாகும்.
- கோபுர தரிசனம் கடவுளது பாத தரிசனம் என்பர்.
- இதனை "பிரமரந்திர மத்ய கபாலத்வாரம்" என்று யோகிகள் கூறுகின்றனர்.
- அண்ட பிண்டங்கள் அனைத்தையும் அடக்கிக் கொண்டு இருக்கும் பரமபுருஷனாகிய இறைவனது விராட்ஸ்வரூபமே கோபுரமாகும்.
- உச்சியில் இருக்கும் கும்பம் ஷோடசாந்தம் எனப்படும்.

## 2. பிரகாரங்கள்:

- கோயிலினுள் இருக்கும் பிரகாரங்கள் மூன்று, ஐந்து, ஏழாகக் காணப்படுகின்றன.
- மூன்று பிரகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம் என்ற மூன்று கோசங்களையும் உணர்த்துகின்றன.
- ஐந்து பிரகாரங்கள் இவற்றொடு விஞ்ஞானமயம், ஆனந்தமயம் எனும் கோசங்களையும் குறிக்கின்றன.
- ஏழு பிரகாரங்கள் இவற்றொடு ஸ்தூல, ஷூச்ஷமங்களை குறிக்கின்றன.
- பலமுறை பிரகாரங்களைச் சுற்றி வலம் வருவது கோசங்களைக் கடந்து இறைவன் விளங்குகிறான் என்பதை நினைப்பூட்டுகிறது.

## 3. விமானம்:

- விமானங்கள் நாகரம், திராவிடம், வேசரம் என மூன்று வகைப்படும்.
- பீடம் முதல் அனைத்தும் சதுரமாக உள்ள விமானம் நாகரம் எனப்படும்.
- கண்டம் முதல் வட்டமாக உள்ள விமானத்தை வேசரம் என்பர்.
- கண்டம் முதல் எட்டுக்கோணமாக உள்ள, விமானம் திராவிடமாம்.

## 4. கொடிமரம்:

- கொடிமரம் சூட்சமலிங்கமாகும்.
- கொடிமரத்தின் அடிப்பாகம் சதுரமாக இருக்கும்.
- இது இறைவனின் படைப்பை உணர்த்துகிறது.

## கொடிமரத்தின் பிரதிட்டையின் நோக்கம்

- அசுரர்களை அகற்றுவதன் பொருட்டும்.சிவகணங்களையும், தேவர்களையும் அழைத்தற் பொருட்டும், ஆலயத்தை இரட்சித்தற் பொருட்டும், பக்தர்களைப் பாதுகாக்கவும் கொடிமரம் நிறுவப்படுகிறது.
- சிவன்கோயில் கொடிமரத்தின் மேல்பாகத்தில் நந்தியையும், விஷ்ணு கோயிலில் கருடனையும், தேவி ஆலயங்களில் சிங்கத்தையும், விநாயகர் ஆலயத்தில் மூஷிகத்தையும், முருகன் கோவிலில் மயிலையும், சாஸ்தாகோவிலில் குதிரையும் அந்தந்த தேவதைகளுக்குத் தக்கவாறு அமைத்துள்ளனர்.

## 5. கர்ப்பக்கிரகம்:

- ஆலயங்களில் கர்ப்பக்கிரகம் அல்லது மூலஸ்தானம் மிகவும் முக்கியமான இடமாகும்.
- இது எல்லா உலகங்களையும் படைத்தற்குக் காரணமான மூலப்பிரகிருதியின் இடமாகும்.

**உதாரணம்:**

| | |
|---|---|
| சிவன் | நந்தி பலிபீடம் |
| நாராயணர் | கருடன் பலிபீடம் |
| விநாயகர் | மூஷிகம் பலிபீடம் |
| முருகன் | மயில் பலிபீடம் |
| அம்பாள் | சிங்கம் பலிபீடம் |

## 6. சிவலிங்கம்:

- இலிங்கம் என்பதற்கு ”குறி” என்பது பொருள்.
- குறி என்றால் அடையாளம்.
- காண முடியாத இறைவனைக் காணுவதற்கு அடையாளமே சிவலிங்கமாகும்.

## 7. திருநந்தி தேவர்:

- சிவலிங்கத்தின் முன் நந்திதேவர் சிவலிங்கத்தைப் பார்த்துக் கொண்டு இருப்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது.
- ”நந்தி” என்ற சொல்லுக்கு ”எப்பொழுதும் ஆனந்த நிலையில் இருப்பவர்” என்பது பொருள். இவர் இளமையும், திட்பமும் வாய்ந்தவர்.

## 8. பலிபீடம்:

- பலிபீடம் பாசத்தை உணர்த்துகிறது எனக் கூறினோம். அதனை 'ஸ்ரீபலி நாதர்' எனவும் கூறுவர்.
- கோவிலில் எட்டு மூலைகளிலும், எட்டு பலிபீடங்கள் உண்டு.
- அவை இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், எனும் எட்டு திக்பாலகர்களை உணர்த்துகிறது.

## 9. தட்சிணாமூர்த்தி:

- சிவபெருமானது குருவடிவே தட்சிணாமூர்த்தி ஆகும்.
- ஆலயங்களில் கர்ப்பக்கிரகத்தின் தென்பாகத்தில் தென்திசை நோக்கி வீற்றிருக்கிறார். ஆதலால். இவரைத் 'தென்முகக் கடவுள்' எனவும் கூறுவர்.

## 10. சின்முத்திரை:

- சித் + முத்திரை = சின்முத்திரை. ஞானத்தைக் கையால் காட்டும் அடையாளம் சின்முத்திரையாகும்.
- சுட்டு விரலால் பெருவிரலின் அடியைச் சேர்த்து மற்ற மூன்று விரல்களையும் வேறாக ஒதுக்கிக் காட்டப்படும் முத்திரை.
- பெருவிரல் இறைவனையும், சுட்டுவிரல் ஆன்மாவையும் குறிக்கிறது. மற்ற மூன்று விரல்களில், நடுவிரல், ஆணவ மலத்தையும், அணிவிரல் கன்ம மலத்தையும், சுண்டு விரல் மாயா மலத்தையும் குறிக்கும்.

## 11. <u>நடராஜர்:</u>

- ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் ஜோதியாகிய அரூபசிவம், சதாசிவமாகிய அருவுருவத்திருமேனியைக் கொண்டது.
- அவன் எல்லா உலகங்களையும் படைத்து, அவற்றுள் ஐம்பெரும் பூதங்களையும் அமைத்து, அவற்றைத் தனது திருவுருவிற் கொண்டு விளங்குகின்றான்.

## 12. <u>முருகன்:</u>

- ஐவகை நிலங்களுள் குறிஞ்சிநிலக் கடவுளாய் குமரன் விளங்குகின்றான்.
- குன்றக் குறவர், குறத்தியரும், எயினர் ,எயிற்றியரும் அவனைச் சிறப்பாக வழிபடுகின்றனர்.
- நம் தமிழகத்தில் திருப்பரங்குன்றம். திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை எனும் ஆறுதிருப்பதிகளிலும் அவன் சிறப்பாக வீற்றிருந்தருள் புரிகின்றான்.
- சரவணப் பொய்கையில் தோன்றினதால் சரவணபவன் எனப் பெயர்.
- ச-மங்களம், ர-ஒளி அல்லது கொடை. வ-சாத்வீகம், ந-போர்.
- மங்களம், ஒளி, கொடை, சாத்வீகம், போர் முதலிய தன்மைகளை கொண்டவரானபடியால் சரவணபவன் எனப் பெயர் பெற்றார்.
- மூலமந்திரம்" ஓம் சரவண பவாய நம" என்பதாகும்.
- முருகனது ஆறு திருமுகங்களில் ஒவ்வொரு திருமுகமும் செய்யும் தொழில்களை நக்கீரதேவர் திருமுருகாற்றுப்படையில் நன்கு சித்திரிக்கிறார்.

## வள்ளியம்மை தெய்வயாணை திருமணம்

- வள்ளியும் தெய்வயானையும் பூர்வத்தில் திருமாலின் புதல்வியராவர். அவர்களுக்குச் சுந்தரி, அமுதவல்லி என்பது பொருள்.
- திருமாலின் புதல்வியராதலால் இவர்கள் சக்தியின் அம்சமாவர்.

## 13. சண்டேசுவரர்

- ஆலயங்களில் இறுதியாக சண்டேசுவரர் வழிபாடு அமைக்கப்பட்டிருக்கிறது.
- நமது ஆன்மார்த்த பூஜையிலும் அவ்வழிபாடே பூஜை முடிவில் செய்யப்படுகிறது.
- இவரை வழிபடும் பொழுது மக்கள் கையால் மூன்று முறை தாளமிட்டு வணங்குவது வழக்கம்.
- இதன் உட்பொருள் தெரியாமல் இதன் காரணத்தைப் பலர் பலவாறு கூறுவர். சிலர் இவர் முன் நூலையிட்டு வழிபடுவதும் உண்டு.

# ஆலய நிர்மாணம்

- நமது நாட்டில் சைவாகமங்கள் ஒட்டியும், சாக்தேயம், பாஞ்சராத்திரிகம், தந்திரம் முதலியனவற்றையொட்டியும் ஆலயங்கள் நிர்மாணம் செய்யப்படுகின்றன.
- சிவாகமங்கள் இருபத்தெட்டோடு சைவ உபாகமங்கள் நூற்றுப்பதின்மூன்று உள்ளன.
- சாக்தேய ஆகமங்கள் அறுபத்துநான்காகும்.
- பாஞ்சராத்ராகமங்கள் நூற்றெட்டென்பர். அவற்றுள் முக்கியமானவை பாஞ்சராத்ரமும், வைகானஸமுமாகும்.
- எந்த ஆகமத்தை ஒட்டி ஓர் ஆலயம் நிறுவப்பட்டதோ அந்த ஆகமத்தை ஆதாரமாகக் கொண்டு பூஜைகள் முதலியன நடைபெற்று வருகின்றன.
- ஆலய நிர்மாணங்கள் ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என நான்கு வகைப்படும்.

## ❖ <u>ஆவர்த்தம்</u>:

ஓர் ஆலயத்தைப் புதிதாகக் கட்டிமுடித்து முதன்முதலாக விக்கிரகஸ்தாபனம் முதலியன செய்து அனுக்ஞை முதல் கும்பாபிடேகம் வரை செய்து முடிப்பதாகும்.

## ❖ <u>அநாவர்த்தம்</u>:

ஆற்றுநீர்ப் பெருக்காலோ, விடாமழை பொழிந்தாலோ, பூமி அதிர்ச்சிகளாலோ, மணல் மூடியதாலோ ஆலயங்கள் அழிந்துபோனால் திரும்பவும் அதைக்கட்டிமுடித்து விக்கிரகங்கள் முதலியவற்றைப் புதிப்பித்துச் சீர்திருத்தம் செய்வதாகும்.

❖ **புனராவர்த்தம்**:

இதனை ஜீர்ணோத்தாரன அட்டபந்தன மகாகும்பாபிடேகம் என்பர். நடைமுறையில் இருக்கும் ஆலயத்தில் காலப்போக்கால் எவையேனும் சில பாகங்கள் சிதைந்து போனால், அவற்றைப் பூர்த்தி செய்து விக்கரகங்கள் அலையாது அசையாது இருக்கும்படி மருந்துகள் சார்த்தி, எல்லாக் கிரியைகளையும் இனிது நடத்தி யாக சாலைகளில் கும்பங்களில் எழுந்தருளப் பண்ணியிருந்த மூர்த்திகளைத் திரும்பவும் கோவில் விக்கிரகங்களில் ஆவாஹனம் பண்ணதலாம் எட்டு சக்திகளோடு இறைவனை இணைப்பதால் அட்டபந்தனம் என இதனைக் கூறுவர்.

❖ **அந்தரிதம்**:

சில ஆலயங்களில் திருடுதற் பொருட்டு அசுத்தம் நிறைந்த பொருள்களோடு திருடர்கள் புகுந்து ஆலயத்தை அசுத்தப்படுத்தி விடுகின்றனர். அவ்வசுத்த நீக்கத்தின் பொருட்டுச் சம்பரோட்சனம் செய்யப்படும். அதுவே அந்தரிதம் ஆகும்.

# பிரதிட்டைக்குரிய கிரியைகள்

பிரதிட்டைக்குரிய கிரியைகள் அறுபத்து நான்காகுமென ஆகமங்கள் கூறுகின்றன. அவற்றுள் இன்றியமையாக் சில கிரியைகள் உள்ளன.

1. **அனுஞ்ஞை:**

ஆகம நூல்களை ஆராய்ந்தறிந்து, கிரியைகளை ஒழுங்குபடச் செய்யும் ஆற்றல் வாய்ந்த ஓர் ஆச்சாரியனைத் தேர்ந்தெடுத்து, இவ்வரிய செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனம் செய்வதாகும்.

2. **கணபதி பூஜை:**

எடுத்தகாரியம் இடையூறின்றி இனிது நிறைவேற அருள் புரியும் மகாகணபதியை வணங்குதலாம்.

3. **வாஸ்து சாந்தி:**

தேவர்களைப் பூசித்து இடையூறு வராமற் காக்கும்படி வேண்டுதலாகும். கும்பாபிடேகம் இனிது நிறைவேற வேண்டிய பணிகள் புரிபவர்களுக்கும், அதில் கலந்து கொள்பவர்களுக்கும் எவ்விதமான இடையூறும் வராமலும், அசுரசக்திகளின் தொந்தரவு ஏற்படாமலும் இருக்கச் செய்யும் கிரியையாகும்.

4. **மண் எடுத்தல்:**

இந்திரன் முதலிய எட்டுத் திசை காவலரிடமும் அனுமதி பெற்று, சுத்தமான பூமியிலிருந்து மண் வெட்டி எடுத்து, எடுத்த பள்ளத்தில் பொருள்களால் அபிடேகம் செய்தலாகும்.

## 5. முளையீடு:

பாலிகையினும் மண்பாத்திரத்தில் மண்ணினை நிரப்பி வித்துகளைச் சிதறி முளை வளர விடுதல் ஆகும். இது இறைவன் உலகை சிருட்டிப்பதை ஒக்குமாதலால் முக்கியமாயிற்று.

## 6. காப்புக் கட்டு:

கிரியைகளை நடத்தும் ஆச்சாரியனுக்கு இடையூறுகள் வராமல் காத்தற் பொருட்டுக் கடவுளை வேண்டி அவன் கையில் மந்திர பூர்வமாகக் கயிறு கட்டுதல் ஆகும்.

## 7. கும்பத்தாபனம்:

ஒரு குடத்தைச் சுத்தமாக்கி அதனை ஓர் உடல்போலப் பாவித்து, அதன் தோலாக ஆடை அணிவித்து, அதன் இரத்தமாக மேல் மண்பூசி, அதன் மாமிசமாகச் சிலவற்றை இட்டு, அதன் நரம்புகளாக நூல்களைச் சுற்றி, அதன் தாதுவாக இரத்தினமிட்டு, அதன் ஜீவனாக மந்திரம் கூறி, குடத்தை வித்தியாதேகமாகப் பாவிக்க வேண்டும்.

## 8. கலாகர்ஷணம்:

எந்த மூர்த்தியை எந்தக் குடத்தில் ஆவாகனம் பண்ணகிறோமோ அந்த மூர்த்தி அக்குடத்தில் இருப்பதாகக் கருதி அக்குடத்திற்கு அலங்காரம் முதலியன செய்து பூசித்து வழிபாடாற்றுதலாம்.

## 9. யாகசாலை:

- ஆலயத்தில் கும்பாபிடேகத்திற்கு முன் யாகசாலை, ஒன்று, மூன்று, ஐந்து, ஒன்பது குண்டவிதானமாக அமைக்கப்படும்.
- இக்குண்டத்தை எண்பத்தொன்று பாகமாகச் செய்து நடுவில் பிரமபதத்தினை அமைப்பர்.
- அதனை சுற்றிப் பதினாறு, இருபத்துநான்கு, முப்பத்திரண்டு பதங்களாகப் பல பதங்களை அமைப்பர்.
- அதில் தீயை வளர்த்து, இறைவனுக்குச் செய்யப்படும் பூஜைக்குரிய பொருள்களைத் தீயில் இட்டு எரிப்பர்.
- அது இறைவனுக்கு 'ஹவிஸ்' எனும் பொருளாக மாறி அவரிடம் சேர்கின்றது.

[

## 10..பிம்பசுத்தி:

விக்கரகத்திலுள்ள அழுக்கு நீங்குதற்பொருட்டு பட்டை, தளிர், மண் இவைகளைக் கொண்டு தேய்த்து அபிடேகம்.செய்தலாகும்.

## 11.ஸ்பர்சாகுதி:

யாகாசாலைக் குடத்திற்கும், மூலவிக்கிரகத்திற்கும் தர்பைக்கயிறு, தங்கக்கம்பி, வெள்ளிக்கம்பி இவற்றால் இணைப்பு ஏற்படுத்தலாம்.

## 12. அட்டபந்தனம்:

இது மூலஸ்தான மூர்த்திக்குச் செய்யப்படும் முக்கிய கிரியையாகும். மூர்த்தியையும், பீடத்தையும் ஒன்று சேர்த்தல் அல்லது பந்தித்தல் ஆகும். இவ்வாறு ஒன்று சேர்ப்பதற்கு மருந்து சார்த்தல் எனக் கூறுவர்.

## 13. <u>குடமுழுக்கு:</u>

- யாகசாலையில் எந்த மூர்த்திக்கு எந்தக் குடம் வைத்துப் பூஜிக்கப்படுகிறதோ அந்தக் குடத்து நீரை மூர்த்திக்கு அபிடேகித்தலாம்.
- அப்போது அந்த மூர்த்தி அந்த விக்கிரகத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்றார்.
- அந்த விக்கிரகத்திலிருந்து பலவித சக்திகள் வெளிவருகின்றன. அவை அனைத்தும் வழிபடும் மக்களுக்குப் பல வகையில் அருள்புரிகின்றன.

## 14. <u>மகாபிடேகம்:</u>

கும்பாபிடேகம் கழிந்த பிறகு இறைவன் எழுந்தருளியிருக்கும் விக்கிரகத்திற்கு முறைப்படி அபிடேக, அலங்கார, நிவேதனம் செய்தல் மகாபிடேகமாகும்.

## 15. <u>மண்டலாபிடேகம்:</u>

மகாகும்பாபிடேகம் ஆகி மூன்று பட்சம் கழித்து செய்யப்படும் அபிடேக ஆராதனைக்கு மண்டலாபிடேகம் என்று பெயர்.

# ஆலய வழிபாடு

- ஆலய வழிபாடு அனைவருக்கும் இன்றி அமையாதது.
- ஆலயத்திற்குச் சென்று வழிபட விரும்புவோர் மேற்கொள்ள வேண்டிய சில முறைகள் உள்ளன.
- அம்முறைகளைக் கடைபிடித்து ஒழுகினால் ஆலய வழிபாட்டாலாகிய நன்மையைப் பெறலாம்.
- நீராடாதவர்களும், சுத்தமான ஆடை உடுத்தாதவர்களும், வீட்டில் விலக்கான பெண்களும் ஆலயத்தினுள் செல்லக் கூடாது.
- ஆலயத்துக்குப் போகுமுன் ஆறுகுளங்களில் வேட்டி முதலியவற்றை நன்கு தோய்த்து நீராடி, பின்னர் தோய்த்துலர்ந்த ஆடை கட்டிக் கொள்ள வேண்டும்.
- தீக்கை பெற்றவர்கள் அனுட்டானம் முடித்து உணவு அருந்தாமல் ஆலய வழிபாட்டிற்கு ஏகவேண்டும்.
- சைவர்கள் விபூதி, சந்தனம், உருத்திராக்கம் முதலியவைகளையும், வைணவர்கள் நாமம், துளசிமணிமாலை முதலியவற்றையும் மற்றையோர் அவரவருக்குரிய சமயச் சின்னங்களையும் தரித்துக் கொள்ள வேண்டும்.

## 1. விபூதி:

- புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை, அக்கினியில் நீற்றிஎடுக்கும் பொடியே விபூதியாம்.
- விபூதியைப் புதுத்துணியால் வடிகட்டி நறுமலரிட்டுப் புதிய பாத்திரங்களில் வைத்து, அவசியத்திற்குத் தக்கபடி பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது எடுத்துவைத்துக் கொள்ள வேண்டும்.
- தன்னைத் தரித்தவர்க்கு ஐசுவரியத்தைக் கொடுத்தலால் பூதியென்றும், இரட்சித்தலால் இரட்சையென்றும், சிவத்துவத்தை விளக்குவதால் பசிதம் என்றும், பாவங்களை நீக்கலால் பஸ்மம் என்றும், மலத்தைக் கழுவுவதால் குட்சாரம் என்றும் பெயர் பெறும்.
- துர்நாற்றத்தைப் பசுவின் சாணம் அகற்றுவது யாவரும் அறிந்த உண்மை. அதுபோலவே நமது உடலிலுள்ள துர்நாற்றங்களை அகற்ற சாணத்தால் தயாரிக்கப்படும் விபூதி மிகவும் அவசியமானதாகும்.
- சிரசிலுள்ள நீர்த்தோசம், தலைவலி முதலியவற்றை அகற்றவும் இது பயன்படுகிறது.
- அன்றியும், இத்திருநீறு யாவரும் "முடிவில் பிடி சாம்பராவர்" என்ற நிலையாமையை நமக்கு உணர்த்தி, "நீயும் இத்தகைய நீறாய்ச் சிறிதுகாலத்திற்குள் முடிவாய்; ஆதலால் உன் வாழ்க்கை தூய்மையுடனும், இறைவன் மீது உற்றபற்றுடனும் இருத்தல் வேண்டும்" என எச்சரிக்கின்றது.
- பசுவாகிய ஆன்மாவின் மலம் நீறாகிய பின்னரே ஜீவன் சிவனாகிறான் என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது.
- விபூதி மத சம்பந்தமாகவும், ஆரோக்கியம் சம்பந்தமாகவும் பயன்படுதலின் நமக்கு இது இன்றியமையாததாகும்.

- ❖ வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் நின்று விபூதியைப் பூமியில் சிந்தாதபடி நடுவிலுள்ள மூன்று விரல்களால் எடுத்து அண்ணாந்து சிவ சிவ என்று சொல்லிச் சிவனை தியானித்து பூசுதல் வேண்டும்.
- ❖ காலை மாலைகளிலும், குளித்த உடனும், பூஜைக்கு முன்னும், ஆலய வழிபாட்டுக்கு முன்னும், சாப்பாட்டிற்கு முன்னும் அணிதல் வேண்டும்.
- ❖ சமயதீட்சைமுறைப்படி விபூதி தரிப்பது தகுதியுடையது.
- ❖ எனினும், தீட்சை பெற்றுக்கொள்ளும் வரை விபூதியைத் தண்ணீரிலே குழைத்து
    - ➢ "ஈசானமூர்த்தியே நம;" என்று சொல்லிச் சிரசிலும்,
    - ➢ "தத் புருஷ வக்த்ராய நம;" என்று சொல்லி நெற்றியிலும்,
    - ➢ "அகோர ஹிருதயாய நம;" என்று சொல்லி மார்பிலும்,
    - ➢ "வாமதேவ குஹயாய நம;" என்று சொல்லி கொப்பூழிலும்,
    - ➢ "ஸத்யோஜாதமூர்த்தியே நம;" என்று சொல்லிப் புஜங்களிலும், கை மூட்டுகளிலும், மணிக்கட்டுகளிலும், இடுப்புகளிலும் தரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

## 2. உருத்திராக்கம்:

- ❖ சிவபெருமானது மூன்று திருக்கண்களிலிருந்தும் பொழிந்த நீரில் தோன்றியதாக எண்ணிச் சிவனடியார்கள் அணிந்து கொள்ளும் மணிக்கு 'உருத்திராக்கம்' என்று பெயர்.
- ❖ உருத்திராக்கம் என்பது ருக்கினை அல்லது சம்ஸார துக்கத்தை திரவிப்பது அல்லது இல்லாமற் செய்வது.
- ❖ உருத்திராக்கம் சிவனது கண்ணோட்டம் எனவும் கூறுவர்.
- ❖ நல்ல உருத்திராக்கத்தை உரைத்துப் பார்த்தால் பசும்பொன்னின் மாற்றிருக்கக் காணலாம்.

- இதனை உரைத்து மருந்தோடு கலந்து குடித்தால் பல நன்மைகள் உண்டாகின்றன என மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். உருத்திராக்கத்தின் வழி உடலிற் பாயும் நீர் புனிதமானது.
- கோவில் அர்ச்சகர்களும், அடியார்களும், துறவிகளும் உருத்திராக்கத்தை அவசியம் தரித்தல் வேண்டும்.
- உருத்திராக்கத்தில் ஒரு முகமணி முதல் பதினாறு முகமணி வரை உண்டு.
- கழுத்தில் முப்பத்திரண்டு மணிகளை ஒருங்கு சேர்த்து மாலையாக அணியலாம்.
- மார்பில் நூற்றெட்டு, ஐம்பத்துநான்கு, இருபத்தேழு எண்ணிக்கையில் பொடி மணிகளை மாலையாகக் கோர்த்து ஜபத்திற்கும் பயன்படும்படித் தரித்துக் கொள்ளலாம்.

## 3. சந்தனம்:

- சந்தனம் மிகக் குளிர்ச்சியுடையதும் மணமுடையதுமாகும்.
- அஃது, உடலிலுள்ள வெப்பத்தை நீக்கித் தண்மை (குளிர்ச்சி) யைத் தந்து உற்சாகத்தை உண்டு பண்ணுகிறது.
- பல நரம்புகள் புருவ மத்தியில் ஒன்று கூடுவதால் அவைகட்கு வெப்பம் ஏற்படாதிருக்க குளிர்ச்சியுடைய சந்தனத்திலகம் இடல் வேண்டும்.
- பரமசிவனது நெற்றிக்கண்ணை நினைப்பூட்டுதற்கும் அடியார்கள் திலகம் அணிந்து கொள்ளுகின்றனர்.

## 4. திருமண்:

- நாமம் ஒருவகைத் திருமண்ணால் இடப்படுவது.
- எல்லாம் முடிவில் மண்ணாய் விடும் என்பதை இது உணர்த்துகின்றது.

## 5. விக்கிரகங்கள்:

- ஆலயங்களில் நிலைநிறுவப் பெற்றிருக்கும் திருவுருவங்களுக்கு ‘விக்கிரகம்‘ என்று பெயர்.
- இறைவனிடம் பேரன்புகொண்ட அடியவர்கள் இறைவனது திருவுருவத்தைப் படங்களிலும், ஆலய விக்கிரங்களிலும் வணங்கி வருகின்றனர்.
- விக்கிரகங்களில் சில சுயம்புவாகவே முளைத்தவையும் உண்டு.
- தேவர்கள், ரிசிகள் முதலியவர்களாலும் பிரதிட்டிக்கப்பட்டவையும் உள்ளன.
- ஆலய விக்கிரகத்தை வைணவர் அர்ச்சை எனக் கூறுவர்.
- சரியைவான்கள் முதல் ஞானவான்கள் வரை எல்லா மக்களுக்கும் விக்கிரக வழிபாடு இன்றியமையாததே.
- ஞானிகளாகிய திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், இராமகிருஷ்ண பரமஹம்சர் முதலியோர் விக்கிரக வழிபாடு செய்தே மேனிலையுற்றனர்.

# ஆலய வழிபாடு செய்யும் முறை

- ❖ கோயிலின் பக்கத்திற் சென்றதும் கைகால்களைக் கழுவிக் கொண்டு கோபுரத்தின் முன்சென்று, நின்று இரண்டு கரங்களையும் தலைமேற்குவித்து மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டும், தோத்திரப் பாடல்களைப் பாடிக்கொண்டும், வேறு விசாரங்கள் ஒன்றுமில்லாமல் கோபுரத்தை ஸ்தூல லிங்கமாகவும், கடவுள் பாதங்களாகவும் பாவித்து வணங்கிக் கோயிலுக்குள் போக வேண்டும்.
- ❖ கொடிமரத்தின் பக்கத்திற் சென்றதும் புருடர்கள் தலை, செவியிரண்டு, கையிரண்டு, புஜங்களிரண்டு, மோவாய்க் கட்டை ஆகிய எட்டு அவயவங்களும் பூமியிற்படும்படி வணங்கல் வேண்டும். இது அட்டாங்க வணக்கம் என்று கூறப்படும்.
- ❖ பெண்கள் தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு ஆகிய ஐந்து அவயங்களும் பூமியிற்படும்படி வணங்கல் வேண்டும். இதனைப் பஞ்சாங்க வணக்கம் என்பர்.
- ❖ மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு பிரகாரங்களை வலம்வரல் வேண்டும்.
- ❖ பிரகாரங்களை வலம் வந்து, பலீபீடத்தின் அருகிற் சென்று, நம்மிடம் உள்ள காமம், குரோத, லோப, மோக, மத, மாற்சரிங்களைப் பலி கொடுக்க உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ❖ பின் கன்னிமூளையில் உள்ள விநாயகர் சந்நதியில் சென்று வலக்கையை இடக்கையின் முன் வைத்து வலக்கையால் இடப்புறத்திலும், இடக்கையால் வலப்புறத்திலும் மண்டையில் மூன்று முறை குட்டுகளிட்டு, வலக்கையால் இடக்காதையும்,

இடக்கையால் வலக்காதையும் பிடித்துக் கொண்டு மூன்றுமுறை தோப்புகரணமிட்டு, விநாயகர் தோத்திரம் கூறி வணங்கல் வேண்டும்.

- விநாயகரை வணங்கிய பிறகு துவாரபாலக விக்கிரகங்கள் முன் சென்று, "அடியேன் இறைவனை வணங்குவதற்கு அனுமதி செய்தருளும்" என்று வேண்டிக் கொண்டு சந்நிதியிற் சென்று, இறைவனை வணங்கித் தோத்திரப்பாக்கள் கூறல் வேண்டும்.
- தேங்காய், பழம் முதலிய நிவேதனப் பொருள்களை கொடுத்து நிவேதிக்கச் செய்யலாம்.
- கற்பூரதரிசனம் செய்து, திருநீறு பெற்றுக் கொண்டு, மூலஸ்தான மூர்த்தியை நன்றாய் மனதில் பதியவைத்து துதித்து வெளிவரல் வேண்டும். அம்பிகை சந்நிதியிலும் இவ்வாறே செய்தல் வேண்டும்.
- உட்பிரகாரங்களில் இருக்கும் ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கிக் கொண்டே வலம் வரல் வேண்டும்.
- தட்சிணாமூர்த்தி விக்கிரகத்தின் முன்னர் சென்று அவரை குருவாகப் பாவித்து வணங்கல் வேண்டும்.
- பின்னர் முருகப்பெருமானிடம் சென்று வணங்கித் தோத்தரித்து சண்டேசுரர் சந்நதியை அடைந்து, சிவத்தியானத்தில் இருக்கும் இவரிடம் மூன்றுமுறை கையால் கொட்டி, அவர் நம்மைப் பார்ப்பதாகக் கருதிச் சிவதரிசன பலனைத் தருமாறு பிரார்த்திக்க வேண்டும்.
- கையைத் தட்டுவதனால் உண்டாகும் ஒலி அவருக்குப் பிரீதி அளிப்பதால் அவரை ஒலிச்சண்டேசுவரர் எனவும் கூறுவர்.
- பின்னர் நவக்கிரகங்கள் முதலியவைகளை வணங்க வேண்டும்.
- கோள்கள் மனிதர்களுக்குச் செய்யும் தீமைகளைக் குறைப்பதற்காக நவக்கிரக ஆராதனை வணக்கமும்," சனீசுவர

பகவானே! உனைத் தொழுவேன் எனைத் தொடாதே” என வேண்டித் தீவினை நம்மை, அணுகாதிருக்கவும் நவக்கிரக சனீசுவர ஆராதனை கோவில்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ விஷ்ணு ஆலயங்களில் இறைவன் திருமுன்பு வீற்றிருக்கும் பெரிய திருவடியாகிய கருடாழ்வாரை வணங்கி உட்சென்று மூலஸ்தான மூர்த்தியின் முன்நின்று திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பாடித் துதித்துத் துளசியும், தீர்த்தமும் பெற்று, சடாரி சாத்தப்பெற்று, மூர்த்தியைத் தியானித்துத் தாயார் சந்திதானத்துக்கும் சென்று அங்குத் தாயாரைச் சேவித்துக் கொண்டு வலம் வரும்பொழுது உட்பிராகாரத்தில் காணப்படும் மூர்த்திகளை வணங்கி வெளியே வரல் வேண்டும்.
- ❖ இந்தவிதமாக ஆலய தரிசனம் உள்ளே முடிந்த பிறகு கொடி மரத்திற்குச் சற்றுதூரம் விலகியிருந்து உள்ளேயுள்ள மூர்த்தியின் மூலமந்திரத்தை (சிவத்தியானத்துக்குரியது ”ஓம் நமசிவாய” விஷ்ணுத் தியானத்துக்குரியது ”ஹரி ஓம் நமோ நாராயணாய)
- ❖ நூற்றெட்டு முறைக்குக் குறையாமல் ஜபித்து மூர்த்தியை தியானித்துக்கொண்டு மௌனமாக வீட்டிற்கு வரல் வேண்டும்.

## <u>தலங்களும் திவ்விய தேசங்களும்</u>

- ❖ ஆலயங்களில் சைவசமய குரவர்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற ஆலயங்கள் மிகச்சிறப்புடையன.
- ❖ தேவாரப்பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் ”தலங்கள்” என்றும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் ”திவ்விய தேசம்” என்றும் பெயர்பெறும்.
- ❖ ஆழ்வார்கள் பாடல்களை ”மங்களா சாசனம்” எனச் சிறப்பித்துக் கூறுவர்.
- ❖ சமயாச்சாரியர்களால் பாடல் பெற்ற தலங்கள் இருநூற்று எழுபத்து நான்காகும். அவை

| | |
|---|---|
| சோழ நாடு | 190 |
| தொண்டை நாடு | 32 |
| நடு நாடு | 22 |
| பாண்டி நாடு | 14 |
| மலை நாடு | 1 |
| துளுவம் | 1 |
| கொங்கு நாடு | 7 |
| ஈழநாடு | 2 |
| வட நாடு | 5 |
| ஆக தலங்கள் | 274 |

- ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திருப்பதிகள் நூற்றெட்டாகும். விவரம்

| | |
|---|---|
| சோழ நாடு | 40 |
| பாண்டி நாடு | 18 |
| மலை நாடு | 13 |
| நடு நாடு | 2 |
| தொண்டை நாடு | 22 |
| வட நாடு | 12 |
| பரமபதம் | 1 |
| ஆக திருப்பதிகள் | 108 |

# இதரச் சிறப்புப்பெற்ற தலங்கள்

- திருக்காளத்தி. திருச்சிராப்பள்ளி. திருக்கோணமலை இவற்றைத் தென்திசைக் கயிலை எனக் கூறுவர்.
- அட்டவீரட்டங்கள் சிவபிரான் புரிந்த எட்டு வீரச்செயல்களை தன்னகத்தே கொண்ட தலங்களை ”அட்டவீரட்டங்கள்” என்பர்.

**அட்டவீரட்டங்கள்:**

- திருக்கண்டியூர்,
- திருக்கோவலூர்,
- திருவதிகை,
- திருப்பறியலூர்,
- திருவிற்குடி,
- திருவழுவூர்,
- திருக்குறுக்கை
- திருக்கடவூர்

**சில மூர்த்தி விசேட தலங்கள்**:

- விநாயகர் – வலஞ்சுழி,
- திருகுமரன் – திருவேரகம்,
- தட்சிணாமூர்த்தி – ஆலங்குடி,
- சண்டேசர் – சேய்ஞலூர்,
- நந்தி – திருவாவடுதுறை,
- வடுகன்(வைரவர்) – சீர்காழி,
- சபாபதி – தில்லை,
- தியாகராஜர் – திருவாரூர்.

**காசிக்குச் சமமான தலங்கள்**:

- திருவெண்காடு,
- திருவையாறு,
- திருமயிலாடுதுறை (மாயூரம்),
- திருவிடைமருதூர்,
- திருச்சாய்க்காடு,
- திருமுதுகுன்றம் (விருத்தாசலம்),
- திருவாஞ்சியம்.

**நவ திருப்பதிகள்:**

1. ஸ்ரீவைகுண்டம்,
2. ஆழ்வார்திருநகரி,
3. தென்திருப்பேரை,
4. தொலைவில்லிமங்கலம்,
5. திருக்குளத்தை,
6. புளிங்குடி,
7. திருக்கோளூர்,
8. வரகுணமங்கை.

------*****-----****----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம்**

**பகுதி** : **ஆகமம்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# ஆகமம்

- ஆகமம் என்ற சொல்லை ஆ கமம் எனப் பிரிக்கலாம்.
    ஆ - ஆன்மாக்களின்
    கமம் - பாசங்களை நீக்கம் செய்து முத்திப் பேற்றை அருளுவது.
- இறைவனது ஐந்து முகங்களிலிருந்து இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றின வென்ற காரணத்தை ஆகமத்தால் அறிகிறோம்.

| | |
|---|---|
| சத்யோஜாத முகம் (ஐந்து) | 1. காமிகம்<br>2. யோகஜம்<br>3. காரணம்<br>4. அஜிதம்<br>5. சிந்தியம் |
| வாமதேவ முகம்(ஐந்து) | 1. தீப்தம்<br>2. அம்சுமான்<br>3. குஷ்மம்<br>4. சுப்ரபேதம்<br>5. ஸஹஸ்ரம் |
| அகோர முகம்(ஐந்து) | 1. விஜயம்<br>2. அநலம்<br>3. நிச்வாசம்<br>4. வீரம்<br>5. சுவாயம்புவம் |
| தத்புருஷ முகம்(ஐந்து) | 1. ரௌரவம்<br>2. சந்திர ஞானம்<br>3. மகுடம்<br>4. பிம்பம்<br>5. விமலம் |
| ஈசான மதம் (எட்டு) | 1. ப்ரோத்கீதம்<br>2. சர்வோக்தம்<br>3. இலளிதம்<br>4. சித்தம்<br>5. கிரணம்<br>6. சந்தானம்<br>7. பாரமேச்வரம்<br>8. வாதுளம் |

## இருபத்தெட்டு ஆகமங்கள்:

- பத்து ஆகமங்கள் சிவ பேதங்களாகும்.
- பதினெட்டு ஆகமங்கள் ருத்ர பேதங்களாகும்.
- சரியாபாதத்தில் பூஜைக்குரிய பொருள்களைச் சேகரித்தலும், பூஜை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

  கிரியாபதத்தில் கர்ணம் (உழுதல்) முதல் பிரதிஷ்டைவரையில் உள்ள கிரியைகளும், நித்திய நைமித்திக பூஜைகளும் திருவிழா முறைகளும், சமய, விசேஷ நிர்வாண தீட்சை விதிகளும் கூறப்பட்டுள்ளன.
- யோகபாதத்தில் ஆன்ம சுத்தி, அந்தர் யாகம்
- ஞானபாதத்தில் பதி, பசு, பாச இலக்கணங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

  தசகாரியங்களது இலக்கணங்கள்
- தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆத்ம ரூபம், ஆத்ம தரிசனம், ஆத்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம்.

## வைணவாகமங்கள்

- ஸ்ரீமந் நாராயணனாகிய விஷ்ணுவை பரதேவதையாகக் கூறும் ஆகமங்கள் வைணவாகமங்களாகும். வைணவாகமங்கள் பாஞ்சராத்ராகமம் எனவும், வைகானஸாகமம் எனவும் இருவகைப்படும். பாஞ்சராத்ராகமம் பல ரிஷிகளின் மூலமாகவும், வைகானஸாகமம் விகனஸர் என்ற மகரிஷியின் மூலமாகவும் உபதேசிக்கப்பட்டன.

- இவ்விரு ஆகமங்களுக்கும் அதிக பேதமில்லை. ஆனால், ஆலய பூஜாவிதிகளிலும், தினசரியைகளிலும் சிறிது பேதமுண்டு.
- பாஞ்சராத்ரஸம் ஹிதைகளின்படி மேலக்கோட்டை என்கிற திருநாராயணபுரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் என்ற மூன்று ஆலயங்களிலும் பூஜை முதலியன நடைபெற்று வருகின்றன.
- திருப்பதி கோவில் வைகானஸ ஆகமத்தை ஒட்டி, நடந்துவருகிறது. ஒரு யாகத்தின் இடையில் ஐந்து இரவுகளில் பகவானால் உபதேசிக்கப்பட்டதால் பாஞ்சராத்ரம் எனப் பெயர் பெற்றது எனவும் கூறுவர். இவ்வாகமத்தில் பஞ்ச பூதங்கள், பஞ்ச தன்மாத்திரைகள், அஹங்காரம், புத்தி, அவ்வியக்தம் என ஐந்து பாகங்கள் விளக்கப்பட்டுள்ளன
- இப்பாஞ்சராத்ராகமங்களில் தேவாலயங்களுக்கென்று ஏற்பட்ட தலங்கள், தேவாலய நிர்மாணங்கள், விக்கிரகப் பிரதிஷ்டாக் கிரமங்கள், பூஜாகாலங்கள், பூஜாதிரவியங்கள், உத்ஸவாதிகள், ஸம்ப்ரோட்சணாதிகள், பூஜை செய்பவர்களின் யோக்கியதாம்சங்கள், அவர்களுக்கு ஏற்பட்ட தீட்சை முதலியவைகள் விளக்கப்பட்டுள்ளன.
- ஆகமங்களால் சொல்லப்படும் பொருள்களில் மிகவும் முக்கியமானவை மந்திரங்களும், தந்திரங்களும் (முத்திரைகளும்) ஆகும். இவை ஆலய நித்திய, நைமித்திக பூஜைகளுக்கு இன்றியமையாத சாதனங்களாகும்.

------*******-----*******-----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம் (வைணவம்)**

**பகுதி** : **<u>ஆகமமும் நாராயணனும்</u>**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# ஆகமமும் நாராயணனும்

- ஜனமேஜயருக்கு வைசம்பாயனர் மஹா பாரதத்தைச் சொன்னவர்.
- அந்த சமயம் ரோமஹர்ஷணர் குமாரர் உக்ரச்ரவஸ் என்பவர் உடனிருந்து கேட்டவர்.
- அந்த உக்ரச்ரவஸ் என்பவர், நைமிசாரணியம் என்னும் திவ்விய தலத்திற்கு வந்து அங்கு ஸத்ரம் என்னும் யாகத்தைச் செய்து கொண்டிருந்த சௌனகர் முதலான பலமஹரிஷிகளுக்கு மஹாபாரதத்தைப் பிரவசனம் செய்தார் என்னும் வரலாறு.
- உக்ரச்ரவஸ் என்பவர், தாம் மஹாபாரதத்தைச் சொல்லத்தொடங்கும் போதே, பின் குறிக்கப்பெறும் கருத்தை நன்கு வெளியிட்டிருக்கிறார்.
- அளவறிந்த தேசுபொருந்திய வியாஸ பகவானுக்கு நமஸ்காரம். அவர் அருளினால் இந்த நாராயண கதையைச் சொல்லத் தொடங்குகின்றேன்.
- நாராயணகதை எங்ஙனம் பயனளிக்குமோ அங்ஙனம் பிரமசரியம் முதலிய ஆசிரம தருமங்களைச் செய்வதும் தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானம் செய்வதும், பயனைக் கொடுக்கமாட்டா.
- நாராயணனுக்கு ஒப்பு, முன்னும், பின்னும் இப்போதும், எப்போதும் இல்லை.
- மஹாபாரதம், நாராயணன் சரிதத்தையே கூறவந்த சிறந்த நூல் என்பதாகும்.
- நாராயணசரிதம் மிக மேலான பயனை அளிக்கும்.
- நாராயணன், ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவன் ஆவார்.

- மஹாபாரதம் ஐந்தாவது வேதமாய்க் கூறப்பெற்றிருக்கிறது. இதில், உபநிஷத்தாக பகவத்கீதை அமைந்திருக்கிறது.
- அந்தப் பகவத் கீதையின் ஸாரப் பொருளை நாம் அனுபவிக்கும் போது, நாராயணன் மேன்மையை நன்கு அறியலாகும்.

------****-----*******----

# தமிழ்நாடுஅரசு
# வேலைவாய்ப்புமற்றும்பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group VIIB & VIIIதேர்வு

பாடம்: : இந்துமதம்

பகுதி : **<u>அத்வைத,விசிஷ்டாத்வைத,துவைத சித்தாந்தங்கள்</u>**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதிVIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சிபதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித்தேர்விற்கு தயாராகும்மாணவ, ணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனி நபரோ அல்லது தனியார் போட்டித்தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறுஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இதுமுற்றிலும் போட்டித்தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**

**வேலைவாய்ப்புமற்றும்பயிற்சித்துறை**

# அத்வைதம் தோற்றம்

- இந்த மதத்தை பரப்பியவர் சங்கர பகவத் பாதராவார்.
- இவர் 1200 வருடங்களுக்கு முன் மலையாள நாட்டில் காலடி என்னும் திருப்பதியில் அவதரித்தார்.
- இளமையிலேயே துறவியாகி வேதாந்த விசாரணை செய்து காசி, காசுமீர் வரைசென்று அத்வைத மதத்தைப் பல இடங்களில் பிரசாரம் செய்து வந்தார்.
- புத்த, சமண மதக்கொள்கைகளை கண்டித்து வெற்றிபெற்றார்.
- இவர் பெற்ற வெற்றியால் பழைய வேதாந்தநெறி மீண்டும் தழைத்தோங்கிற்று.
- அத்வைத மதத்திற்கு வேதாந்தமதம் எனவும் பெயருண்டு . இதனைப் பின்பற்றுவோர்களை வேதாந்திகள் எனக்கூறுவர்.
- இவர் வேதவியாசர் இயற்றிய பிரமசூத்திரத்திற்கும் , பகவத்கீதைக்கும், தசோபநிஷத்துகளுக்கும் அத்வைத சித்தாந்தப்படி பாஷ்யம் இயற்றியுள்ளார் . இம்மூன்றையும் பிரஸ்தானத்திரயம் எனக் கூறுவர்.
- விஷ்ணுஸஹஸ்ர நாமத்திற்கும் பாஷ்யம் இயற்றியதோடு மூர்த்திபேதம் பாராட்டாமல் தோத்திரங்களை இயற்றியுள்ளார்.
- சைவ, வைணவ பேத மற்ற கொள்கையையுடையவர்.
- இறைவனை எங்கும் , யாவுமாய்ப் பார்த்துப் பரமானந்தம் அடைந்து வாழ்ந்தவர். தமது 32ம்வயதில் முத்திபெற்றார்.
- அத்வைதம் என்னும் சொல்லை

  அ =த்வைதம்எனப்பிரிக்கலாம். (அ =இல்லை)

  (த்வைதம் =இரண்டு)அத்வைதம் =இரண்டற்றஒன்று.

  “அகம்பிர்மாஸ்மி ”நான்பிர்மமாயிருக்கிறேன்.
- இந்து தத்துவங்களில் இறைவனின் தன்மைபற்றிய ஒரு கொள்கையாகும்.
- ஜீவாத்மா என்பதும் பரமாத்மா என்பதும் ஒன்று தான் . வேறல்ல என்று இத்தத்துவம் கூறுகிறது.
- அத்தத்துவத்தை வழங்கியவர் ஆதிசங்கரர்

## ஆதிசங்கரர் தோற்றம்

- இன்றைய கேரளத்திலுள்ள காலடி என்ற ஊரில் சிவகுரு - ஆர்யாம்பாள் தம்பதியருக்கு மகனாகத் தோன்றினார்.
- கௌடபாதரின் சீடரான கோவிந்த பகவத்பாதரிடம் வேதாந்தம் மற்றும் இதரதத்துவங்களைப் பயின்று சங்கரபகவத்பாதர் என்று அழைக்கப்பட்டார்.
- இவர் தமது எட்டாம் அகவையில் (8-வதுவயது) துறவறம் மேற்கொண்டார்.
- கௌடபாதர் எழுதிய மாண்டுக்யகாரிகை என்ற பிரம்மசூத்திர விளக்நூல் போதிய தெளிவுடன் காணப்படாமையால் அதனை மேலும் எளிதாக்கி விளக்கும் பொருட்டு எழுந்ததே சங்கரின் அத்வைதத் தத்துவமாகும்.
- இந்து சமயத்தின் மூன்று அடிப்படை நூல்கள்என்று அறிப்படும்பத்து உபநிடதங்கள் , பிரம்ம சூத்திரம்மற்றும்பகவத் கீதைக்குவிளக்கவுரை அளித்து அவை போதிக்கும் அத்வைத வேதாந்தம் அதாவது **இரண்டற்றது** என்கிற அத்வைத தத்துவத்தை உலகத்திற்கு எடுத்துக்காட்டியவர்.

## அத்வைதத்தின் நான்கு அடிப்படைக் கொள்கைகள்

1. என்றும் நிலைத்திருக்கும் பொருள் ஒன்றே ஒன்று தான்ஷத் என்றும் பரமாத்மா என்றும் அது அழைக்கப்படுகிறது . அதைத் தவிரவேறு எதுவும் மெய்ப்பொருள் அல்ல.
2. பிரும்மம் என்பது பெயர் மற்றும் உருவம் ஆகிய எவ்விதகுணங்களும் அற்றது . அதனால் அதை நிர்குணம்பிரும்மம் என்று சொல்லி , நாம் மனதால் நினைக்கக்கூடிய குணங்களுடன் சேர்ந்த கடவுள் என்ற பரம்பொருளை ஸகுணப் பிரும்மம் என்றும்- .வேறுபடுத்தவேண்டும
3. ஜீவாத்மா மற்றும் பராத்மா இரண்டும் வெவ்வேறு அல்ல ஒன்றே ஆகும்.
4. உபநிடதங்கள் மெய்ப்பொருளை விவரிக்கும்போது அதை சகுணபிரம்மம் எனக் கொள்ளவேண்டும்.

இதனையே சுருக்கமாகச் சொல்வதாயின்...

1. பிரம்மத்தின் இரண்டற்ற நிலை.
2. பிரம்மத்திலிருந்து ஆன்மா வேறுபடாத நிலை.
3. உலகத்தின் உண்மையற்ற நிலை.

## ஆதிசங்கரர் நிறுவிய ஆறுமதங்கள்:

- சைவம், வைணவம், சாக்தம், கணாபத்தியம், கௌமாரம்சௌரம்முதலியவற்றைமுறைப்படுத்திஆறுசமயங்களாகவகுத்தளித்தார்.

| வ.எண் | சமயம் | கடவுள் |
|---|---|---|
| 01. | சைவம் | சிவன் |
| 02. | சாக்தம் | சக்தி |
| 03. | கௌமாரம் | முருகன் |
| 04. | வைணவம் | திருமால் |
| 05. | கணாபத்தியம் | விநாயகர் |
| 06. | சௌரம் | சூரியன் |

- அவர்தடுத்தாட்கொண்டசமயங்களில்ஒன்றுகபாலிகசமயமாகும். சென்னைக்குஅருகிலுள்ளமாங்காடுஎன்னும்ஊரில்கபாலிகர்களோடுசங்கரர்வாதம்செய்துவென்றார். சங்கருடன்வாதம்செய்துதோற்றமண்டனமிஸரர். துறவறம்ஏற்றுசங்கரின்சீடரானார்.

## ஆதிசங்கரர் இயற்றியநூல்கள் (பதினொன்று நூல்கள்)

1. சிவானந்த
2. லஹரி,
3. கோவிந்ததாஷ்டகம்,
4. பஜனகோவிந்தம்,
5. சித்தாந்தசாங்கியம்,
6. விவேகசூடாமணி,
7. ஆத்மபோதம்,
8. உபதேசசாஹஸ்ரி,
9. கனகதாராசோத்திரம்,
10. சுப்ரஹமண்யபுகஞ்ஜம்,

11. மனீஷாபஞ்சகம்.

## ஆதிசங்கரருக்கு ஆத்மஞானம் கிடைத்த நிகழ்வு:

- ஒருநாள்சங்கரர்ஆற்றில்நீராடிவிட்டுதனதுசீடர்களுடன்வந்தபோதுஜந்துநாய்களுடன்தாழ்ந்தகுலத்தைசேர்ந்தஒருவர்எதிரேவந்தார்.
- சங்கரரின்சீடர்கள், சங்கருக்கு வழிவிட்டு ஒதுங்குமாறு அந்த மனிதனிடம் கூறினார். அதற்கு அந்த மனிதர் என் உடல் நகர வேண்டுமா அல்லது ஆத்மா நகர வேண்டுமா எனக் கேட்க சங்கரர் அந்த மனிதனின் காலில் விழுந்து பணிந்தார்.
- இந்நிகழ்வே சங்கரருக்கு ஆத்மஞானம் பரிபுரணமாக கிடைக்க காரணமாகும். இந்த நிகழ்வை ஒட்டி யேமனீஷாபஞ்சகம் என்ற நூலை இயற்றினார்.
- நிர்வாணஷ்டகம் என்பது சங்கரர் இயற்றப்பட்ட ஆறுசுலோகங்களின் தொகுப்பு ஆகும்.
- இந்த சுலோகங்களில் வேதம் வேள்விமதம் ஆகியவற்றை மறுத்து இறுதியில் பிரம்மமே ஆனந்தமயமானவன் என்று கூறுகிறார்.
- ஆதிசங்கர்சீடர்கள்ஸ் தமாலகர்,சுரேஷ்வரர்,பத்மபாதர் மற்றும் தோடகர்.

**சங்கரர் நிறுவியமடங்கள்**

| முதல்பீடாதிபதி | திசை | பீடம் | மகா வாக்கியம் | நிர்வகிக்க வேண்டிய வேதம் |
|---|---|---|---|---|
| பத்மபாதர் | கிழக்கு | கோவர்தனமடம் | பிரக்ஞானம்பிரம்மம் | ரிக் |
| சுரேஷ்வரர் | தெற்கு | சிருங்கேரிசாரதாமடம் | அஹம்பிரம்மாஸ்மி | யஜீர் |
| அஸ்தமாலகர் | மேற்கு | துவாரகைகாளிகாமடம் | தத்துவமசி | சாமம் |
| தோடகர் | வடக்கு | ஜோசிமடம் | அயமாத்மாபிரம்மம் | அதர்வணம் |

## சங்கரர் நிறுவியமடங்கள் உள்ள இடங்கள்:

| மடத்தின்பெயர் | மாநிலம் | இடம் | சிறப்பம்சம் |
|---|---|---|---|
| **கோவர்தன மடம்** | ஒடிஸா | பூரிநகரம் | பைரவர் மற்றும் பைரவியுடன், இம்மடத்தில் பெருமாள் மற்றும் சிவபெருமாள் புஜிக்கப்படுகிறார். பூரிஜெகந்நாதர் கோயிலுடன் இம்மடம் தொடர்புடையது. ரிக்வேதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இம்மடம் அமைந்துள்ளது. |
| சிருங்கேரிசாரதா | கர்நாடகா | சிக்மங்களூர் மாவட்டத்தில் துங்கபத்திரை ஆற்றங்கரையில் சிருங்கேரி | அத்வைததத்துவத்தைபரப்ப அமைக்கப்பட்டமுதல்மடமாகும். யஜீர்வேதத்தைபிரதிநிதித்துவப்படுத்தும்வகையில்இம்மடம்அமைந்துள்ளது. இங்குசரஸ்வதிக்குகோயில் எழுப்பப்பட்டள்ளது. |
| துவாரகைகாளிகா | குஜராத் | துவாரகை மாவட்டத்தில் கடற்கரை நகரான துவாரகையில் அமைந்துள்ளது. | சாமவேதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இம்மடம் அமைந்துள்ளது. |
| ஜோஷிமடம் | உத்தரகாண்ட் | சமோலி மாவட்டத்தில், இமயமலையில் | பத்ரிநாத் கோயிலுக்கு புனிதயாத்திரை செல்பவர்களுக்கு இம்மடம் நுழைவுவாயிலாக அமைந்துள்ளது. அதர்வணவேதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந்துள்ளது . இங்குள்ள இறைவன் ‘ நரசிம்மர் ’ ஆவார். |

| | | | |
|---|---|---|---|
| | | | |

## அத்வைத மதசாரம்:

- பிரமம் என்ற ஒரு பொருளே உள்ளது . ஜீவர்கள்பிரமமே ஆவர். காணப்படும் உலகம், கயிற்றில்பாம்பும், கானல் ஜலமும்போல பொய்த தோற்றப்பொருளேயாகும்.
- ஒரு சூரியன் பல குடநீர்களில் தோன்றுவது போலவும் , ஒரு உருவம் பலகண்ணாடிகளில் பிரதிபிம்பிப்பது போலவும் , ஒரு பிரமமேயாவற்றிலும் விளங்கிநிற்கிறது. நாம் பாசக்கட்டுகளால் நிலைபெற்ற இன்பத்தை உணராமல் இருக்கிறோம்.
- ஞானத்தினால் அஞ்ஞானம் நீங்கும்பொழுது அஞ்ஞானத்தால் தோன்றியகட்டுகள் அனைத்தும்நீங்கும் . உண்மை இன்பம் விளங்கும்.
- கேட்டல், சிந்தித்தல், தெளித்தல், நிட்டை, கூடல் முதலியவற்றால் நிலைபெற்ற பேரின்பத்தை அடைந்து பிரம்மமயமாகிமுத்தி அடையலாம்.

## விசிஷ்டாத்வைதம்:

- இந்தமதத்தைப்பரப்பியவர் இராமநுஜர் ஆவார்.
- இவர் செங்கல்பட்டுக்கு அருகிலுள்ளஸ்ரீபெரும்புதூரில்கி .பி.1017 ல் அவதரித்தார்.
- தனது பதினைந்தாவது பிராயம் வரை வீட்டிலேயே வேதவேதாந்தங்களை வாசித்துக்கொண்டிருந்தார்.
- விசிஷ்டாத்வைதத்தில் விருப்பமுற்று , ஸ்ரீரங்கம் சென்று பெரியநம்பிகள் ஆச்ரயித்து கொள்கையை நன்கு அறிந்துகொண்டார்.
- இல்லறத்தில் இருந்த இவர் தமது பதினெட்டாவது வயதில் துறவு மேற்கொண்டார்.
- பிரமசூத்திரம், கீதை முதலியவற்றை விசிஷ்டாத்வைதக் கொள்கைப்படி பாஷ்யம் இயற்றினார்.

- விசிஷ்ட - அத்வைதம் - விசிஷ்டாத்வைதம்.
- அத்வைதம்இரண்டற்றதுஒன்றாகஉள்ளது.
- விசிஷ்டம் - விசேஷம், சித்து, அசித்துஇவைகளைஉடம்பாககொண்டிருக்கிறவிசேஷத்தைஉடையது.
- சித்து, அசித்துச்சேர்க்கையால் விளங்கும் இரண்டற்ற ஒன்றானபிரமம் உண்டென்று கூறும் மதம் விசிஷ்டாத்வைதமாகும்.
- நீலகண்ட சிவாச்சாரியார் பிரம்மசூத்திர பாஷ்யத்திற்கு சைவ விசிஷ்டாத்வைதபரமாக பாஷ்யம் ஏற்றி உள்ளார் . அதற்கு நீலகண்டபாஷ்யம் என்றுபெயர்.
- இவர் சங்கரர் காலத்தில் வாழ்ந்தவர் என தெரிகிறது . கோகர்ணத்தில் பிறந்த தெலுங்கர் சைவ ஆகம மாதிசாஸ்திரங்களை கற்று தேர்ந்தவர்.
- விசிஷ்டாத்துவைதம் என்பது காலத்தால் பழமையானது வைணவ ஆச்சாரியராகிய இராமானுஜரால் புகழ்பெற்றது.
- விசிஷ்டாத்துவைதமானது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒரேபொருளால் ஆனவை என்றும் , ஜீவாத்மாபரமாத்வாவிலிருந்து வெளிப்பட்டது என்றும் , கூறுகிறது.
- சித்து, அசித்துச்சேர்க்கையால் விளங்கும் ஒன்றாக பிரம்மம் விளங்குகிறது என்பதே இதன் உட்கருத்தாகும்
- பிரம்மம் ஒருவரே அவரேசித்து என்னும் ஆன்மாவுடனும் அசித்து என்னும் சடத்தோடும் எப்போதும் சேர்ந்திருக்கிறார்.
- ஆச்சாரிய அன்புசுருதி , சுமிருதி, நம்பிக்கை, மோட்சவிருப்பம், உலக ஆசையை அறுத்தல் தர்மசிந்தனை , வேதபாரயணம், சாதுசங்கமச்சேர்க்கை முதலானவற்றால் கருமபந்தியத்தை விட்டுமுக்தி பெறலாம் என இத்தத்துவம் கூறுகிறது.

## <u>விசிஷ்டாத்வைதக்கொள்கைகள்நான்கு:</u>

1. பரப்பிரம்மம் ஒருவரே . அவர்சத்து என்றும் பிரம்மம் என்றும் ஈகவர் என்றும் விஷ்ணு என்றும் பெயர்பெறுகிறார் . அவர்சித்து என்னும் ஆத்மாவோடும் அசித்து என்னும் அநாத்மாவோடும் எப்பொழுதும் சேர்ந்து இருக்கிறார்.
2. பரமாத்மா ஒரு வரேநித்தியர் . சுதந்ததிரம் உடையவர். சித்தும் அசித்தும் பரதந்திர முடையவை . சித்து, அசித்துபரபிரம்மம் ஆகிய மூன்றும் தனித்தனியாக இராமல் ஒரு பொருளும் அதன் குணமும் போல சேர்ந்து இருக்கிறது.
3. சித்தும்,அசித்தும், சரீரம். பரபிரம்மம் சரீரி. சரீரி இல்லாமல் சரீரமும் சரீரம் இல்லாமல் சரீரியும் இல்லை . ஜீவக்கோடிகள் இறைவனின் தாசர்கள்.
4. மோட்சம் அடைய நிர்மலமான பத்தியேசாதனம் . சித்து, அசித்து, பரபிரம்மம் என்பதனைப் பற்றிநாணம் பெறல் , ஆசாரிய அன்பு கருதிஸ்மிருதி நம்பிக்கை மோட்சவிருப்பம் உலகஆசை அறுதல் தருமசிந்தனை வேதபாராயணம்சாது சங்கசேர்க்கை என்பவற்றால் கர்மபந்தயத்தைலிட்டோலித்து முக்திபெறலாம்.

## <u>துவைதம்:</u>

- மதத்தை பரப்பியவர் மத்வாசாரியார்ஆவார்.
- துளுவநாட்டில் உடுப்பிக்கு அருகில் அநந் தேசுவர கிராமத்தில் அவதரித்தார்.
- ஒன்பதாவது வயதிலேயே அச்சுதப்பிரகாசரின் சீடராகி துறிவியானார்.
- பிரம்ம சூத்திரம் கீதைதசோபநிஷத் முதலிய நூற்களுக்குது வைதபரமாக பாஷ்யம் இயற்றியுள்ளார்.
- 37 பெரிய கிரந்தங்கள் இயற்றியுள்ளார்.
- துவைதம்துவி என்றால் இரண்டு பிரபஞ்சமும்பரமாத்மாவும்,ஜீவாத்மாவும் வேறு

வேறானவைபரமாத்மாதனி, மற்றவை அதில்சேராதலை என்பதாம்.

- துவி என்றால் இரண்டு என்பது பொருளாகும் . இத்தத்துவத்தைத் தோற்று வித்தவர்ஸ்ரீமத்வாச்சாரியார் ஆவார்.

**மத்வர்:**

| | |
|---|---|
| மத்வரின்இயற்பெயர் | வாசுதேவர். |
| பிறந்தது | கர்நாடகாமாநிலத்தில்உடுப்பிக்கு அருகில் ‘ பாஜகா’என்ற சிற்றூரில்பிறந்தார். |
| துறவறம்மேற்கொண்டது | 8-வதுஅகவையிலேயே (8-வதுவயது) |
| துறவறம்மேற்கொண்ட பிறகு | புர்ணப்பிரக்ஞர் அவரதுபெயர் |

- உடல்பலத்திலும், மந்திரசக்தியிலும், சூட்சுமசெய்கைகளிலும்கைதேர்ந்தவராகக்கருதப்படுகிறார்.
- வாயதேவனின்அவதாரமாகக்கருதப்படுகிறார். ‘ ஆனந்ததீர்த்தர்’என்றும், ‘ முக்கியப்பிராணன்’என்றுஅறியப்படுகிறார்.
- பிரம்மசூத்திரம், உபநிடதங்கள், பகவத்கீதைஆகியநூல்களுக்குஉரைஎழுதியுள்ளார்.
- ரிக்வேதத்தில் 32 நூற்பக்கங்களுக்குஉரைஎழுதியுள்ளார்.

**துவைதகொள்கைகள்நான்கு:**

- கடவுள் ‘ நாராணன்’ஒருவர்தான்சுதந்திரர். மற்றஎல்லாஉலகப்பொருள்களும்சுதந்திரமற்றவை. அவரிடமிருந்துவேறுபட்டவை. அவரால்ஆட்டிப்படைக்கப்படுபவை
- சுதந்திரர்ஒருபிரிவாகவும்சுதந்திரமற்றதெல்லாம்ஒருபிரிவாகவும் எக்காலமும்இருந்தேதீரும்.
- பரமாத்மா, ஜீவாத்மா, ஜடஉலகம் இவை எவராலும் உண்டாக்கப்படாத நித்திய பொருள்கள் . ஜீவாத்மாக்களுக்கு ஜனனம், மரணமுண்டு. உலகம் ஒரு தோற்றமல்ல . உண்மையானது.

- சுதந்திரம் இறைவன் ஒருவனுக்கே உள்ளது . கடவுளும் உயிர்களும் எந்நிலையிலும் எக்காலத்தும் வேறானவர்களே . இறைவனும் இறைவியும் எல்லா உயிர்களுக்கும் அம்மையப்பர்பிரம்மா முதலிய தேவர்களும் ஜீவர்களே . அவர்களுக்கும் பிறப்பு , இறப்பு ஸ்தூலதேக முண்டு . கர்மம் தீர்ந்தால் மோட்சம் உண்டாகும்.

------*******-----*****----

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

பிரிவு : TNPSC Group VIIB & VIII தேர்வு

பாடம் : இந்து மதம்

பகுதி : பூஜை

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# பூஜை

- பூஜை ஆத்மார்த்தம் எனவும், பரார்த்தம் எனவும் இருவகைப்படும்.
- ஆத்மார்த்த பூஜை என்றால் பூஜிப்பவன் தனக்கும், தன் குடும்பத்திற்கும் நன்மை உண்டாவதன் பொருட்டுத் தன் வீட்டில் தன் சக்திக்கியன்றவாறு பூஜிப்பதாகும்.
- இலிங்கம், சாளக்கிராமம், பிம்பம், சக்கரம் முதலியவற்றை வைத்துப் பூஜிப்பர்.
- இதற்குள்ள விதிகள் ஒருவாறு ஆலய பூஜை விதிகளை ஒக்கும்.
- மந்திரம், யந்திரம், தந்திரம் இவற்றை இதன் அங்கங்களாகவும் கொள்வர்.
- மந்திரத்தோடு செய்து பதினாறு உபசாரங்களால் பூஜிப்பர்.
- குரு முகமாகத் தீக்கை பெற்றவர்களே இப்பூஜைக்கு உரியவர்கள் ஆவர்.
- பரார்த்த பூஜையென்பது ஆலயத்தில் இருக்கும் மூர்த்திகளுக்கு ஆகமமுறைப்படி ஆச்சாரியர்களைக் கொண்டு பூஜைசெய்வித்தல் ஆகும்.
- அது நித்தியம், நைமித்திகம், காமிகம் என மூன்று வகைப்படும்.
- நித்திய பூஜையென்பது நாள்தோறும் செய்யப்படும் பூஜையாகும்.
- நாள்தோறும் பகலில் நான்கு காலங்களும், இரவில் நான்கு காலங்களுமாக எட்டுக்கால பூசை செய்யப்படும் ஆலயங்கள் சில உள.
- பகலில் மூன்றும், இரவில் மூன்றுமாக ஆறுகால பூஜை நடக்கும் கோவில்களும், பகலில் இரண்டும், இரவில் இரண்டுமாக நான்குகால பூஜை நடக்கும் கோவில்களும், பகலில் ஒன்றும், இரவில் ஒன்றுமாக, இரண்டுகால பூஜை நடக்கும் கோவில்களும் பல உள்ளன.
- ஆலயங்களின் பொருள் வருவாய்க்கேற்ப பூஜை காலங்கள் நடந்து வருகின்றன.

## பஞ்ச சுத்தி

- பூஜை செய்பவர் உடல் சுத்தமும் உளச்சுத்தமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
- உடல் சுத்தத்திற்கும் நீராடுதல், தோய்த்துலர்ந்த ஆடைகட்டுதல், விபூதி, உருத்திராக்கம் அணிதல், நாமதாரணம், துளசிமணிமாலை அணிதல் முதலியன இன்றியமையாதவையாகும்.
- உளச்சுத்தத்திற்கு ஐம்புலனடக்கலும், தீக்கை பெறுதலும் அவசியமானவை.
- பூஜை முறைகளைக் காரிய காரணத்தோடு அறிந்திருத்தல் நலம்.
- இவ்விதச் சுத்திகளை பஞ்சசுத்தி எனக் கூறுவர்.
- பஞ்சசுத்தி என்பது
    1. ஆத்ம சுத்தி
    2. ஸ்தான சுத்தி
    3. திரவிய சுத்தி
    4. மந்திர சுத்தி
    5. இலிங்க சுத்தியென ஐந்து வகைப்படும்.

1. <u>ஆத்ம சுத்தி:</u>

- பூஜை செய்யும் ஆச்சாரியன் தனது உடம்பைத் திருக்கோவில் உள்ளிருக்கும் திருமேனிபோல சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
- ஆத்ம சுத்தியில் அந்தர் யாகமும், சமாதியும் அடங்கும்.

2. <u>ஸ்தான சுத்தி:</u>

- ❖ பூஜிக்கும் ஆலயமும், மூலமூர்த்தி இருக்கும் கர்ப்பக்கிரகமும், இதர மூர்த்திகள் வீற்றிருக்கும் இடங்களும் எப்பொழுதும் சுத்தமானதாயிருக்கச் செய்ய வேண்டும்.
- ❖ அர்க்கிய நீரைப் பூமியில் தெளித்து இடத்தைச் சுத்திகரிக்க வேண்டும்.

3. <u>திரவிய சுத்தி:</u>

- ❖ பூஜைக்குரிய பாத்திரங்களை நன்றாகக் கழுவி, சங்குநீர் முதலிய பூஜைக்குரிய பதார்த்தங்களில் அர்க்கிய நீரைத் தெளித்து சுத்தி செய்ய வேண்டும்.

4. <u>மந்திர சுத்தி:</u>

- ❖ பீஜாட்சர மந்திரத்தை சுஷீம்னை நாடியில் அடக்கி அந்தந்த மூர்த்திக்குரிய மூலமந்திரத்தைப் பத்துமுறை ஜபிக்கவேண்டும்.

5. <u>இலிங்க சுத்தி:</u>

- ❖ அபிடேக பாத்திரத்தில், நீர்நிரப்பி, கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களை அதில் ஆவாகனம் செய்து, இலிங்கத்தில் அபிடேகம் செய்யவேண்டும்.
- ❖ விக்கிரகங்களில் ஒட்டிக்கிடக்கும் மெழுக்கினைக் களைந்து சுத்த ஆடை கட்ட வேண்டும்.

“பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காக
பஞ்சவித பாசமறுப் பார்”

(சைவசமயநெறி)

“பஞ்சவித சுத்தி செய்து பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே”

## சோடசோபசாரங்கள்:

இது இறைவனுக்குரிய பூஜையில் செய்யப்படும் பதினாறு உபசாரங்களாகும்.

1. **ஆவாகனம்:**

- இறைவனை வரவழைத்து நேர்முகப்படுத்தி, விக்கிரகத்தில் சேர்ப்பதற்கு ஆவாகனம் என்று பெயர்.
- இது மூலாதாரத்திலுள்ள ஜீவசைதன்யத்தை எடுத்துச் சுஷீம்னை வழியாக மேலேற்றிக் கொண்டு வந்ததாகச் சங்கற்பம் செய்தல்.

2. **ஸ்தாபனம்:**

- இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருள வேண்டுமெனப் பிராத்தித்து பீடத்தில் உள்ள விக்கிரகத்தில் இறைவனை அமர்த்துதல்.

3. **சந்நிதானம்:**

- இது பூசிக்கப்படும் மூர்த்தி நமக்கு அனுக்கிரகம் செய்யும் முறையும், பூஜகன் அருள் பெறும் முறையுமாகும்.

4. **சந்நிரோதனம்:**

- இறைவா! அடியேனிடம் என்றும் கருணையோடு இருக்கவேண்டும் என வேண்டி, பூஜை முடிவுவரை சாந்நித்யம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுதலாம்.

5. **அவகுண்டனம்:**

- விக்கிரகத்தைச் சுற்றிக் கவசமந்திரத்தால் மூன்று அகழ் உண்டாக்கித் தடைகள் வராமல் அம்மந்திரத்தாலேயே அதனை மூடவேண்டும்.

6. <u>அபிடேகம்:</u>

- எண்ணெய், மாப்பொடி, நெல்லிமுள்ளி, மஞ்சள்பொடி, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், தயிர், தேன், கரும்பு, வாழைப்பழம், எலுமிச்சம் பழச்சாறு, இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், பத்ரோதகம், கும்போதகம் இவற்றை வரிசைப்படி அபிடேகம் செய்ய வேண்டும்.
- அபிடேகத்திற்குத் தேனு முத்திரை காட்டவேண்டும்.
- தேனு முத்திரை என்பது பசுவின் அகடு போன்ற முத்திரையாகும்.

7. <u>பாத்யம்:</u>

- சந்தனம், அறுகு, வெண்கடுகு, விலாமிச்சை இந்த நான்கு பொருள்களையும் பாத்திய நீரில் கலந்து பாதத்தில் விட வேண்டும்.

8. <u>ஆசமநீயம்:</u>

- நீரில் ஏலக்காய், கிராம்பு, பச்சைக் கற்பூரம், நாவற்பழம், ஜாதிக்காய், குங்குமப்பூ என்ற பொருள்களை இட்டுச் சம்கிதா மந்திரம் சொல்லி பாதத்தினடியில் வைக்க வேண்டும்.

9. <u>அர்க்கியம்:</u>

- இறைவனுக்கு மூலமந்திரம் கூறி எள், யவநெல், தார்ப்பைநுனி, பால், அரிசி, புஷ்பம், வெண்கடுகு முதலியவை கலந்த நீரால் அர்க்கியம் கொடுக்க வேண்டும்.

10. <u>மாலை சாத்தல்:</u>

❖ அழகிய புஷ்பங்களால் இறைவனை அலங்கரித்துக் கண்கள் குளிரக் கண்டுகளிக்க வேண்டும்.

"உன்னை அலங்கரித்து உன் அழகைப் பாராமல்
என்னை அலங்கரித்து இழந்தேன் மனோன்மணியே"

என்ற பாடல் இறைவனை அலங்கரித்து பார்ப்பதன் சிறப்பைக் கூறுகின்றது.

11. <u>தூபம்:</u>

❖ சந்நிதியில் சாம்பிராணிப் புகை புகைத்தல் தூபம் எனப்படும்.
❖ இது கிரியா சக்தியைக் குறிக்கும்.
❖ ஆணவ மலமான அஞ்ஞானத்தை கிரியா சக்தியால் அகற்றலாம் என்பது தத்துவம்.
❖ அகில், கீழாநெல்லி, சாம்பிராணி, குங்கிலியம் முதலியவை தூபப்பொருள்களாகும். தூபம் பாபங்களை அகற்றும்.

12. <u>தீபம்:</u>

❖ தீபம் ஆத்மாவின் மலத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுக்கிறது.
❖ தீபத்திற்குத் திரி, கற்பூரம், துணி, நூல், பஞ்சு இவைகளில் எதையாவது உபயோகிக்கலாம்.
❖ பசுவின் நெய் உபயோகிப்பது உத்தமம்.
❖ எண்ணெய் மத்திமம்.
❖ தீபத்தை ஏற்றி நிரீட்சணம் செய்து பூக்களால் அர்ச்சித்துத் தீப முத்திரை காட்டி, மணி அடித்து மந்திரங்கள் கூறிக் கிரீடம் முதல் பாதம் வரை காட்ட வேண்டும்.

13. <u>நைவேத்தியம்:</u>

- இதற்கு நெல்லரிசி, கோதுமை, முளை அரிசி இவை உத்தமம். வெள்ளை அரிசியைவிட சிவந்த நெல்லரிசி நிவேதனத்துக்கு மிக உத்தமம்.
- நெல், கல், உமி, ரோமம் இவை அரிசியில் கலந்திருக்கக்கூடாது.
- சுத்த அன்னம், பாயசம், பொங்கல் முதலிய சித்திரான்னங்களும் நிவேதனத்துக்கு உகந்தவையாகும்.
- ஆத்மாவின் குணமாகிய அகங்காரம், சங்கற்பம், கோபம், மோகம் இவைகளை அன்னமாக வேகவைத்து இறைவனுக்குச் சமர்ப்பிப்பதை இது குறிக்கிறது.

14. <u>பாநீயம்:</u>

- வாசனையுள்ள தீர்த்தத்தை ஈசுவரப் பிரீதிக்காகச் சமர்ப்பித்தலாம்.

15. <u>ஜபசமர்ப்பணம்:</u>

- மூலமந்திரத்தை நூற்றெட்டு முறை ஜபித்து அதை ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
- ஜபம், பூஜை, ஹோமம் முதலிய எல்லாப் புண்ணியச் செயல்களையும் அர்ச்சகர் ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
- பகவான் அதனை ஏற்றுக்கொண்டு பத்தி, முத்திகளை நமக்கு அருளுகிறான்.

16. <u>தீப ஆராதனை:</u>

- பலவித தீபங்களை ஈசுவர சந்நிதியில் காட்டிச் செய்யும் ஆராதனைக்குத் தீபாராதனை என்று பெயர்.
- தீபாராதனை வேளையில் உண்டாகும் மேலதாளங்களும், மணி ஒலிகளும், சங்கநாதங்களும் அரக்கர், பிசாசர், பிரமராட்சசர் முதலியோரை வெகுதொலைவில் ஓட்டுகின்றன.
- தீபாராதனை பதினாறு வகைப்படும் அவையாவன

1. தூபம்
2. புஷ்பதீபம்
3. நாகதீபம்
4. விருஷதீபம்
5. மேருதீபம்
6. புருஷாமிருகதீபம்
7. கும்பதீபம்
8. ஆராத்திரிகம்
9. நட்சத்திரதீபம்
10. கற்பூரதீபம்
11. பஸ்மோபசாரம்
12. கண்ணாடி காட்டல்
13. குடை பிடித்தல்
14. கொடிகட்டல்
15. சாமரம் வீசுதல்
16. விசிறி வீசுதல்

- <u>தீபாலங்காரங்களின் தத்துவம்</u> ஊர்வன, பறப்பன, விலங்குகள் எனும் முறையில் விரிந்து, பஞ்சபூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கி, இறுதியில் கற்பூரதீபம் போல் எரிந்து எவ்வித மிச்சமுமின்றி இறைவனோடு ஒன்றி விடுதல் ஆகும்.

- குண்டலினி ஆறு ஆதாரங்களின் வழியாக மேலேறிச் செல்லும் பொழுது அந்தந்த ஆதாரங்களில் உண்டாகும் அனுபவங்கள் ஒளி, ஓசை, தீபம், ருசி, தரிசனம் முதலியவற்றைத் தீபம், வாத்தியம், அலங்காரம், நைவேத்யம், மூர்த்தி என்று விளக்கப்பட்டுள்ளது.
- அர்ச்சகர்கள் ஞான ஒளியால் இறைவனைக் காட்ட ஜீவன் இறைவனைக் கண்டுகளிக்கிறான்.
- மேற்கூறியதிலிருந்து ஆத்மார்த்தமாகவும், பரார்த்தமாகவும் பூஜை செய்ய வேண்டிய முறைகளும் அவற்றின் தத்துவங்களும் விளக்கப்பட்டுள்ளன.

------***-----***-----